

தென்றல்
தொடாத
மலர்
எஸ்.உஷாராணி

## உள்ளே...


1. தென்றல் தொடாத மலர் 5

2. இனி அவள்தான் 123




# தென்றல் தொடாத மலர்

## 1

சுவேகா அப்பத்தான் ஆபீசில் இருந்து வந்தாள். அவள் மாமியார் மரகதம் திட்டினார். ''நீ என்ன காலையில் போட்டது போட்டபடி போறே... என்னால் வேலை பார்க்க முடியுதா...? இனி எல்லாம் முடித்து விட்டுப் போ,'' என்றார்.

சுவேகாவுக்கு இன்று கால் எல்லாம் வலித்தது. சைட்டுக்குப் போய்விட்டு வந்தாள். வந்தவளுக்கு ஒரு காபி கிடையாது. வந்ததும் வேலை காத்துக் கொண்டிருக்கும். ஆயாசமாக வந்தது. அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வருவோமா...? மனம் நினைத்தது.

சுவேகாவுக்குக் கல்யாணமாகி ஆறு மாதம் ஆகிறது. அவள் கணவன் நித்தியன் ஒரு சாப்ட்வேர் இஞ்சினியர்

அவளுக்கு இரண்டு தங்கை, ஒரு தம்பி. நித்தியன்தான் குடும்பத்தில் மூத்த பிள்ளை.

அவன் அப்பா ராஜரத்தினம், ஒரு கம்பெனியில் கிளார்க்காக இருக்கிறார். பிள்ளைகளைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்து விட்டார்.

மூத்தவள் சாதனா... இந்த ஆண்டு காலேஜில் இறுதி ஆண்டு. சின்னவள் ரேவதி காலேஜில் முதல் வருடம். தம்பி அருண் ப்ளஸ் டூ என்று பெரிய குடும்பம்தான்.

மரகதம் மீண்டும் குரல் கொடுத்தார். "என்னடி உட்கார்ந்திருக்கே? இரவு டிபனுக்கு சப்பாத்தி பண்ணி காய் கூட்டு ஒன்று பண்ணி விடு," என்றார்.

சுலேகா எழுந்தாள். டிரஸ் மாற்றிக் கொண்டு முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள். காபி கலந்து வந்து நாத்தனார், மச்சினன் எல்லோருக்கும் கொடுத்துவிட்டு, கோதுமை மாவைப் பிசைந்து வைத்துவிட்டு, பாத்திரம் தேய்த்தாள்.

பிறகு காய்களை நறுக்கிக் கூட்டுப் பண்ணினாள். மாவைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டித் தேய்த்தாள். இதை உட்கார்ந்து கொண்டு தேய்த்துக் கொடுத்தால் என்ன. மனதில் நினைப்பு ஓடியது. ஆனால் வெளியில் சொல்ல முடியாது.

வேகமாகத் தேய்த்துத் தோசைக் கல்லில் போட்டு எடுத்து ஹாட்பேகில் வைத்தாள். அவளுக்குப் பசித்தது. பசித்தவுடன் சாப்பிட முடியாது. எல்லோரும் சாப்பிட வேண்டும். பிறகுதான் சாப்பிட முடியும். ஒரு டம்ளர் தண்ணீரை மொண்டு குடித்துவிட்டு, மீண்டும் சப்பாத்தியைப் போட்டாள்.



எல்லோரும் ஹாலில் டி.வி. பார்த்தனர். கிரீச் சத்தம் கேட்டது. நித்தியனும் வந்துவிட்டான்.

முகத்தில் வழிந்த வியர்வையை முந்தானையில் துடைத்துக் கொண்டாள். எல்லாம் முடிந்ததும், எல்லாவற்றையும் டேபிள் மேல் எடுத்து வைத்தாள். அவர்களுக்குத் தட்டுக் கழுவி வைத்துவிட்டு, மாமியாரிடம் சென்று,

"சாப்பிட வாங்கத்தை, வாங்க மாமா..." என்றாள்.

அவர்கள் வந்தனர். எல்லோருக்கும் எடுத்து வைத்தாள். அவர்கள் சாப்பிடும்வரை ஒரு ஓரமாக நின்றாள். யாரும் அவளைச் சாப்பிடச் சொல்லவில்லை. அவர்கள் சாப்பிட்டது போக மீதி இரண்டு சப்பாத்தி இருந்தது.

அவளுக்கு இருக்கும் பசிக்கு இரண்டு சப்பாத்தி போதாது. அதைச் சாப்பிட்டால் உடனே படுக்கணும் போல் வரும். வேலையை முடித்துவிட்டுச் சாப்பிடுவோம் என்று அதைத் தட்டில் எடுத்து வைத்துவிட்டு காய்க் கூட்டைப் பார்த்தாள். கிண்ணத்தில் ஒட்டியிருந்தது. பேசாமல் எடுத்து சிங்க்கில் போட்டுவிட்டு, மறுபடியும் எல்லாப் பாத்திரத்தையும் தேய்த்தாள். அடுப்பைக் கழுவித் துடைத்தாள். பாலைக் காய்ச்சி அனைவருக்கும் கொடுத்தாள்.

நித்தியனுக்கு மட்டும் அவன் அறையில் வைக்க வேண்டும். வேலையை முடித்துவிட்டுப் பாலை அவன் அறைக்கு எடுத்துச் சென்றாள். அவன் ஒரு புக்கைப் படித்துக் கொண்டிருந்தான்.

டேபிள் மேல் வைத்துவிட்டு வெளியே வந்தாள். அவள் அறைக்குப் போய் அந்தச் சப்பாத்தியைக்

கண்ணீருடன் விழுங்கினாள், சர்க்கரையைத் தொட்டு. அதை அப்படியே வைத்துவிட்டு, அதே இடத்தில் படுத்துத் தூங்கிப் போனாள்.

காலை ஐந்து மணிக்கு எழுந்தாள். குளித்துவிட்டுக் கீழே போனாள். ஃபிரிஜ்ஜில் இருந்த காய்களை எடுத்து வெளியே வைத்தாள். ஒரு அடுப்பில் சாதமும், ஒரு அடுப்பில் பருப்பும் வைத்தாள்.

வேகமாகக் காய்களை நறுக்கிப் பொரியல் செய்து, சாம்பார் வைத்துவிட்டு இட்லி ஊத்தினாள். அதற்கு சட்னி, சாம்பார் வைத்தாள்.

காபி கலந்து எல்லோருக்கும் கொடுத்தாள். சாதனா, ரேவதியை எழுப்பிக் குளிக்கச் சொன்னாள். அவர்களுக்கு லஞ்ச் கட்டினாள். சாப்பிட டிபனை டேபிள் மேல் எடுத்து வைத்தாள். இவளுக்கு நேரம் ஆகிவிட்டது.

சாதனாவும், ரேவதியும் தலை பின்னிவிடச் சொல்லி வந்தனர். ''இன்றைக்கு ஒரு நாள் அம்மாகிட்டே பின்னிக்குங்க. எனக்கு நேரம் ஆகிவிட்டது.'' என்றாள்.

மரகதம் அதற்குள், ''என்னடி நேரம் ஆகிவிட்டது? சீக்கிரம் எழுந்திருக்கணும். உன் நாத்தனார் புத்தியைக் காட்டி விட்டாயே... தலை பின்னிவிட எவ்வளவு நேரம் ஆகும்? பின்னிவிட்டுப் போ,'' என்றார்.

இதையெல்லாம் நித்தியன் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். சுவேகா சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேகமாக பஸ் பிடிக்கப் போனாள்.

காலை வெயில் சுள்ளென்று அவள் முகத்தில் அடித்தது. வியர்வை வழிந்தது. இப்படி ஓடி வந்தும் ஆபீசுக்கு நேரம் ஆகிவிட்டது.



அவள் வந்ததும் எம்.டி. வந்து பார்க்கச் சொன்னார், என்று ஆபீஸ் பாய் வந்து சொன்னான். இவளுக்கு உதறல் எடுத்தது. வேகமாக எம்.டி.யைப் பார்க்கப் போனாள்.

அவர் அவள் மீது எரிந்து விழுந்தார். ''இது ஆபீஸ் வரும் நேரமா? இது என்ன, உன் மாமியார் வீடா, உன் இஷ்டத்துக்கு வர. எவ்வளவு வேலை இருக்கு என்று நேற்றே சொன்னேன்.

''அந்த வைசாலி கம்பெனியின் பைல் ரெடியாகி விட்டதா...?''

''இதோ சார்...'' என்று அவள் கேபினுக்கு வந்தாள். அன்று முழுவதும் வேலை சரியாக இருந்தது. சைட்டுக்குப் போய்விட்டு வரும் வழியில் சாப்பிடலாம் என்று நினைத்தாள். காலையிலும் சாப்பிடவில்லை.

ஆட்டோவை விட்டு இறங்கி, ஒரு ஹோட்டலுக்குள் போனாள். நல்ல பெரிய ஹோட்டல்தான். ஒரு சாப்பாட்டு டோக்கன் வாங்கிக் கொண்டு, ஓரமாக இருந்த இடத்தைப் பார்த்து அமர்ந்தாள்.

சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டாள். எதிர் பெஞ்சில் நித்தியனும், ஒரு பெண்ணும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். நித்தியனும் அவளைப் பார்த்து விட்டான். சுவேகாவுக்குச் சர்வமும் ஆடியது. அவளால் உட்கார முடியவில்லை. சட்டென எழுந்து வெளியே போனாள். அவளுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. ஒரு ஆட்டோ பிடித்து ஆபீஸ் வந்து சேர்ந்தாள்.

ஆபீசில் வேலையே ஓடவில்லை அவளுக்கு. மனம் படபடவென அடித்துக் கொண்டது. இருந்திருந்து அந்த ஹோட்டலுக்கா போக வேண்டும். பசிக்குக் கூடச் சாப்பிட முடியவில்லையே... கண் கலங்கியது.

மாலை வீட்டுக்கு வந்தாள். வேலைகளை முடித்து விட்டு இரண்டு இட்லியை எடுத்துக் கொண்டு அவள் அறைக்குப் போனாள். அங்கு மூச்சு முட்டுவது போல் இருந்தது. கதவைத் திறந்து கொண்டு பால்கனிக்கு வந்தாள். இட்லியோடு, வேப்ப மரக் காற்று முகத்தில் மோதியது. இட்லியைக் கீழே வைத்துவிட்டு, சுவரில் சாய்ந்து அமர்ந்தாள். துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. எவ்வளவு நேரம் அழுதாளோ... அவளுக்கே தெரியாது. அப்படியே தூங்கிப் போனாள். அந்த இட்லியையும் சாப்பிடாமல்.

நித்தியன் அந்த ஹோட்டலில், அந்த நேரத்தில் சுவேகாவை எதிர்பார்க்கவில்லை. இரவு ஒரு மணிக்கு மேல் வந்தான். வந்தவன் பால்கனியில் லைட் எரிவதைப் பார்த்துவிட்டு ஆஃப் பண்ண வந்தான். அங்கு இட்லியோடு சுவேகா தூங்கிக் கொண்டிருந்தாள்.

கன்னத்தில் கண்ணீரின் கோடு தெரிந்தது. ஒரு நிமிடம் அப்படியே நின்றான். பின் போய்விட்டான்.

காலையில் எழுந்து எப்பவும் போல் வேலை பார்த்தாள். ''அண்ணி, இந்தக் கணக்கு எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் சொல்லிக் கொடுங்களேன்,'' என்று அருண் வந்து நின்றான். அவனைப் பார்த்துவிட்டு, மீண்டும் சமையலில் ஈடுபட்டாள். அவள் மனம் ஒரு நிலையில் இல்லை.



சாம்பாரில் உப்புப் போட மறந்து விட்டாள். மரகதம் சாப்பிட்டு விட்டு அவளைப் பிடித்துக் கொண்டார். ''என்னடி சமைக்கிறே. சமைக்கும்போது மனம் முழுவதும் சமையலில் இருக்கணும். இராத்திரி என்ன பண்ணினோம் என்ற நினைப்பில் இருந்தால் இப்படித்தான். எங்களுக்கென்ன, சூடு சொரணை இல்லையா... எதுக்கு இவங்க உப்புப் போட்டுத் திங்கணும்?'' என்று அவளைப் பாடாய்ப் படுத்தி விட்டார்.

''தெரியாமல் செய்து விட்டேன் அத்தை. என்னை மன்னித்து விடுங்க,'' என்றாள்.

''தெரியாமல் எப்படிச் செய்வே, வேண்டும் என்று தான் செய்திருப்பே.''

நித்தியன் எப்பவுமே இரவு டிபனுக்கு வீட்டுக்கு வர மாட்டான். இரவு எப்போ வருவான் என்று அவளுக்கே தெரியாது.

சுவேகாவுக்குத் தூக்கம் வரவில்லை. நெஞ்சை யடைத்தது துக்கம். நினைக்கக் கூடாது என்று நினைத்தாள். மறக்கக்கூடிய விஷயமா இது? நினைவுகள் அவள் அனுமதியின்றியே ஒன்றோடு ஒன்று அலைமோதின.

## 2

சுவேகா படித்து முடித்துவிட்டு வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். வீட்டில் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்தனர். சுவேகாவுக்கு ஒரு தங்கை. அவளும் படித்துக் கொண்டிருக்கா.

நிறைய வரன்கள் வந்தன. ஒரு மாப்பிள்ளை, நல்ல வசதியான இடம். ஒரே பையன். பெண் பிடித்திருக்குது என்றனர்.

பையன் அப்பாகூட பிசினஸ் பண்றான் என்றனர்.

கவேகா அப்பா, அம்மாவுக்கும் பிடித்து விட்டது. நமக்குத் தகுந்த இடம். எல்லாம் பேசி முடித்துத் தேதி குறித்து விட்டனர்.

கவேகா பிரண்டோட அண்ணன், இந்த மாப்பிள்ளை ஸ்ரீதருக்கு பிரண்டாம். அவன் தன் தங்கையிடம், அவன் ஒரு பொறுப்பில்லாதவன். குடிப்பான். நிறையக் கெட்ட பழக்கங்கள் இருக்கு என்று சொல்லவும், கவேகா பிரண்ட் கவிதா, கவேகாவுக்கு விசயத்தைச் சொல்லி விட்டாள்.

கவேகா தன் அப்பாவிடம் எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம். மாப்பிள்ளை குடிகாரனாம். கல்யாணத்தை நிறுத்தி விடுங்கள் என்றாள்.

அவர்கள் தயங்கினார்கள். இந்தக் காலத்தில் குடிக்காமல் இருந்தால்தான் அதிசயம். யார் குடிக்காமல் இருக்காங்க. இவ்வளவு பேசி முடித்து விட்டுக் கல்யாணத்தை எப்படி நிறுத்துவது என்றனர்.

கவேகா எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. இவள் நேராக மாப்பிள்ளை வீட்டுக்குப் போனாள். இவளைப் பார்த்த அவர்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"ஸ்ரீதர்! வாடா இங்கே. யார் வந்திருக்காங்க என்று பார்," என்றாள் அவன் அம்மா.

ஸ்ரீதர் கீழே இறங்கி வந்தவன் அவளைப் பார்த்துத் திகைத்தான். இவள் எங்கே இங்கே... சந்தோஷத்தில் அவன் திக்குமுக்காடிப் போனான்.

"வா... கவேகா. என்ன இவ்வளவு தூரம். எனக்கு ஒரு போன் பண்ணியிருந்தால், நானே வந்திருப்பேனே..." என்றான்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

"உட்கார் கவி. ஏன்... நிற்கிறே... அம்மா, சாப்பிட ஏதாவது கொண்டு வாங்கம்மா, என்ன ஸ்வீட் இருக்கு வீட்டில்? உனக்கு என்ன பிடிக்கும் கவி?" என்றான் ஆவலாக.

"நீ மேலே கூட்டிப் போய்ப் பேசிக்கிட்டிருடா... நான் மேலே அனுப்புறேன். உங்க இரண்டு பேருக்கும்."

அதற்குள் கவேகா மறுத்தாள். "எனக்குச் சாப்பிட எதுவும் வேணாம். நா... நான் உங்களுடன் பேச வந்தேன்," என்றாள் தடுமாற்றமாக.

"அதான் வா, நாம் மேலே போகலாம்," என்றான்.

"இல்லை. இ... இங்கு எல்லார் முன்னிலையிலும் தான்" என்றாள்.

"சரி. அப்பச் சொல்லு. முதலில் நீ உட்கார்ந்து கொண்டு சொல்லு. இது என்ன ஸ்கூலா... இல்லை, காலேஜா நின்று கொண்டே பேச?" என்று அமரச் சொன்னான்.

அவனும் அந்த சோபாவில் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். அவள் சற்று ஒதுங்கி உட்கார்ந்தாள்.

இதைக் கவனித்தான் ஸ்ரீதர். "என்ன சொல்லணும் கவி?" என்றான்.

அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு மெதுவாக, "எ... எ... ன...க்கு... உங்களைப்

பிடி...க்க...வில்லை. அதனால் என...க்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லை. கல்யாணத்தை நிறுத்தி விடுங்க,'' என்றாள்.

அனைவர் முகத்திலும் அதிர்ச்சி. ஸ்ரீதரோ கேட்கவோ வேணாம். அவனுக்கும் வியர்த்து விட்டது. அவனுக்கும் நிறைய இடம் வந்தன. இவனுக்குத்தான் யாரையும் பிடிக்கவில்லை.

இவளை போட்டோவில் பார்த்த மாத்திரத்திலேயே சொக்கி விட்டான். எனக்கு இந்தப் பெண் பிடித்திருக்குது. இதைப் பேசி முடிங்க என்றான்.

இவன் அப்பா, அம்மாவும் பேசி முடித்தனர். தேதி குறித்து, மண்டபம் அட்வான்ஸ் கொடுத்து மேளம், சமையல் என்று எல்லாம் கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில், இப்ப இவள் வந்து, வேண்டாம் என்கிறாள்.

''ஏன்...? என்ன காரணம் என்று நான் தெரிஞ்சுக்கலாமா...?'' என்றான்.

எப்படிச் சொல்வது என்று, ''எனக்குப் பிடிக்கவில்லை. அதான்.''

''அதைத்தான் ஏன்... என்கிறேன்.''

சொல்லக் கூடாது என்று நினைத்தாள், சொல்லாமல் விட மாட்டான் போல் இருக்கே. வாங்கிக் கொள்ளட்டும் என்று நினைக்கும்போதே... ''நீ யாரையாவது விரும்புறியா...?'' என்றான்.

இல்லை என்றாள் அவசரமாக.

''பிறகு ஏன்...? உங்கப்பா, அம்மா, ஏதாவது சொன்னாங்களோ...? இல்லை, வீட்டில் ஏதாவது பிரச்னையா...? ஏதுவா இருந்தாலும் சொல் கவி. பேசி முடிவு பண்ணலாம். அதற்கு ஏன் கல்யாணத்தை நிறுத்தணும்?'' என்றான் நிதானமாக.



''இல்லை. எனக்கு உங்களைப் பிடிக்கவில்லை. நீங்க ஒரு குடிகாரர். பழக்க வழக்கம் சரியில்லை. அதான்...'' என்றாள்.

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் அம்மாவும் அப்பாவும் அதிர்ந்தனர். இவளுக்கு எப்படித் தெரிந்தது என்று.

ஸ்ரீதர் அப்பா பேசினார். ''இதோ பாரும்மா. நீ நினைப்பது போல் இல்லை. எங்கள் பையன்...''

''போதும்,'' என்று ஸ்ரீதர் கையை உயர்த்தினான்.

''சரி. இனி இந்தக் கல்யாணம் நடக்காது. நீ போகலாம்,'' என்றான்.

ஸ்ரீதர் என்றாள் அவன் அம்மா. இவள் சொல்வதை நம்பி, நாம் முடிவெடுக்கக் கூடாது. அவள் அப்பாவிடம் பேசுவோம் என்றாள்.

அவன் வேண்டாம் என்றான் - ஒற்றைச் சொல்லாக. அவளிடம் பேச முயன்றனர். ''இந்தக் கல்யாணம் நடந்தால், நான் இறந்து விடுவேன். ஒரு குடிகாரனோடும், ஒழுக்கம் கெட்டவனோடும் என்னால் வாழ முடியாது!'' என்றாள் முடிவாக.

அவர்கள் சரிம்மா, நீ போ என்றனர். ஸ்ரீதர் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்து விட்டன. அவன் விருட்டென்று மாடிக்குப் போய்விட்டான். இவளுக்கு அவன் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது.

வீட்டுக்கு வந்ததும், அவளுக்குப் பயம் அடங்கவில்லை. அவர்கள் அப்பாவிடம் என்ன சொல்வார்களோ... அப்பா என்ன முடிவெடுப்பாரோ... என்று பயந்தாள்.

அவள் நினைத்த மாதிரியே கல்யாணம் நின்று விட்டது. அவன் என்ன சொன்னானோ தெரியவில்லை. இவள்தான் வீட்டுக்கு வந்து சொன்னாள் என்று காட்டிக் கொடுத்து விடுவானோ... என்று நடுங்கினாள்.

அவள் அப்பா சிவசங்கரன் எதுவும் பேசவில்லை.

வேற இடம் பார்த்துக் கொள்ளலாம் என்றார். அம்மாவுக்கு இவள் மேல் சந்தேகமாக இருந்தது. இவள் எதுவும் சொல்லியிருப்பாளோ என்று மாப்பிள்ளை வீட்டாரிடம் கேட்டனர். ஏன்... என்று. அவர்கள் என்ன சொல்ல முடியும்.

பையன் வேண்டாம் என்கிறான் என்றனர். தேதி குறிக்கும் வரை என்ன செய்தீங்க. இப்படிக் கல்யாணம் நின்றால், நாளை என் பெண்ணுக்கு எப்படிக் கல்யாணம் நடக்கும் என்றனர்.

ஸ்ரீதர் வேகமாக எழுந்தான். அவன் அப்பா, அவன் கையைப் பிடித்துக் கொண்டார். ''வேண்டாம். விட்ரு. இது பொண்ணோட வாழ்க்கை. அது பாதிக்கக் கூடாது!'' என்றார்.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. ''நானாப்பா வேண்டாம் என்று சொன்னேன். அவள் வீட்டுக்கும் தெரியாமல் வந்து பேசியிருக்கா. எத்தனை தைரியம் அவளுக்கு. அவளைச் சும்மா விடக்கூடாது. அவள் அப்பாவிடம்



உண்மையைச் சொல்லி, அவளை என்ன செய்கிறேன் என்று பார்!'' என்றான் கோபமாக.

''கல்யாணம் நின்றது, நின்று விட்டது. இனிப் பேசிப் பயன் இல்லை. உனக்குனு ஒருத்தி பிறக்காமலா இருப்பாள். நீ அவசரப்படாதே!'' என்றார்.

ஸ்ரீதர் கோபத்தை அடக்கிக் கொண்டு ஒரு சபதம் எடுத்தான். உன்னை என்ன செய்கிறேன் பார் என்று. ''ஏன்டா இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை என்று நீ துடிக்கலே...''

## 3

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. எப்படி என் வாழ்க்கை இருக்கணும் என்று ஆசைப்பட்டேன். இப்படியாகி விட்டதே... அவன் கொடுத்த சாபமா... 'என்னை இப்படி அவமானப்படுத்தி விட்டாளே...' என்று ஒரு ஆம்பளைக்கு எப்படியிருக்கும். தனக்குப் பேசி முடித்த பெண் தன்னை அவமானப் படுத்திவிட்டாளே... என்று எத்தனை துடித்திருப்பான்.

அவன் என்னை விரும்பி வந்தான். சும்மாவா பெரியவர்கள் சொன்னார்கள். நீ விரும்புவதைவிட உன்னை விரும்புபவனையே... கல்யாணம் செய்து கொள். உன் வாழ்க்கை சிறக்கும் என்று. நான் விரும்பி ஆசைப்பட்டு, இவனைத் தேர்ந்தெடுத்தேன். அழுகையை அவளால் அடக்க முடியவில்லை.

போட்டோவில் இவனைப் பார்த்ததுமே பிடித்து விட்டது. எத்தனை உயரம். எத்தனை வலிமையான கைகள். ஆண்மை அவன் முகத்தில் ததும்பியது. அவன்

புன்னகை அவளை மயக்கியது. அந்தப் பல் வரிசையும் அலை அலையான சிகையும், அகலமான நெற்றியும், கூர் நாசியும், கறுத்த அடர்ந்த, அளவான மீசையும், அழுத்த மான உதடும் அவளைக் கனவுலகிற்கு இழுத்துச் சென்றன.

வசதி இவங்களவிற்கு இல்லையென்றாலும், ஓரளவு வசதிதான். சொந்த வீடு, ஒரு கார். ஆனால் பெரிய குடும்பம். பேசி முடித்தனர். இவன்தான் வீட்டில் பெரிய பிள்ளை.

அவள் பிரண்ட்ஸ் எல்லாம் போட்டோவைப் பார்த்து அசந்து விட்டனர். ''எத்தனை கம்பீரம், அழகு. நீ குடுத்து வைத்தவள்டி. நீ இத்தனை ஒல்லியாக இருக்கே. இவர் இத்தனை உறுதியாக இருக்கார். பார்த்துடி, நீ தாங்கு வாயா...'' என்று கேலி செய்தனர்.

சுவேகா முகம் சிவந்தாள். இப்பவே அவன் கைக்குள் இருப்பது போல.

எல்லாம் பேசி முடித்துக் கல்யாணமும் நல்லபடியாக நடந்தது. சுவேகா சந்தோஷத்தின் எல்லையில் இருந் தாள். வந்தவர்கள் அனைவரும் ஜோடிப் பொருத்தம் பிரமாதம் என்றனர்.

சுவேகா பூரித்துப் போனாள். அவளைப் பெற்றவர் களும் இது நல்லதுக்குத்தான். அந்த இடம் அமையாமல் போனது இவ்வளவு நல்ல மாப்பிள்ளை கிடைக்கத்தான் என்றனர் பெருமையுடன்.

மாப்பிள்ளையின் முகத்தைப் பார்த்தாள். கருங்கல் சிலை போல் இருந்தது. முகத்தில் அத்தனை இறுக்கம். எந்த ஒரு உணர்ச்சியும் இன்றித் துணி கொண்டு



துடைத்தாற்போல் இருந்தது. மனம் துணுக்கென்றது அவளுக்கு.

இவனுக்குக் கல்யாணப் பயம் வந்திருக்குமோ, ஆள் தான் வாட்டசாட்டமாக இருக்கிறான். மனம் இத்தனை மென்மையானதா... இப்படிப் பயப்படுகிறான். நான் கூடத் தைரியமாக, எத்தனை சந்தோஷமாக இருக்கிறேன் என்று மனதுக்குள் சிரித்தாள்.

இரவு இதைக் கேட்டுக் கேலி பண்ண வேண்டும். என்னைப் பார்த்து எதுக்கு பயம் உங்களுக்கு என்று நினைத்ததும் அவள் முகம் சிவந்தது. அவள் சித்தி பெண் கேலி பண்ணினாள்.

என்னடி இப்படி முகம் சிவக்குது. மாப்பிள்ளையை நினைத்தா... என்று இடுப்பில் கிள்ளினாள்.

ஏய்... கூசுதடி... எடு கையை.

இது மாதிரி மாப்பிள்ளையிடம் சொல்வாயா. கண்ணைச் சிமிட்டினாள். அதற்குள் அவன் ஃபிரண்ட்ஸ்கள் வரவே, அவர்களை அறிமுகப்படுத்தினான். அவளும் புன்னகை யுடன், தலையசைத்தாள்.

நித்தியன் அவள் சிவந்த முகத்தைப் பார்த்தான். அவன் பார்ப்பதை உணர்ந்து மீண்டும் சிவந்தாள். நாம பேசியதை இவன் கவனித்திருப்பானோ... என்று முகத்தைத் துடைப்பது போல் மறைத்துக் கொண்டாள்.

நித்தியனுக்கும் நிறைய ஃபிரண்ட்ஸ்கள். அவனை எல்லோரும் கேலி பண்ணினர். ஒரு சின்னச் சிரிப்பைத் தான் பதிலாகத் தந்தான். முகம் தீவிரமாக இருந்தது.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு ஃபிரண்ட்ஸ்களோட உட்கார்ந்து அரட்டை அடிக்க ஆரம்பித்தான். அவனின்

கலகலப்பான பேச்சு, சிரிப்பு, மனதைக் கொள்ளை யடித்தது. ஜன்னலில் இருந்து கவனித்துக் கொண் டிருந்தவள் சிறிது நேரத்திலேயே... உறங்கிப் போனாள்.

மண்டபத்திலேயே... அறைகள் ஏற்பாடு பண்ணி யிருந்தார்கள். ஒரு அறையில்தான் சுவேகா தூங்கினாள். அவளின் மனதில் ஏக்கம் இருந்தது. என்னிடம் கூட இருந்து பேசக்கூடாதா...? என்ன ஃபிரண்ட்ஸ்... அவள் மனச்சாட்சி கேட்டது. அதான் இரவு முழுக்க, ஏன்... காலம் முழுக்க உன்னிடம் தானே பேசப் போகிறான் என்றது. சீ... விவஸ்தை கெட்ட மனசு என்று திட்டினாள்.

மாலை வந்து அவள் சித்தி பெண்ணும், இவள் தங்கையும் வந்து எழுப்பினார்கள். என்னடி இப்படி பகலிலேயே... தூக்கம். இரவு இனித் தூங்கவே முடியாது என்று இப்பவே தூங்கிக்கலாம் என்று முடிவு பண்ணி னியோ...? எழுந்திரு. மாப்பிள்ளை தனியாக உட்கார்ந் திருக்கார். போய்க் காபி கொடுடி. நீ கொடுத்தால்தான் குடிப்பாராம் என்று விரதம் இருக்கார். தேவியைப் பார்க் காமல் இருக்க முடியவில்லையாம் என்றனர். இதைக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் நித்தியன்.

இவர்களுக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. சுவேகா தான் ஒரேயடியாக வெட்கப்பட்டாள். தலையைக் குனிந்து கொண்டாள். அவள் குனிந்த தலையில் பார்வையைப் பதித்தான்.

உணர்ச்சியற்ற பார்வை ஒன்றை அவள் மீது செலுத்தி விட்டுத் திரும்பினான்.



நித்தியன் ஆபீசில் இருந்து நிறையப் பேர் வந்திருந் தனர். ஆண்களும் பெண்களுமாக. நித்தியனிடம் நீ லக்கிமேன், இத்தனை அழகான பெண் கிடைக்க என்றனர்.

''அப்ப நான் அழகு இல்லையா...?'' என்றான் சிரித்துக் கொண்டே... ஒரு பெண், ''நீங்க அழகு தான். நாங்கள் எத்தனையோ பேர் தூண்டில் போட்டுப் பார்த்தோம். எந்த வலைக்கும் சிக்கவில்லை. இப்போ... இந்தத் தங்க மானிடம் சிக்கியிருக்கீங்க. மானைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மிரண்டு விழிக்குது.

''உங்க வேகம், அவசரம், பரபரப்பு, கரெக்டான டைம், இவ்வளவு நேரந்தான். இப்படித்தான் இருக்கணும். எல்லாம் வேலையில் மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். இவளிடம் வேண்டாம்!'' என்று சிரித்தாள்.

நித்தியன் கலகலவென நகைத்தான். சுவேகா ஆச்சர்யமாகப் பார்த்தாள். இப்படிக்கூடக் கவர்ச்சியாக ஒரு ஆணால் சிரிக்க முடியுமா...?

நித்தியன், ''ஆபீசில் என்னிடம் கேட்க முடியாத கேள்வி எல்லாம் இப்போ கேலி என்ற பேரில் கேட்டு விட்டீங்க, ரொம்ப தேங்க்ஸ்!'' என்றான்.

ஒரு பெண், ''எங்கே சார் ஹனிமூன்?'' என்றாள். அதற்கு ஒருவன் இரவு தானே முடிவு பண்ணணும், தேவியார் உத்தரவு கேட்டு.'' எல்லோரும் ஓ... வென்று சிரித் தனர்.

''இதுவரை இருவரும் இதைப்பற்றிப் பேசாமலா... இருந்திருப்பார்கள். இதை எல்லாம் பெண் பார்த்ததுமே முடிவு பண்ணியிருப்பார்கள். இல்லையா மேடம்? என்ன,

பேசவே மாட்டேங்கிறீங்க. சாரிடம் மட்டுந்தான் பேசணுமா...?'' என்றனர்.

அவள் நித்தியன் முகத்தைப் பார்த்தாள். அவன் புன்னகையுடன் இருந்தான்.

''ஏன் மேடம் நான் கேட்ட கேள்விக்கு, சார் முகத்தைப் பார்க்கிறீங்க. அவர் என்னைக் கேட்டுத்தான் பேசணும் என்றாரா...?''

ஒரு பெண் அவனைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டாள். எத்தனை நாள் காத்திருந்தேன் என்று.

''என்ன காயத்ரி இப்படி அனல் அடிக் குது. உன் மூச்சில். சார் கருகி விடப் போகிறார். பார்த்து மூச்சுவிடு. இனி நீ மூச்சு விட்டு என்ன பயன்? இப்ப அவர் இவங்களுக்குச் சொந்தம்!'' என்றான் ஒருவன் சிரித்துக் கொண்டே... அவள் கண் கலங்கியது போல் இருந்தது.

சுவேகாவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நித்தியன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. காயத்ரி சுவேகாவை முறைத்தாள். அந்தப் பார்வையில் அவள் நடுங்கினாள். ஏனோ தெரியவில்லை. மனம் படபட வென அடித்துக் கொண்டது.

நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதிலையே... காணோம் என்றாள் ஒருத்தி.

என்ன கேள்வி.

அதான் ஹனிமூன் எங்கே என்று. அங்கேயும் வேலை விஷயமாகக் கிளம்பி விடாதீர்கள் என்றாள்.

அதைப் போய்ட்டு வந்த பின்னாடி சொல்கிறேன் என்றாள், முறுவலோடு.



போய்ட்டு வந்து எதைச் சொல்லப் போறீங்க? போன இடத்தையா...? (அ) அங்கு என்ன நடந்தது என்ப தையா...? என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

உனக்கு வாய் நீண்டு விட்டது. ஜேம்ஸிடம் சொல்லி உன்னை அடக்கச் சொல்ல வேண்டும் என்றான்.

இரவு சுவேகாவைத் தங்கச் சிலை போல் அவள் சித்தி அலங்காரம் பண்ணினாள். அவள் சித்தி மகள், பிரண்ட்ஸ் எல்லோரும் எதுக்கு இத்தனை அலங்காரம். இனி கொஞ்ச நேரத்தில் கலைவதற்கு. சும்மா அப்படியே அனுப்ப வேண்டியதுதானே. மாப்பிள்ளை கூட ரொம்ப பொறுமை இல்லாதவர் போல் இருக்கு. காலையில் வந்து உங்களை உதைக்கப் போகிறார். என் பொன்னான நேரத்தில் ஐந்து நிமிடம் வீணாகி விட்டது. இதையெல் லாம் கழட்ட என்று.

அவளை அடிக்க சித்தி கையை ஓங்கினாள். ''போங்கடி வெளியே, நீங்க எல்லாம். இந்த இடத்தில் உங்களுக்கு என்ன வேலை, போய்ப் படுங்க,'' என்றாள்.

''என்னமோ மாப்பிள்ளை அறைக்குப் போய் சுவேகா இடத்தில் படுத்தது போல் பேசுறீங்க!'' என்றாள் ஒருத்தி. அவள் சித்தி மகேஷ் வியந்தாள். இந்தக் காலத்துப் பிள்ளைகள், எப்படி எல்லாம் பேசுறாங்க. கொஞ்சங்கூட விவஸ்தை இல்லாமல், அந்தக் காலத்தில் இதை நினைக் கவே கூசுவோம். இவர்கள் சர்வ சாதாரணமாகப் பேசு கிறார்கள்.

ஒரு வழியாக சுவேகா கையில் பாலைக் கொடுத்து. மாப்பிள்ளையை வணங்க வேண்டும் என்று சொல்லி உள்ளே அனுப்பி வைத்தனர்.

## 4

சுலோசனாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ஒரு நிமிடம் கதவருகிலேயே நின்றாள். எந்தச் சத்தமும் இல்லாது போகவே... நிமிர்ந்து பார்த்தாள். அங்கே அவன் டேபிள் மீது சாய்ந்து கொண்டு, கைகளைக் குறுக்காகக் கட்டிக் கொண்டு இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பார்வையில் மனம் துடித்தது. ஏன்... ஏன் இந்தப் பார்வை நீ யாரோ... என்னை நெருங்காதே... எத்தனை முயன்றாலும் உனக்கு என் நெஞ்சத்தில் இடமில்லை என்று சொல்வது போல். சே... என்ன நினைப்பிது. தலையை உலுக்கிக் கொண்டாள். மெல்ல நடந்து அவன் அருகில் போனாள். பாலை டேபிளின் மீது வைத்துவிட்டு, அவன் காலில் விழக் குனிந்தாள்.

அவன் ஓரடி பின்னால் நகர்ந்து, இதெல்லாம் என்ன, இந்த சம்பிரதாயம் எல்லாம் வேண்டாம். முதலில் உட்கார். உன்னிடம் நான் பேச வேண்டும் என்றான்.

அந்தக் குரலில் ஏதோ இருந்தது. அது என்ன, கண்டிப்பா. அழுத்தமா... உத்தரவா... அதிகாரமா... என்ன என்று புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருந்தது. ஆனால் அந்தக் குரலை அலட்சியப் படுத்த முடியவில்லை. பேசாமல் அமர்ந்தாள்.

என்ன இவன் முதலிரவு அறையில், ஒரு ஆசிரியர் போல் நடந்து கொள்கிறான். வந்ததும் கட்டியணைப்பான். தன் அழகைப் புகழ்வான், என்ன செய்வது என்று திக்கு முக்காடிப் போகப் போறோம். அவன் பேசினால், நான் என்ன பதில் சொல்வது என்று நினைத்து



நினைத்துத் தயங்கியவாறு வந்தாள். மாப்பிள்ளைக்கு அவ்வளவாகப் பொறுமை கிடையாது. பார்த்து நடந்து கொள் என்றனர்.

இவன் என்ன பொறுமையின் சிகரம் போல் பேசுகிறான். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, அழுத்தமாக, அதே நேரத்தில் கவனமாகப் பேசுகிறான். என் குரலுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகணும் என்பது போல் ஏதேதோ... சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே... அவன் குரல் இடையில் வெட்டியது.

"முதலில் நிமிர்ந்து என்னைப் பார். உன்னிடம் கொஞ்சம் நேரமில்லை இது. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். உன் கற்பனை எல்லாம் மூட்டை கட்டி வை," என்றான் கடுமையாக.

குளிர் நீரை முகத்தில் வீசியது போல் நிமிர்ந்தாள். அவன் கண்களில் கடுமை தெரிந்தது. நிமிடத்தில் அது மாறியது. திகைத்தாள். இப்படிக் கூட ஒருவன் தன் உணர்ச்சியை நொடியில் கட்டுப்படுத்த முடியுமா...?

இவன் எப்படிப்பட்ட வலிமை உடையவனாக இருப்பான். அவளுக்கு உடம்பு நடுங்குவது போல் இருந்தது.

அவன் எதிர் சோபாவில் அமர்ந்தான். இனி நீ நெருங்க முடியாது என்பது போல் அவள் கண்களில் அதிர்ச்சி. அவனுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது.

"நான் சொல்லப் போற விஷயம் உனக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும். நீ கேட்டுத்தான் ஆகணும்," என்றான் கட்டளையாக.

அவன் முகத்தில் பார்வையைப் பதித்தாள். அவன் நிதானமாக அவள் தலையில் கூடை நெருப்பை அள்ளிக் கொட்டினான்.

"நான் உன்னை விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. என் அம்மா, அப்பாவுக்காகத்தான் கல்யாணம் செய்து கொண்டேன். நான் ஏற்கெனவே ஒரு பெண்ணை விரும்பி..." இந்த இடத்தில் சிறிது தயங்கினான்.

பின் லேசாகச் செருமிக் கொண்டு, "அந்தப் பெண்ணுடன் நான் குடும்பம் நடத்தி வருகிறேன்!" என்று மின்னாமல், முழங்காமல் அவள் தலையில் இடியைப் போட்டான்.

இதைக் கேட்ட அவள் நம்பாமல் அவனைப் பார்த்தாள். இவன் விளையாடுகிறானா...? நான் என்ன சொல்கிறேன், என்று ஆழம் பார்க்கிறானா... என்று அவன் முகத்தை நம்பாமல் பார்த்தாள்.

அவன் நான் சொல்வது மெய்தான் என்றான்.

"இது உங்க அப்பா, அம்மாவுக்குத் தெரியுமா...?" என்றாள்.

"தெரியும்..."

"தெரியுமா...? தெரிந்தும் என்னை எதுக்காகக் கல்யாணம் செய்து வைத்தாங்க. நீங்கள் ஏன்... செய்து கொண்டீங்க?" என்றாள்.

இதையெல்லாம் அவன் எதிர்பார்த்தது போல, தயங்காமல் பதில் வந்தது. "நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். நான் என் வசுவைத்தான் கல்யாணம் செய்வேன் என்று. இவர்கள் சம்மதிக்கவில்லை. 'ஊரும், உறவும் நம் குடும்பத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்? வீட்டில் பெண்கள் இருக்காங்க. நீ இது மாதிரி கல்யாணம் செய்து கொண்டால், நம் வீட்டில் யார் பெண் பார்ப்



பாங்க. நீ எப்படியோ இரு. நாங்கள் பார்க்கும் பெண்ணுக்குத் தாலி மட்டும் கட்டு. போதும்,' என்றனர்."

அவள் அதிர்ந்தாள். அதை அவனும் கவனித்தான்.

"உங்க சுயநலத்திற்காக, நீங்க இரண்டு பேரும் என்னைப் பலியிட்டு விட்டீங்க. இதில் என் வாழ்க்கை, என் உணர்வு, என் மனம், சந்தோஷம், எதுவுமே நினைத்துப் பார்க்கலையா...?" என்றாள்.

"இதை நான் ஏன் நினைத்துப் பார்க்கணும். இதை நினைத்து என் சந்தோசத்தை இழக்க முடியுமா...?"

"குட். நல்ல கேள்வி," மெச்சினாள்.

"என் சந்தோசத்தில் அவர்கள் குறுக்கிடலை. நீ அவளுடன் இரு. நாங்கள் கேட்க மாட்டோம் என்றனர். அதனால் அவர்கள் சொல்வதை நான் செய்தேன்," என்றான் அலட்சியமாக.

அவளுக்குப் பொங்கிக் கொண்டு வந்தது. எவ்வளவு சாதாரணமாகப் பேசுகிறான், என வாழ்வையே அழித்து விட்டு.

"உன்னோடு குடும்பம் நடத்த முடியாது, என்னால். என் வசுவுக்குத் துரோகம் பண்ண மாட்டேன். இதுவரை நாங்கள் குழந்தை மட்டுந்தான் பெத்துக்கலை!" என்றான்.

அவள் இதயத்தில் சயனைட் தடவியது போல் எரிந்தது. அவளுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. இது மாதிரிப் பேசுவான் என்று தெரிந்திருந்தால் கூட என்ன பதில் சொல்லலாம் என்று யோசித்து வைத்திருப்பாள். அவள் சந்தோசத்தின் மடியில் தவழப் போகிறோம் என்று நினைத்து வந்தாள். இவனோ இனி

உன் வாழ்வில் சந்தோசம், நிம்மதி என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற ரீதியில் பேசுகிறான். இந்த விசயத்தை இத்தனை நிதானமாகப் பேச முடியுமா...? ஒரு பெண்ணின் வாழ்வை அழித்துவிட்டு, எந்த ஒரு குற்ற உணர்வும் இல்லாமல்... இவள்தான் இப்போ தவித்தாள். தான் ஏதோ தப்பு செய்து விட்டது போல் அவள் தவித்தாள்.

''இதுவரை அவளுடன் இருந்தது சரி. இனி மேலாவது என்னுடன்...'' என்று முடிப்பதற்குள், ''என் வாழ்க்கையில் உனக்கு இடமேயில்லை. என் நெஞ்சத்தில் அவள் ஒருத்திக்குத்தான் இடம். என் மஞ்சத்திலும் அப்படித்தான். இவ்வளவு விளக்கமாக ஏன் நான் சொல்கிறேன் என்றால்... நீ என்னை இனி நினைக்கக் கூடாது. என்னிடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. மருமகளுக்குரிய கடமையை நீ ஒழுங்காகச் செய்ய வேண்டும்,'' என்றான் அழுத்தமாக.

''என் மேல் உள்ள கோபத்தை வீட்டில் யாரிடமும் காட்டக் கூடாது. அதை நான் பொறுக்க மாட்டேன். அப்புறம் டைவர்ஸ் வாங்கிக் கொண்டு போய் விடலாம் என்று நினைக்காதே... நான் தர மாட்டேன். உனக்கு டைவர்ஸ் கொடுத்துவிட்டு, பிறகு வேற கல்யாணம் பண்ணிக் கொள் என்பார்கள். என்னால் அது முடியாது. நீ இங்கு இருந்துதான் ஆகணும். என் தங்கை, தம்பியைக் கவனித்துத்தான் ஆகணும். நீ வேலைக்குத் தாராளமாகப் போகலாம்.

''நீ வேறு யாருடனும் தொடர்பு வைத்துக் கொண்டாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் வீட்டு



கவுரவத்தை மனதில் வைத்து நட. எனக்கு அது முக்கியம்,'' என்றான்.

அவளுக்கு வந்த ஆத்திரத்தில் பக்கத்தில் பழம் நறுக்கத் தட்டில் இருந்த கத்தியை எடுத்து அவன் மீது வீசினாள். அதை அவன் லாவகமாகப் பிடித்தான்.

''சுவேகா... என்ன இது?'' என்று அதட்டினான்.

''என்னை அடுத்தவன் கூட... இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை...?'' என்று வெடித்தாள்.

''உனக்குப் பிடிக்கவில்லை என்றால் பேசாமல் இரு. இதற்கு ஏன் இத்தனை கோபம்?'' என்றான்.

''உங்க தங்கைக்குக் கூட இப்படித்தான் உபதேசம். நீங்க அடுத்தவன் கூட...'' காது கொய்ங்... என்றது. பிறகுதான் தெரிந்தது. அவன் அவளை அடித்திருக்கான் என்று, அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அவன் ஜன்னல் புறம் திரும்பி நின்றான். ''உங்க தங்கை என்று வரும்போது மட்டும் கோபம் வருகிறது. நான் என்றால் எப்படி வேணா அலைவேன் என்று அர்த்தமா... உங்களுக்கு அது மாதிரிதான் இருக்கணும், உங்க கண் முன்னாடியே... அப்பத்தான் உங்களுக்குப் புத்தி வரும்!'' என்றாள்.

''ஏய்... நீ எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம். நீ ஒழுங்கா இரு. இல்லையென்றால் உன்னைத் தொலைத்து விடுவேன்,'' என்றான்.

''நீங்க மட்டும் ஊர் மேயலாம். நான் மட்டும் ஒழுங்கா இருக்கணுமா... இது எந்த ஊர் நியாயம்?'' என்றாள். அவளுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஆத்திரத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசினாள்.

வெட்கம் கெட்டுப் போய் அவனிடம் கெஞ்சினாள். எனக்கு நீங்க வேண்டும். என்னால் உங்களை மறக்க முடியாது. ப்ளீஸ் என்று கெஞ்சினாள்.

''சே... உனக்கு வெட்கமாயில்லை. நீயெல்லாம் ஒரு பொம்பளையா... ஒரு ஆணிடம் வந்து இப்படிக் கெஞ்ச. இப்படி மனதையும், உடம்பையும் கட்டுப்படுத்தத் தெரியாதவள். இத்தனை நாள் எப்படி ஒழுக்கமா இருந்திருப்பே...'' அவனும் ஆத்திரத்தில் வாயை விட்டான்.

அவ்வளவுதான். சுவேதா பொங்கி விட்டாள். ''உங்க வக மாதிரி என்னையும் நினைக்காதீங்க. அடுத்தவன் புருசனுக்கு அலைய!'' மறுபடியும் விட்டான் ஒரு அறை. ''அவளைப் பற்றிப் பேச உனக்குத் தகுதியில்லை. அவள் தான் எனக்கு முதல் மனைவி. தாலி கட்டவில்லையென்றாலும் என் மனதில் இடம் பிடித்தவள். என் கூட வாழுபவள். இதையெல்லாம் என் கண்மணி கேட்க வேண்டியது. நீ வந்து கேட்குறே... இப்போ அவள் எப்படித் துடித்துக் கொண்டிருப்பாளோ தெரியவில்லை இது உனக்குப் புரியவில்லையே...

''அவள் சொன்னாள். அவள் கூடவும் சந்தோசமாக இருங்கள். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. பாவம். அவள் எத்தனை எதிர்பார்ப்போட வருவாள் என்று. உனக்கு என்னால் துரோகம் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டேன்.''

சீ... யென்றாள். ''அவள் சொல்லி, உங்களுடன் நான் படுக்கையைப் பகிர்வதா... இதைவிட ஒரு கேவலம் எனக்கு இல்லை!'' என்றாள்.



''அப்ப பேசாம இரு. எதுக்கு இந்த ஆர்ப்பாட்டம்?'' என்றான்.

''எவ்வளவு சுலபமாகப் பேசி முடிச்சிட்டீங்க. என் வாழ்க்கையை... இதைத் தீர்மானிக்க நீங்க யார்...? இப்படியே காலம் முழுக்க இருக்க முடியுமா... நான்?''

''இருந்துதான் ஆகணும். எந்தப் பொறுப்பில் இருந்தும் நீ விலகக் கூடாது. நாம் பேசுவது நாலு சுவருக்குள் தான். இதை வெளியில் காட்டக் கூடாது.

''அதோ பக்கத்தில் ஒரு அறை இருக்கு. அங்கே நீ படுத்துக் கொள்ளலாம். இரவு டிபனுக்கு நான் வீட்டுக்கு வரமாட்டேன். வீட்டில் உள்ளவர்களை நீதான் கவனிக்க வேண்டும்.

''உனக்கு என்ன வேண்டுமோ... என்னிடம் தாராளமாகக் கேட்கலாம். உனக்குக் கிடைக்கும்.'' என்றான்.

எனக்கு நீங்கள்தான் வேண்டும் என்றாள். அது இந்த ஜென்மத்தில் கிடைக்காது என்றான் சிரித்துக் கொண்டே...

எப்படிங்க உங்களால் சிரிக்க முடியுது. நானும் ஒரு பெண் தானே... எனக்கு நீங்க வேண்டும் என்ற நினைப்பு இருக்காதா... தைரியமாகச் சொல்லி அவளையே கல்யாணம் பண்ணியிருந்தால் நீங்க சுத்தமான ஆம்பளை. இந்த மாதிரி பண்ணின நீங்க ஒரு கோழை என்றாள்.

அவள் தலையில் நறுக்கெனக் கொட்டினான். வலி உயிர் போயிற்று. உச்சந்தலையை அப்படியே பிடித்துக் கொண்டு, அம்மா... என்றாள்.

எனக்கு என் குடும்ப நிம்மதி, கவுரவம் முக்கியம் என்றான்.

சீ... கலாசாரத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன தகுதி இருக்குது என்றான்.

ஏன்... இல்லை, நான் ஒருத்தியுடன்தான் குடும்பம் நடத்துகிறேன். பல பேருடன் இல்லை. உன் கூட வாழ்ந்தால் தான் நான் அசிங்கப் படணும் என்றான் சுள்ளென்று.

ஏங்க... ஏங்க, இப்படிப் பண்ணுறீங்க. இதெல்லாம் சும்மா... பொய் சொன்னேன். உன்னை ஏமாற்ற... நீதான் என் மனைவி என்று சொல்லுங்க. என் கூட வாழக்கூட வேண்டாம். அவளை விட்டு வந்து விடுங்க என்று அவன் காலில் விழுந்து அழுதாள்.

அவன் இரும்பாக நின்றான். கல்லும் கரைந்து விடும் - அவள் அழுவதைப் பார்த்து. அவன் எவ்வளவோ கீழிறங்கினான்.

அவன் அவளைக் கேவலமாகப் பேசினான். இப்படி என்னைக் கெஞ்சி அடைய உனக்கு அசிங்கமாக இல்லை? உனக்கும், வேசிக்கும் என்ன வித்தியாசம் என்றான்.

ஐயோ... என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள். என்னைக் கொன்னு போட்டுடுங்க. நான் இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இன்னும் உயிருடன் இருக்கேனே... நான் என் அம்மா, அப்பா கேட்டால் என்ன சொல்வது என்று அழுதாள்.

இதில் சொல்வதற்கு என்ன இருக்கு, சந்தோஷமாகத் தான் இருக்கேன் என்று சொல்வதுதானே. அவங்க என்ன, நீ சந்தோசமாக இருப்பதை சி.டி. எடுத்துக் காட்டி



னால்தான் நம்புவோம் என்றா சொல்லப் போறாங்க என்றான் நக்கலாக.

ப்ளீஸ் நித்தி. என்னால் உங்களை விட்டுத் தர முடியாது. வந்து விடுங்க நித்தி ப்ளீஸ் என்று கெஞ்சினாள். உங்களை எத்தனை ஆசையாக நேசித்தேன் தெரியுமா...?

நேசித்தாயா... என்ன கதை விடுறே... போட்டோவில் பார்த்ததும் காதல் வந்து விடுமோ... என் மனதை நீ நேசிக்கவில்லை. என் உடம்பைத்தான் என்றான் கேவலமாக.

அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். உடம்பின் சங்கமம்தான் காதலின் முடிவு. அப்படி ஏன் நாம் இருக்கக் கூடாது.

என் வசு என்ன சொன்னா தெரியுமா... நீங்க அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்க. என்னால் உங்க குடும்பத்தில் எந்தப் பிரச்னையும் வேண்டாம். நான் எங்காவது போய் விடுகிறேன் என்றாள். அவளை எதுவும் பேசாதீங்க. எந்தப் பெண்ணும் பொறுத்துக் கொள்ள மாட்டாள் எனறாள். எத்தனை உயர்வானவள் என் வசு என்றான்.

நீ அவளை விட்டுட்டு வா என்கிறே... சே.. எத்தனை சுயநலம் உனக்கு. அவள் எங்கு போவாள்? என்னையே நம்பி இருப்பவள்.

அவள் எனக்குச் சாதகமாகப் பேசுவது போல் பேசி, இவனை வசமாகப் பிடித்து வைத்துக் கொண்டாள். இவன் அவளை நம்புகிறான். இவனிடம் என்ன சொல்லிப் புரிய வைக்க முடியும். இப்படிப்பட்டவள் நல்லவள்

இல்லை என்று. நீங்கள் இல்லையென்றால் இன்னொரு வன் என்று நினைத்தாள்.

தன்னை ஒரு வேசியோடு ஒப்பிட்டுப் பேசினவனிடம் என்ன இனி பேச முடியும். சுவேகா அழுது, அழுது ஓய்ந்து போனாள். இப்படி ஒரு முதலிரவு இதுவரை யாருக்குமே நடந்திருக்காது.

உன் அறை அங்கேயிருக்குது. நீ அங்கே போகலாம் என்றான் இரக்கமேயில்லாமல்.

உங்களுடைய அன்பும், ஆதரவும் இல்லாமல் நான் இந்த வீட்டில் எப்படி இருக்க முடியும்?

இத்தனை வருடம் எப்படியிருந்தாய்? என்னோட அன்பும், ஆதரவும் இருந்தா... என்னடி ரொம்ப கதை விடுறே... நான் உண்மையைச் சொல்லப் போய்த்தானே... உனக்கு உண்மை தெரிந்தது.

என் வசுகூடச் சொன்னாள். உண்மையைச் சொல்லாதீங்க. சாதாரணமாக அவகூட குடும்பம் நடத்துங்க. உண்மையைச் சொன்னா அவ தாங்க மாட்டா என்று. உன்னைப் பற்றித் தெரியாமல்.

சுவேகா அப்படியே அசந்து போய் நின்றாள். எப்படிக் காயை நகர்த்துகிறாள். திட்டம் போட்டு. இவனிடம் இன்னும் எப்படிக் கெஞ்சுவது, கடைசி முயற்சியாக... நித்தி... நான் இங்கேயே... படுத்துக் கொள்கிறேனே... என்று அவனை அணைக்கப் போனாள்.

சீ... என்று அவளைப் பிடித்துத் தள்ளினான். அவள் நிலை குலைந்து கீழே போய் விழுந்தாள்.

இதைவிட ஒரு அவமானம் ஒரு பெண்ணுக்கு வராது. அவள் கண்கள் சிவக்க, அவன் சட்டையைப் பிடித்தாள். எனக்குப் பதில் சொல்லுங்க. அவள் என்னையே நம்பி வந்தவள் என்று. நான் யாரை நம்பி வந்தேன். நான் எங்கு போவேன்... சொல்லுங்க... சொல்லுங்க என்று பிடித்து உலுக்கினாள்.

அவள் கையை ஒரு தூசு தட்டுவது போல், தட்டி விட்டான். இனி இந்தப் பேச்சு இத்தோடு முடிந்தது. இனிமேல் பேசாதே... வீட்டிலும் சரி, என்னிடமும் சரி. இதை மனதில் வைத்துக் கொண்டு, உன் கோபத்தைக் காட்டினே... நான் மனுசனாக இருக்க மாட்டேன்.

இப்ப மட்டும் மனுசனாக இருப்பதாக நினைப்பா? என்றாள் துடுக்காக. நான் மட்டும் ஒரு நல்ல கணவனாகத்தான் இருக்க முடியாது என்றேனே தவிர... ஒரு நல்ல பிரண்ட்சா இருப்போமே... என்றான்.

அவனை உறுத்து விழித்தாள். யாருக்கு வேண்டும் உங்க பிரண்ட்சிப். நிறையப் பேர் பிரண்ட்சா இருந்து கணவன், மனைவியாவார்கள். நாம் கணவன் மனைவியா இருந்து கொண்டு நல்ல பிரண்ட்சா இருப்போம். எல்லாம் தலைகீழ்தான் என்றாள்.

இவன் அடித்ததில் கன்னம் சிவந்திருந்தது. அழுதழுது முகம் எல்லாம் வீங்கியிருந்தது. எழுந்து மெல்ல அவன் சொன்ன அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். உள்ளேயிருந்து அழுகைச் சத்தம் கேட்டது.

நித்தியன் கண்களை இறுக மூடித் திறந்தான். சுலபமாக முடிவெடுத்தான். வீட்டுக்காகத்தான் என்று. இந்தக் கல்யாணம். இவளின் கோபம், அழுகை, கேள்வி. பெருமூச்சொன்று வெளி வந்தது.

# 5

இரவு முழுவதும் தூங்காமல் நினைவுகளிலேயே இருந்தாள். விடிந்து விட்டது. எழுந்து வேலையைப் பார்த்தாள். உடம்பெல்லாம் வலித்தது. இரவு தூங்காத தால் கண்ணெல்லாம் எரிந்தது.

ஆபீசில் வேலை ஓடவில்லை. மீண்டும் நித்தியனின் நினைப்பு, காலை எழுந்திருக்க வெகு நேரம் ஆகியது. நித்தியன் வந்து கதவைத் தட்டினான். எழுந்திரு. மணி என்ன ஆகிறது. யாராவது வந்தால் என்ன ஆகும் என்றான்.

எழுந்து சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டு அவள் சிந்தித்தாள். இதை அம்மா அப்பாவிடம் சொல்லலாமா...? இதைச் சொன்னால் என்னாகும்? வீட்டில்தான் போய் இருக்க முடியுமா...? ஒரு தங்கை இருக்கிறாள். நல்ல வசதி, பணம் இருக்கு என்று யாரும் வந்தாலும், கெட்ட பெயர். கெட்ட பெயர்தான்.

யாரிடமும் சொல்ல வேண்டாம். கொஞ்ச நாள் பொறுப்போம். டைவர்சும் கொடுக்க மாட்டானாம். இவனை டைவர்ஸ் பண்ணவா கல்யாணம் பண்ணிக் கொண்டேன். இதையாவது சொன்னானே... என்று நினைக்கும் போதே... மனம் திடுக்குற்றது. இன்னும் மனம் அவனை விரும்புகிறதே... என்று அழுதாள்.

மறுநாள் பெங்களூருக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். ஒரு வார்த்தை பேசவில்லை இருவரும்.



தனிக் காரில்தான் சென்றனர். இவள் முகத்தை வெளியே வைத்துக் கொண்டாள்.

இடையில் ஒரு ஹோட்டலில் நிறுத்தினான். இவள் இறங்க மறுத்தாள். அவன் சாப்பிட வா... என்று கூப்பிட்டும். அவன் மட்டும் இறங்கிப் போய்ச் சாப்பிட்டு விட்டு. அவளுக்கும் வாங்கி வந்தான்.

இவன் வரும்போது அவள் காரில் இல்லை. அவள் இறங்கி பாத்ரூம் போய்விட்டு ஒரு பிஸ்கட் பாக்கெட் வாங்கிச் சாப்பிட்டு விட்டு வந்தாள்.

அவளைக் காணவில்லை என்றதும் சுற்றிலும் தேடினான். சிறிது நேரத்தில் வந்தாள். சாப்பாட்டைச் சாப்பிடச் சொல்லி அவளிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கித் தூக்கி வெளியில் எறிந்தாள்.

அவனுக்கு அப்போது கோபம் வந்தது. போன் அடிக்கவும் அதை எடுத்துப் பேசினான். ம்... சாப்பிட்டேன். நீ சாப்பிட்டியா... ம்.. ம்.. சீக்கிரம் வந்து விடுவேன் என்றான். இவளுக்குப் புரிந்தது. அவதான் போன் பண்ணினாள் என்று கைகளால் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். இவன் பேசாமல் காரை எடுத்தான்.

பெங்களூர் போகும் வரை அழுதாள். மாப்பிள்ளை பெண்ணுக்கு விருந்து பலமாக நடந்தது. எல்லோரும் ஏன் சுவி எப்படியிருக்கே... உடம்புக்கு எதுவும் முடியலையா... டாக்டரிடம் போகலாமா... என்றனர்.

அவள் சித்தி வந்து, அவள் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும். பேசாமல் இருங்கள் என்று சுவேகாவை அவள் அறைக்கு அனுப்பி வைத்தாள்.

சுவேகா போய்ப் படுக்கறதுதான் தெரியும். அப்படியே தூங்கி விட்டாள். அவள் தூங்கி மூன்று நாட்களாகி விட்டன.

மாப்பிள்ளையிடம், நீங்களும் போய் ரெஸ்ட் எடுங்க. சேது, போய் சுவேகா அறையைக் காட்டு மாமாவுக்கு என்றாள்.

அவன் வந்து அறையைக் காட்டியதும் உள்ளே போனான். அவனுக்கும் படுக்கணும் போல் இருந்தது.

கட்டிலில் சுவேகா படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். அறையைச் சுற்றிப் பார்த்தான். அதன் அலங்காரம் பணத்தைப் பறை சாற்றின. ஒரு தலையணையை எடுத்து, சோபாவில் போட்டுப் படுத்து விட்டான். அவனும் அயர்ந்து உறங்கி விட்டான். இரவு மணி ஒன்பதானது. இருவரும் எழுந்திருக்க வில்லை. சுவேகாவுக்கு போன் போட்டனர்.

போன் அடிக்கவும், சுவேகா கண் திறந்தாள். மெல்ல எடுத்துப் பார்த்தாள். கீழே இருந்துதான்.

என்ன என்றாள். மணி ஆகிவிட்டது. சாப்பிட வாங்க என்றாள் அம்மா... இதோ வருகிறோம் என்றாள். திரும்பிப் பார்த்தாள். நித்தியன் நல்லா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். இவனை எப்படி எழுப்புவது என்று நினைத்தாள். இவனை எழுப்பாமல் இருந்தால் என்ன. என்னைப் பட்டினி போடவில்லையா... இவன் இப்போ பட்டினி கிடந்தா என்ன என்று நினைத்தாள்.

மனம் கேட்கவில்லை. ஒரு பாக்சை எடுத்து அவன் பக்கத்தில் போட்டு உடைத்தாள். அவன் திடுக்கிட்டு விழித்தான். சுவேகா நின்று கொண்டிருந்தாள்.

சிவந்த கண்கள் அவளை முறைத்தன. என்ன என்றான். சாப்பிடக் கூப்பிடுறாங்க என்றாள்.



சரி. நீ போ. நான் வருகிறேன் என்றான். இவள் கீழே போய் உட்கார்ந்தாள் பின்னாடியே நித்தியன் வந்து விட்டான்.

சுவேகா அம்மா மாப்பிள்ளைக்கு டிபன் எடுத்து வை என்றாள். இவள் அதைக் காதுக்கு வாங்கிக் கொள்ள வில்லை. வேலைக்காரப் பெண்ணைக் கூப்பிட்டு எடுத்து வைக்கச் சொன்னாள். இவள் கூப்பிட்ட குரலுக்கு அத்தனை பேரும் காத்திருந்தனர்.

சாப்பிட்டு முடிந்ததும் பாலை அவள் கையில் கொடுத்தாள் அம்மா. அதை வாங்கி வேலைக்காரியிடம் கொடுத்து, மேலே கொண்டு போய் ஐயாவிடம் கொடு என்றாள். முறைத்த அம்மாவிடம் நான் உங்க கூடப் படுத்துகிறேன் அம்மா... என்றாள்.

என்னடி இது புதுப் பழக்கம்? மாப்பிள்ளை என்ன நினைப்பார். நீ போய் அவருடன் படு. புது இடம். நீ தான் அவருக்கு எல்லாம் செய்யணும் என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

இவள் வேகமாகப் போனாள். வேலைக்காரப் பெண் பாலை வைத்துவிட்டுப் போனாள். இவள் போய் அதை எடுத்துக் குடித்துவிட்டு, மீதிப் பாலை வாஷ்பேஸினில் கொட்டிவிட்டு, கட்டிலில் வந்து தொம்மென்று படுத்துக் கொண்டாள்.

நித்தியன் இதையெல்லாம் கவனித்து கொண்டிருந்தான். அவனுக்கு ஆத்திரம் வந்தது. மீண்டும் தூங்கிப் போனாள் சுவேகா.

காலையில் அவர்களை வெளியே போய்ட்டு வாங்க என்றனர். சுவேகா பிடிவாதமாக மறுத்தாள். அவர்கள்

டவில்லை. வேறு வழியில்லாமல் அவனுடன் சென்றாள்.

காரை அவள் ஓட்டினாள். காரின் வேகத்தில் அவளின் ஆத்திரம் தெரிந்தது. அவளைக் காரை நிறுத்தச் சொல்லி, காரை இவன் ஓட்டப் போனான். அவள் விடவில்லை. நானே ஓட்டுகிறேன் என்றாள்.

வேண்டாம். நீ இருக்கும் மனநிலையில் காரை ஓட்ட வேண்டாம்.

ஏன்...? எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்குது. நானே ஓட்டுகிறேன் என்று ஒரு ஆட்டோ மீது மோதினாள். நல்ல வேளையாகப் போயிற்று. நின்று கொண்டிருந்த ஆட்டோ அது. ஒருவரும் இல்லை. எங்கிருந்தோ ஓடி வந்த ஆட்டோக்காரன் இவர்களைப் பிடித்துக் கொண்டான். பின் பணத்தைக் கொடுத்து விட்டு வந்தனர்.

பார்க்குக்குப் போய் சுவேகா காரை விட்டு இறங்கவில்லை. காரிலேயே உட்கார்ந்திருந்தாள்.

நீ என்னை இப்படி அவமானப்படுத்தவா கூட்டி வந்தே. இனி நான் வர மாட்டேன் என்றான்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு, சாரிங்க. வாங்க என்றாள். இறங்கி அவனுடன் இணைந்து நடந்தாள். அவள் எதுவும் பேசவில்லை. தலை வலித்தது.

கூல்ட்ரிங்க்ஸ் வாங்கிக் கொடுத்தான். அவள் தயங்கினாள். எனக்கு வேணாங்க என்றாள். குடி சுவேகா. கண் கலங்க வாங்கிக் குடித்தாள்.

இரவு அவனைக் கட்டிலில் படுக்கச் சொன்னாள். இவள் எழுந்து பால்கனிக்குப் போய்க் கதவைச் சாத்திக்



கொண்டாள். பனி கொட்டியது. நித்தியன் கதவைத் தட்டினான். சுவேகா உள்ளே வா... நான் வெளியே போய் விடுகிறேன்.

இவள் கதவைத் திறக்கவில்லை. இரவு முழுவதும் பனியில் இருந்ததால் ஜுரம் அடித்தது. இன்று ஊருக்குக் கிளம்ப வேண்டும். அவள் நான் வரவில்லை. நீங்க மட்டும் போங்க. நான் அடுத்த வாரம் வருகிறேன் என்றாள்.

அவள் அம்மா, அப்பா விடவில்லை. மாப்பிள்ளை மட்டும் தனியாகப் போகக்கூடாது. டாக்டரிடம் காண்பித்துவிட்டுப் போங்கள் என்றனர்.

வீட்டில் இவள் மாமியார் எல்லா வேலையும் இவள் தலையில் கட்டினார். இவளுக்கு வேலை பார்த்துப் பழக்கமில்லை. இருந்தாலும் செய்தாள். ரொம்ப கஷ்டமாக இருந்தது. இப்படியே வீட்டில் இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும் என்று வேலையைச் சென்னைக்கு மாற்றினாள்.

நித்தியன் எதுவும் கண்டு கொள்ளவில்லை. வருவான், போவான். சாப்பிட்டியா... என்று கூடக் கேட்க மாட்டான். கனவுகளைக் கலைத்து நினைவுக்கு வந்தாள். இப்படியே நாட்கள் ஓடின.

## 6

நித்தியன் ஒரு நாள் ஸ்வீட் வாங்கி வந்திருந்தான். அதை அவள் மாமியார் மகள்களுக்கும், மகனுக்கும் கொடுத்துவிட்டு, மீதியை ஒரு டப்பாவில் போட்டு மூடி வைத்தார். மகள்களிடம் உங்க அண்ணியிடம் சொல்லி விடாதேங்க என்றார். இதை நித்தியன் கேட்டபடி வந்தான். சுவேகாவும் நின்று கொண்டிருந்தாள்.

பூ வாங்கினாலும் அப்படித்தான். இவளுக்குக் கொஞ்சம்தான் கொடுப்பார். மகள்களுக்குத் தலை நிறைய வைத்து விடுவார். இவள் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தன் கணவனே தனக்கு இல்லை என்று ஆன பிறகு, வேறு இருந்தால் என்ன, இருக்காட்டி என்ன என்று நினைத்தாள்.

நித்தியன் தனியாக வாங்கி வந்து, சுவேகாவிடம் கொடுத்தான் ஸ்வீட். அதை வாங்கித் தூக்கி எறிந்தாள். ''எனக்கு எதுக்கு வாங்கி வந்து கொடுக்கிறீங்க? இதை அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து, இரவைக் கொண்டாடி விட்டு வாங்க,'' என்றாள்.

''அதை நீசொல்ல வேண்டாம்,'' என்றான். வீட்டில் எல்லோரும் குலதெய்வக் கோயிலுக்குப் போயினர். நித்தியனும், சுவேகாவும் மட்டும் வீட்டில் இருந்தனர். சுவேகா சமைக்கவில்லை. மெல்ல எழுந்து ஆபீஸ் போனாள்.

நித்தியன் இரவுதான் வீட்டுக்கு வந்தான். வீட்டில் வேலை பார்க்க ஒரு சிறுமி இருந்தாள். அவளிடம்,

''இன்று என்ன டிபன்?'' என்றான்.

''இன்று சமைக்கவில்லை. சாப்பாடு, டிபன் எதுவும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாங்க,'' என்றாள்.

''காலையில் இருந்து சமைக்கவில்லையா...?'' என்றான்.

''ஆம்,'' என்றாள்.

அவன் இப்பத்தான் வசுவுடன் ஹோட்டலுக்குப் போய்ட்டு வந்தான். சுவேகாவைத் தேடி மேலே போனான். அவள் அறைக் கதவு சாத்தியிருந்தது. தட்டினான்.



சுவேகா எழுந்து கதவைத் திறந்தாள். ''உனக்குச் சாப்பிட டிபன் வாங்கி வரட்டுமா...?'' என்றான்.

அவள் புரியாமல் விழித்தாள்.

''உன்னைத் தான் கேட்கிறேன். டிபன் எதுவும் வாங்கி வரட்டுமா...?'' என்றான்.

''வேண்டாம். எனக்குப் பசியில்லை,'' என்றாள், எங்கோ பார்த்துக் கொண்டு.

''காலையில் இருந்து சாப்பிடலையாமே... ஏன்?'' என்றான்.

''நீங்க வந்து ஊட்டி விடணும் என்றுதான்!'' முகத்தை நொடித்தாள்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''சரி, வா... ஊட்டி விடுகிறேன்,'' என்றான்.

அவனை முறைத்தாள்.

ஒரு வாரம் வீட்டில் சமையல் இல்லை ரெஸ்ட்டாக இருந்தாள். இவர்கள் வந்ததும் வேலை தொடங்கி விடும்.

மூத்தவள் சாதனா... வேலை பார்க்கும் இடத்தில் ஒரு பிரச்னையில் மாட்டிக் கொண்டாள். வீட்டுக்குத் தெரிந்தால் அவ்வளவுதான். இதை ரகசியமாக அண்ணியிடம் தெரிவித்தாள். ''ஆபீசில் என்னை ஒருவர் விரும்புறார். வா, வீட்டை விட்டு ஓடி விடலாம் என்கிறார். எனக்குப் பயமாக இருக்கு,'' என்று அழுதாள்.

''சரி. இன்று நான் உன் ஆபீஸ் வர்றேன்,'' என்று தைரியம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

ஒரு பதினொரு மணி சுமாருக்கு சாதனா ஆபீஸ் போனாள். அவனைப் பார்த்துப் பேசினாள்.

''நீங்கள் எங்கள் வீட்டுப் பெண்ணை விரும்புகிறீங் களாமே... எதுக்கு வீட்டை விட்டு ஓடி வரச் சொல்றீங்க. முறையாகப் பெண் கேட்டு வரலாமே... காதலிப்பது ஒண்ணும் உலக மகா குற்றமில்லையே...

''நீங்கள் கேட்டு நாங்கள் மறுத்தால் இந்த முடிவெடுக் கலாம். நீங்கள் எதுவும் முயற்சி பண்ணாமல் ஏன் இந்த திடீர் முடிவு?'' என்றாள் நேரடியாக.

இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத சந்திரன் திகைத்து, பின், ''யார் சொன்னது உங்க வீட்டுப் பெண்ணை நான் விரும்புவதாக? அவள்தான் எனக்கு லெட்டர் கொடுத்தா... மெசேஜ் அனுப்பினாள்,'' என்றான்.

''சரி. நீங்கள் சொல்வது போல் அவள் மேலேயே தப்பு இருக்கட்டும். உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் வேண்டாம் என்று சொல்வது தானே... எதுக்கு இந்த ஊரை விட்டு ஓட்டம்?'' என்றாள்.

''இனி இந்த மாதிரி சாதனாவிடம் வாலாட்டினா ஒட்ட நறுக்கிவிடுவேன். போலீஸ் கமிஷனர் என் மாமாதான். இப்பவே ஒரு போன் போட்டால் போதும். உன்னை அள்ளிக் கொண்டு போய் நொறுக்கி விடுவார். ஜாக் கிரதை!'' என்று எச்சரித்தாள்.

''என்ன மிரட்டுறீங்களா...? அவள் எனக்கு எழுதின லெட்டர் இருக்குது. இதை நான் போஸ்டர் அடித்து



ஒட்டினால் என்ன ஆகும் தெரியுமா...? என்றான் அவனும் மிரட்டலாக.

அந்த ஆபீஸ் எம்.டி. இவள் ஆபீஸ் எம்.டி.க்கு பழக்கம். அவருக்கு போன் போட்டுச் சொன்னாள். அவரும் இந்த எம்.டி.யிடம் பேசி, இவர் சந்திரனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

''உனக்குத்தான் கல்யாணம் நடந்து விட்டதே. எதுக்கு நீ அந்தப் பெண்ணை வீட்டை விட்டு வா என்றே...?'' என்றார்.

அவன் தலை குனிந்தான். ''ஒழுங்கா வேலை பார்ப்ப தென்றால் வேலை பார். இல்லையென்றால் சீட்டைக் கிழித்து விடுவேன்,'' என்றார்.

''அவள் எழுதின லெட்டரைக் கொடு,'' என்றாள்.

அவளை அவன் முறைத்தான்.

சாதனா அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள். ''அண்ணி! இது வீட்டுக்குத் தெரிய வேண்டாம். அம்மாவுக்கும் அண்ணனுக்கும் தெரிந்தால் அவ்வளவுதான். நான் தொலைந்தேன்!'' என்றாள்.

உன் அண்ணன் ரொம்ப யோக்கியதை. தெரிந்தால் உன் தலையை வாங்கி விடுவார் என்று நினைத்தாள்.

அதற்குள் சாதனா பதறி விட்டாள். ''என்ன அண்ணி யோசிக்கிறீங்க?'' என்றாள்.

''ஒன்றுமில்லை. நான் சொல்ல மாட்டேன். நீ இனி இது மாதிரி தப்பு பண்ணாதே,'' என்றாள்.

தலையை ஆட்டினாள்.

சந்திரன் சாதனாவுக்கு மறுநாள் போன் போட்டு, "உங்க அண்ணியை வைத்தா மிரட்டுகிறாய். உன்னையும், உங்க அண்ணியையும் என்ன செய்கிறேன் பார்!" என்று மிரட்டினான்.

சாதனா ஆடிவிட்டாள். அண்ணியை ஏதாவது செய்து விட்டால்... பயந்து கொண்டு ஆபீசில் இருந்து வீட்டுக்கு வந்து விட்டாள். சுவேகாவிடமும் சொல்லி எச்சரித்தாள்.

சுவேகா, "இதை விடு சாதனா, நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றாள்.

மாமியாரிடம் சொல்லி சாதனாவுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னாள். அவளுக்குச் சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணி விடவேண்டும்.

அவள் மாமியார், "என்ன அவசரம்? இன்னும் ஒரு வருடம் போகட்டுமே," என்றாள்.

"இப்போ இருந்து பார்த்தால், நல்ல இடமாக இருந்தால் முடித்து விடலாம். எப்படியும் உடனேயா மாப்பிள்ளை நமக்குக் கிடைத்து விடும். நாலு பேரிடம் சொல்லி வைத்தால் என்ன. ஜாதகம் ஒத்து வந்தால், பார்க்கப் போகிறோம்," என்றாள்.

அன்று நித்தியன் ஆபீசில் ஒரு பெரிய பார்ட்டி, ஹோட்டலில். அதற்கு சுவேகாவையும் கூப்பிட்டான். முதலில் நான் வரவில்லை யென்றாள். மறுபடியும் கூப்பிடவும் கிளம்பி அவன் கூடப் போனாள்.

எல்லோரும் குடும்பமாக வந்திருந்தனர். பல கம்பெனி நடத்தும் பார்ட்டி அது. ஒரு பக்கம் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. பிரமாண்டமான ஹாலில் வண்ண விளக்குகள், நீரூற்றுகள், பூந் தொட்டிகள் என்று அலங்காரமாக இருந்தது.

ஹாலின் மறுபக்கம் இறங்கினால், பெரிய தோட்டம், புல்வெளி, மரங்கள், செடி கொடிகள் என்று பார்க்க அழகாக இருந்தது.

நித்தியன் கையில் மதுக்கிண்ணம். அதைப் பார்த்துத் திகைத்தாள். இவன் குடிப்பானா...? கண்களில் மிரட்சி. ஒரு ஓரமாக உட்கார்ந்து விட்டாள்.

எல்லோரும் ஜோடி சேர்ந்து, இசைக்கேற்ப நடனம் ஆடினர். நித்தியனும் ஒரு பெண்ணுடன் சேர்ந்து ஆடினான். அவள் உடை பார்க்கவே சகிக்கவில்லை. பாதி திறந்த மார்பில், அதில் படம் வரைந்து, கவர்ச்சியாகக் காட்டியிருந்தாள்.

நித்தியன் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான். "நீ ஆட வர்றியா?" என்றான்.

"இல்லை. எனக்குப் பழக்கமில்லை," என்றாள்.

அவன் நடந்து கொள்வதைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. அந்த பார்ட்டிக்கு ஸ்ரீதர் வந்திருந்தான்.

அவன் சுவேகாவைப் பார்த்துவிட்டு, அவள் அருகில் வந்தான். "ஹலோ சுவேகா..." என்றான்.

திடுக்கிட்டுத் திரும்பிய சுவேகா... ஸ்ரீதரைப் பார்த்து அதிர்ந்தாள். தன் மனைவியின் பெயரை யார் இப்படிக் கூப்பிடுவது, என்று நித்தியன் திரும்பிப் பார்த்தான்.

ஸ்ரீதர் சுவேகா அருகில் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

''எப்படி இருக்கே சுவேகா... உனக்குக் கல்யாணம் ஆகி விட்டது போல் தெரிகிறது.''

''ஆம். ஆகிவிட்டது. என் கணவர் அவர்தான்!'' என்று மதுக் கிண்ணத்துடன் ஆடியவனைக் காண்பித்தாள்.

''குட். நல்ல செலக்சன். நல்ல பண்பாடுள்ள ஒழுக்கமான கணவனை அடைஞ்சிருக்கே. என்னோட வாழ்த்துக்கள்!'' என்று அவளைக் குத்தினான்.

சுவேகா பேசாமல் தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

''இப்ப இவன் கூட எப்படி வாழுறே... சுவேகா... இது மட்டும் இல்லை, வேறு பெண்ணுடனும் தொடர்பு இருக்குதாம். இதை எல்லாம் நீ எப்படி பொறுத்துப் போறே... நீதான் கலியுகக் கண்ணகியாச்சே...''

''நான் குடிக்கிறேன் என்று... என்... கண்ணால் கூட நீ பார்க்கலே... யாரோ சொல்லிக் கேள்விப்பட்டு, என் வீட்டில் வந்து என்னை எத்தனை அவமானப் படுத்தினே... நீ ஒரு வார்த்தை குடிக்காதீங்க. எனக்குப் பிடிக்கலே... என்று சொல்லியிருந்தால், நான் உடனே விட்டிருப்பேன். என்ன... அந்த அளவுக்கு உனக்கு என்னைப் பிடித்திருந்தது.

''அதை விட்டுட்டு, வீடு தேடி வந்து, கல்யாணத்தை நிறுத்து. இல்லையென்றால்...''

நித்தியனின் நெற்றி சுருங்கியது. அவன் யார், இப்படி அருகில் உட்கார்ந்து கொண்டிருக்கான் என்று கவனம் முழுவதும் அவர்கள் மேல் செலுத்தி அவர்கள் அறியாதவாறு அவனும் ஒரு சேரில் உட்கார்ந்து கொண்டான்.



''நான் தற்கொலை பண்ணிக் கொள்வேன் என்றாய். இப்போ மட்டும் எப்படி உயிரோடு இருக்கிறே... இல்லை, இந்த வாழ்வுதான் உனக்குப் பிடித்திருக்கா...?

''உன் கணவன் கூட இரண்டு பக்கமும் ஒருத்தியாக... உனக்கு அதுதான் பிடிக்கும் என்றால், ஒருத்தி என்ன, உனக்கு எத்தனை பேர் வேண்டும் என்னோடு பழக என்று வரிசையாக நிறுத்தியிருப்பேனே... நீ சொல்லவில்லையே... சுவேகா...'' அவள் நெஞ்சில் குத்தினான்.

''நான் இப்போ எல்லாம் குடிக்கிறதில்லே. நீ எப்போ வந்து என் வீட்டில், அத்தனை பேர் முன்னாடி, ஒரு குடிகாரனை என்னால் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது என்றாயோ... அப்பவே. அந்த நிமிடமே முடிவெடுத்தேன். உனக்காக அல்ல. உன முன்னால் நான் நல்லவன், இவனை வேண்டாம் என்று ஒதுக்கினோமே என்று ஒரு நாளாவது, ஒரு நிமிடமாவது, துடிக்க வேண்டும் என்று குடிப்பதை நிறுத்தினேன்.

''நான் பொறுப்பாக இல்லை. ஊர் சுற்றுகிறேன் என்றாய். அப்போ இருந்து ஆபீஸ் போனேன். முழுமூச்சாக உழைத்தேன். என் தாத்தா ஒரு மடங்கு உயர்த்தினார். என் அப்பா அதை இரண்டு மடங்காக உயர்த்தினார். நான் இன்று, உலகளவில் பத்து மடங்காக உயர்த்தியிருக்கேன்!'' என்றான் தலை நிமிர்ந்து பெருமையாக.

''இதற்கெல்லாம் உனக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டேன். உன் அளவிற்கு அழகு, அறிவு, புத்திசாலி, இல்லையென்றாலும், அடக்கமாக எனக்காகவே வாழ்கிறாள். நானும் அப்படித்தான். அவள் ஒருத்திக்கு மட்டும் தான் என் வாழ்வில் இடம்,'' என்று அந்த ஒருத்தியில் ஓர் அழுத்தம் கொடுத்தான்.

''உன்னைப் போட்டோவில் பார்த்ததுமே... எனக்குப் பிடித்து விட்டது. உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளணும் என்று முடிவெடுத்தேன். உன்னைக் காதலும் செய்யவில்லை. கத்தரிக்காயும் செய்யவில்லை. ஆனால் உன்னைப் பிடித்திருந்தது.

''வேலைக்குப் போறீயாமே... பாவம்!'' என்று அனுதாபம் காட்டுவது போல் கேலி பண்ணினான்.

''இன்று எனக்கு எத்தனை வசதி தெரியுமா? அன்று என்ன சொன்னாய்? எனக்குப் பணம் பெரிதில்லை. ஒழுக்கம் தான் பெரிது, என்று. இன்று ஒழுக்கமும் இல்லை. பணமும் இல்லை. நீ மகாராணி மாதிரி இருக்க வேண்டியவள். இன்று யார் முன்னாடியோ கை கட்டிச் சம்பளம் வாங்குகிறாய்.''

தன் மனைவியை அருகில் கூப்பிட்டான். அவள் வந்ததும், ''கீதா... நான் சொல்வேன் இல்லையா. என் மனதைக் கவர்ந்தவள். ஆனால் என் எதிரி என்று. இவள் தான்!'' என்றான்.

''இன்று இந்த அளவிற்கு வாழ்வில் முன்னேறி இருக்கேன் என்றால் அதற்கு முக்கிய முழு காரணமும் இவதான். இவளிடம் நல்ல பாடம் படித்தேன். அவமானம் என்ற பாடம். அன்று கேட்டாள் பார் ஒவ்வொரு கேள்வியும், இப்போ வாயடைத்துப் போய் நிற்கிறாள்,'' என்றான் ஏளனமாக.

சுவேகாவுக்கு அவமானத்தால் முகம் சிவந்தது. இவள் என்ன பேச முடியும். என்ன தகுதி இருக்கு இவள் பேச. இவள் கணவன் கண் முன்னாடியே செய்யாத தப்பு இல்லை, எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு பேச முடியும்.



''சுவேகா... இவன் என் குழந்தை. உனக்குக் குழந்தையில்லையா...?'' என்றான்.

அவளுக்குச் ''சுரீர்'' என்று ஈட்டியால் இதயத்தைக் குத்தியது போல் இருந்தது. குழந்தை இல்லை என்றாள். சொல்லும் போதே தொண்டை அடைத்தது அவளுக்கு. இதையெல்லாம் நித்தியன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவள் தவிப்பது புரிந்து, முன்னே வந்தான். ஒன்றும் தெரியாது போல, ''ஹலோ சார்...'' என்றான்.

''ஹலோ...'' என்று கை குலுக்கினான் ஸ்ரீதர். மரியாதைக்கு இரண்டு வார்த்தை பேசிவிட்டு, கிளம்பி விட்டான் ஸ்ரீதர். ''நாமும் போகலாம் வா...'' என்று நித்தியன் சுவேகாவைக் கூட்டிச் சென்றான்.

டிரைவர் சீட்டில் சுவேகா உட்கார்ந்திருந்தாள். கார் சீறிப் பாய்ந்தது. நித்தியன் புன்னகைத்தான். ஒரு திருப்பத்தில் கார் வருவதைக் கவனித்தும் வேகத்தைக் குறைக்காமல் ஓட்டினாள். இவன் அதைக் கண்டு, அவள் கையைத் தள்ளிவிட்டு காரைத் திருப்பி வேகத்தைக் கட்டுப்படுத்தினான். பாதி அவள் மேல் சாய்ந்திருந்தான். மதுவின் நெடி அவளுக்குக் குமட்டியது. முகத்தைச் சுழித்தாள்.

''இவ்வளவு வேகம், கோபம் வேண்டாம் பேபி. இன்னும் நாம் வாழ வேண்டிய நாள் ரொம்ப இருக்கு. உன் கூட காரில் வந்தால் என் ஆயுள் அவ்வளவுதான்!'' என்றான், சிரித்துக் கொண்டே...

''நீங்கள் அவள் வீட்டுக்குப் போறீங்களா.. நான் இறங்கிக் கொள்கிறேன்,'' என்றாள்.

"முட்டாள்! என்ன பேசுறே... போ... வீட்டுக்கு." சீறினான் அவன். "இல்லை. இப்போ, இந்த நேரத்துக்கு அவள் உங்களுக்குத் தேவைப்படுவாளே... அதான். இப்போ அப்பாய்ன்ட்மெண்ட் இல்லையா...? வேறொருத்தனுக்குக் கொடுத்திருக்காளா...?" அவள் தொடையில் சுரீர் என்று போட்டான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் தெறித்தது. காரை விட்டு இறங்கி வேகமாக அவள் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். சாத்திய கதவு முன் சிறிது நேரம் நின்றான். பின் என்ன நினைத்தானோ... காரை எடுத்துக் கொண்டு, அவள் வீட்டிற்குச் சென்று விட்டான்.

இரவு முழுவதும் வரவேயில்லை. அங்கிருந்தே ஆபீஸ் போய்விட்டு, அன்று இரவும் 11 மணிக்கு மேல் தான் வந்தான்.

சுவேகா அவனைப் பார்த்தே இரண்டு நாட்களாகி விட்டன. மனம் நொந்து போனாள். பேசாமல் பதினைந்து நாள் லீவு போட்டு விட்டு ஊருக்குப் போய் வரலாமா...? என்று டிரெயினுக்கு புக் பண்ணினாள்.

நித்தியனிடம் நான் அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் பதிலைக்கூட எதிர் பாராமல் கிளம்பி விட்டாள். போகும்போது அவள் கண் கலங்கியிருந்தது.

## 7

இப்போதெல்லாம் வசுவோட ரொம்ப பிரச்னையாக இருந்தது. தனி வீடு வேண்டும் என்றாள். ஒரு வீடு வாங்கிக் கொடுத்தான். இப்போ வீட்டுக்குப் போகும்



போதெல்லாம் ஒரு நகை வேண்டும் என்றாள். எப்பப் பார்த்தாலும் சுவேகாவைப் பற்றிப் பேசியே குறை சொன்னாள். அவள் பெயரில் பேங்கில் டெபாசிட் செய்யச் சொன்னாள். "இப்ப எதுக்கு?" என்றான்.

அவள் அழுது கொண்டே... "இதுவே சுவேகா என்றால் இப்படித்தான் கேட்பீங்களா...? அவள் கூட நீங்க வாழ்ந்தும், நான் ஏன்... என்று கேட்கிறேனா...? அவளுக்கு எவ்வளவு செய்திருப்பீங்க. அவளுக்கு ஒரு தங்கையிருக்கா... உங்களிடம் பணம் பிடுங்காமலா... இருப்பா..? அவளும் சம்பாதிக்கிறா. அதை உங்களிடம் தருகிறாளா...?' 'என்றாள்.

அவளைச் சமாதானப் படுத்திவிட்டு, காரில் வெளியே கூட்டிப் போனான். கடை வீதியில் அவன் நண்பன் சுரேஷைப் பார்த்தான். அவன் இவனைப் பார்த்து முகம் சுழித்தான்.

"என்னடா... நீ இன்னும் திருந்தலையா..? சிஸ்டரை இன்று ரயில்வே ஸ்டேஷனில் பார்த்தேன். என்ன நீங்க மட்டும் தனியா போறீங்க என்றேன். அவருக்கு ரொம்ப அர்ஜெண்ட் வேலை. அதனால் வர முடியவில்லை. இரண்டு நாள் சென்று வருவார் என்றார்கள். இதுதான் அந்த அவசர வேலையா...?" என்றான்.

"சரிடா. நீ எப்போ வந்தே? ஒரு போன் கூடப் பண்ணலே," என்றான் நித்தியன்.

"நான் இன்றுதான் வந்தேன். உன்னிடம் நான் பேச வேண்டும். எப்ப சந்திக்கலாம்?" என்றான்.

அவன் எதைப் பற்றிப் பேசப் போறான் என்று தெரிந்து, "நானே... உனக்கு போன் பண்ணுகிறேன்," என்றான்.

சுவேகா இல்லாத வீடு வெறிச்சென்றிருந்தது. ஒரு காபிக்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. அவள் போனதில் இருந்து ஒரு போன் கூடப் பண்ணவில்லை. நான் கூடப் பண்ணியிருக்கலாம். அந்த நினைப்பே வரவில்லை.

அப்போது போன் அடித்தது. எடுத்துப் பார்த்தான். புது நம்பர். "ஹலோ..." என்றான்.

"ஹலோ அத்தான். நான் சுஜி பேசுறேன். எப்படியிருக்கீங்க. நீங்க ஏன்... வரவில்லை? அக்கா கூட, இத்தனை தடவை... போன் பண்ணிக் கூப்பிட்டு, இப்பத்தான் வந்திருக்கா... போன் பண்ணும்போது எல்லாம் அத்தானிடம் கொடுக்கா என்றால், தூங்குறீங்க, குளிக்கிறீங்க என்று சொல்வாள். உங்களிடம் பேசவே முடிவதில்லை.

"நீங்க எப்போ வருவீங்க என்று கேட்டால்... என்னைக் கூட்டிப் போக வருவார். அப்போ இரண்டு நாள் இருப்பார் என்கிறாள். அத்தான், எனக்கு அடுத்த வாரமும், அக்காவுக்கு அடுத்த இரண்டு நாட்களுக்குப் பிறகும் பிறந்த நாள் வருது. நீங்க இங்கே கட்டாயம் வரணும். அக்கா பிறந்த நாளையும் இங்கேயே கொண்டாடணும்!" என்றாள்.

ஒரு புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தான் அவள் பேசுவதை. இதுவரை அவள் பேசி இவன் கேட்டதில்லை.

"என்னத்தான் சத்தத்தையே... காணோம். பதிலே இல்லை," என்றாள்.



என்னை எங்கே பேசவிட்டே... நீயே பேசிக் கொண்டிருந்தால், நான் எப்படிப் பேச முடியும்?" என்றான் சிரித்துக் கொண்டே...

"ஆமாம் இல்லே..." என்றாள்.

"ஆமாவா... இல்லையா...?" என்றான்.

"ஆமாம்." அவள் சிரித்தாள்.

"உன் அக்கா என்ன பண்றா...?" என்றான்.

"என்ன என் அக்கா... உங்க மனைவி என்று சொல்லக் கூடாதா...? அவளுக்கு போன் பண்ணுவதேயில்லையா...? நீங்கள் கேட்டால் இரவு தான் பண்ணுவீர்கள் என்கிறாள். அதில் கூட என்ன கஞ்சம். அவளுடன் பேச வேண்டியதுதானே... முகத்தை உம்மென்று வைத்திருக்கா... வந்ததில் இருந்து."

"என் மனைவிதான் தாயே... சரி. இனிமே போன் பண்ணிக் கொண்டே இருக்கேன்," என்றான்.

"பக்கத்தில் இருக்காளா..." என்றான்.

"இல்லை. நான் போன் பண்ணியது அவளுக்குத் தெரியாது. அத்தானோட நம்பர் குடுடி என்று நானும் வந்ததில் இருந்து கேட்கிறேன். அவள் குடுக்கவில்லை. அவர் பிசியா இருப்பார். வேலையின் நடுவில் தொந்தரவு செய்தால், பிடிக்காது என்கிறாள். உங்களுடன் எப்பத்தான் பேசுவது? அவளும் எப்ப பேசுவா...?" என்றாள்.

"அவள் செல்லில் இருந்து நம்பரைத் திருடிப் பேசுறேன்..." என்றாள் கல...கல..ன்னு சிரித்துக் கொண்டே...

"அத்தான்..." என்றாள் அமுக்கமாக.

''என்னம்மா?'' என்றான் மென்மையாக.

''என் அக்கா சந்தோசமாக இருக்காளா...?'' அவள் குரல் தழுதழுத்தது.

அவன் திடுக்குற்றான். ''அதில் உனக்கென்ன சந்தேகம் சுஜி?''

''எனக்கு எப்படிப் பதில் சொல்வது என்று தெரியவில்லை அத்தான். ஆனால் அக்காவின் சிரிப்பு, பேச்சு, கண்களில் உயிர்ப்பு எல்லாமே... மிஸ்ஸிங். அதான் கேட்டேன். உங்களுக்குள் ஏதாவது பிரச்னையா... தனியா இருக்கும்போது, அழறா...'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லேம்மா... நான் வருகிறேன் உன் பிறந்த நாளுக்கு. இது உன் அக்காவுக்குத் தெரிய வேண்டாம். ஒரு சர்ப்ரைஸ்ஸா இருக்கட்டும்,'' என்றான்.

''சரிங்கத்தான். நான் வச்சுடுறேன்,'' என்றாள். கையில் இருந்த போனையே வெறித்துப் பார்த்தான். எத்தனை பொய் சொல்லிச் சமாளிக்கிறாள். என்னைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை போல.

இரவு சுவேகாவுக்கு போன் போட்டான். எடுத்த அவள் ''என்ன, நம்பர் மாறி விட்டதா...?'' என்றாள்.

''இல்லை. உனக்குத்தான் போட்டேன். எப்படியிருக்கே?'' என்றான். சிறிது மௌனத்திற்குப் பின், ''ம்... நல்லாயிருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க. சாப்பிட்டீங்களா...? இப்ப எங்கே இருக்கீங்க?'' என்று கேட்டு விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''வீட்டுலதான் இருக்கேன். என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?'' என்றான் கள்ளென்று.



போனை கட் பண்ணினாள்.

நித்தியன் கடைக்குப் போய் இரண்டு பட்டுப் புடவை எடுத்தான். சில நகைகள் வாங்கினான். அன்று இரவே பெங்களூர் கிளம்பினான்.

## 8

காலையிலேயே வந்துவிட்டான் நித்தியன். சுவேகா அம்மா அவளை எழுப்பப் போனாள்.

''வேண்டாம் அத்தை, அவள் தூங்கட்டும். நான் போய்ப் பார்க்கிறேன்,'' என்றான்.

நேராக சுவேகா அறைக்குப் போனான். அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளையே... சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பின் சேரில் உட்கார்ந்து பேப்பர் படித்தான்.

சுவேகா விழித்ததும் அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. இது கனவா... என்று நினைத்தாள்.

எழுந்து, ''வாங்க!'' என்றாள். கீழே பெல் அடித்துக் காபி கொண்டு வரச் சொன்னாள். பிறகு அவளுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. எழுந்து கீழே போய் விட்டாள்.

பேப்பரை முடித்துவிட்டுப் பார்த்தான். இவள் இல்லை. சிறிது நேரத்தில் சுஜி வந்தாள்.

''சுவேகா...'' என்று இவன் இருப்பதைப் பார்த்து விட்டு, ''அத்தான்...'' என்றாள் ஆச்சரியமாக.

''எப்போ வந்தீங்க? இரவேவா... அதான் நான் கூப்பிட்டும் அவள் வரவில்லையா...? என்ன அக்காவை

ஒரு வாரம் கூட விட்டு இருக்க முடியவில்லையா...?'' என்றாள் கேலியாக.

அவன் சிரித்துக் கொண்டே... ''உன் அக்காவோட பீரோ சாவி எங்கே?'' என்றான்.

''இது கூடவா... உங்களுக்குத் தெரியாது?'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

பக்கத்தில் இருந்த பீரோவைப் பார்த்து... ''இது...'' என்றான்.

''இது உங்களோடது. உங்களுக்குத் தேவையான எல்லாம் இதில்தான் இருக்கு. கல்யாணத்துக்கு அவளுக்கு வாங்கினாளோ... இல்லையோ... உங்களுக்குத்தான் வாங்கினாள், அத்தான்!'' என்று திறந்து காண்பித்தாள்.

அவனே பிரமித்தான். அத்தனையும் அவனுக்கு. டிரஸ், சேவிங் செட்டில் இருந்து, பிரஷ் வரை அழகாக அடுக்கி வைத்திருந்தாள்.

''இந்த டிரஸ் எல்லாம் பிடித்திருக்காத்தான்? நான் அவளைக் கேலி பண்ணுவேன். இதெல்லாம் பிடிக்காமல் போகப் போகுது பார்!'' என்று.

''அவள் சிரிப்பாள். இதை என்னைத் தொடக் கூட விடவில்லைத்தான். அவளுக்குனு உரியதை யாரும் தொடக்கூடாது. அதே மாதிரி அடுத்தவங்க பொருளையும் தொட மாட்டாள். விட்டே கொடுக்க மாட்டா அத்தான். இங்க பாருங்க, நீங்க வந்தபோது உங்களை மறைந்து நின்று போட்டோ எடுத்தாள். நீங்கள் தோட்டத்தில் இருக்கும்போது. குடுடி நான் எடுக்கிறேன் என்றேன். நான் தான் எடுப்பேன். நீ எதுக்கு எடுக்குறே... எனக்கு இதெல்லாம் பிடிக்காது!'' என்றாள்.

''இங்க பாருங்க. எவ்வளவு பெரிய ஆல்பம் போட்டு வைத்திருக்கா என்று. என்னிடம் காட்ட மாட்டேன்



என்று சொல்லிவிட்டாள்,'' என்று அவனுக்குக் காண்பித்தாள்.

ஆல்பம் முழுக்க அவன்தான். விதவிதமான போஸ்களில் இவள் போட்டோவையும் இணைத்து வைத்திருந்தாள்.

''அவள் பொருளை யாருக்கும் தர மாட்டாள். உங்க கிட்ட போய்ச் சொல்றேன் நான். இத்தனை மாதத்தில் இதுவரை உங்களுக்குத் தெரியாமலா இருக்கும். உங்களைப் படுத்தி வைப்பாளே... அத்தான். அவள் யாரு கிட்டயும் அவ்வளவு சுலபமாகப் பழக மாட்டா... உங்களைத்தான் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.''

அவள் நாட்டியம் ஆடுவது போல் போட்டோவைப் பார்த்துவிட்டு, ''உங்க அக்காவிற்கு டான்ஸ் தெரியுமா?'' என்றான்.

''இதானே... வேணாங்கறது. என்னமோ தெரியாத மாதிரி கேட்கறீங்க. கேசட் போட்டு ஆடலாம் வாடி என்றால். என் புருசன் முன் தவிர வேற யார் முன்னும் ஆட மாட்டேன் என்றவள், இதுவரை ஆடிக் காட்டாமலா... இருப்பாள்.

''இல்லை, இரண்டு பேருக்கும் நேரம் இல்லையா...?'' என்றாள்.

''உனக்கு ரொம்ப வாய்...''

''நல்லா டான்ஸ் ஆடுவா... பாட்டும் பாடுவா... இதுவரை பாட்டும் பாடலையா...? நீங்க தூங்கி விடுவீங்க என்ற பயமா இருக்கும்,'' என்றாள் களுக்கென்று.

அவனும் சத்தமாகச் சிரித்தான். இதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள். வந்தவள் இவர்கள்

சிரிப்பதைப் பார்த்துவிட்டு, "சுஜி, அம்மா கூப்பிட் டாங்க," என்றாள்.

"போறேன்... தாயே... போறேன். அதுக்கு எதுக்குப் பொய் சொல்றே..." என்று விட்டுப் போனாள்.

அவள் போனதும் அவனை முறைத்தாள். "எதுக்கு அவகிட்டே பேசிச் சிரிக்கிறீங்க. அவளையும் கெடுக் கவா... ஆ..." என்றாள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு.

"அறிவு கெட்ட முட்டாள். என்ன பேசுவதென்று விவஸ்தை வேண்டாம். அவள் யார் எனக்கு. நான் என்ன பொம்பளைப் பொறுக்கியா. சாதனா, ரேவதி போல எனக்கு அவளும் ஒரு தங்கைதான். இனி ஒழுங்கா பேசு..." என்றான் எச்சரிப்பது போல.

"அப்புறம் எதுக்கு இங்கு வந்திருக்கீங்க. என்னைப் பார்க்கவா... இது கூடவா எனக்குத் தெரியாது."

அவன் திகைத்தான். "நீ புரிந்துதான் பேசுறியா... உன்னையே தொடாத நான்... அவளைப்... போய்... சீ... நினைக்கவே அசிங்கமா இருக்கு. நீ இத்தனை தரம் இறங்கக் கூடாது," என்றான்.

சுஜியின் பிறந்த நாள் கேக் வெட்டினார்கள். அம்மா, அப்பா பரிசு கொடுத்தார்கள். நித்தியன் ஒரு பார்சலை எடுத்து வந்து சுவேகா கையில் கொடுத்தான். அவன் வாங்கி வந்த நகைப் பெட்டியையும் மனைவி கையில் கொடுத்துக் கொடுக்கச் சொன்னான். சுவேகாவே திகைத்தாள். எதுக்கு இவ்வளவு என்றவளிடம், "கொடு," என்றான்.

அக்காவைக் கட்டிக் கொண்டு, கன்னத்தில் முத்தமிட் டாள். "தேங்க்யூக்கா... தேங்க்யூத்தான்!" என்றாள்.



"அத்தான்! நாம இன்று வெளியே போறோம் சாப்பிட," என்றாள். "ம்... சரி. கிளம்புங்க. பார்க்குக்குப் போய் விட்டு, அப்படியே சாப்பிட்டு விட்டு வரலாம்," என்றான்.

மூவரும் கிளம்பி, பார்க்குக்குப் போனார்கள். பின் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தனர்.

அன்றே கிளம்பினான் நித்தியன். சுஜிதான், "நாளை அக்கா பிறந்த நாள். இருந்துவிட்டுப் போங்கத்தான்," என்றாள்.

"எனக்கு லீவு இல்லை. வேலையிருக்குது," என்றான். அறைக்குள் போய், "நீ என்னோடு ஊருக்கு வரு கிறாயா... இல்லையா...?" என்றான்.

"நான் உங்களுடன் வரவில்லை. தனியாக வந்த எனக்கு வரும்போது வரத் தெரியாதா...?" என்றாள்.

"சரி," என்று அவளுக்கு எடுத்து வந்த புடவையை அவளுக்குக் கொடுத்தான். "அட்வான்ஸ் பிறந்த நாள் வாழ்த்து!" என்றான்.

சேலையை அவன் முகத்தில் விட்டெறிந்தாள்.

"இது யாருக்கு எடுத்த சேலை? நீங்க யார் எனக்குக் கொடுக்க. இனி இங்கு வராதீங்க!" என்றாள் ஆத்திரமாக.

"இங்கு வந்தாவது நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்தேன். அதுவும் முடியாமல் போய் விட்டது." கண்களில் கண்ணீர் வழிந்தது.

"இனி இங்கு வரமாட்டேன். வருகிறேன்," என்று கிளம்பி விட்டான்.

## 9

சுவேகா சென்னை வந்து வேலைக்குப் போய்க் கொண் டிருந்தாள். நான்கு மணி இருக்கும். அவளுக்கு போன்

வந்தது. நித்தியனுக்கு ஆக்சிடெண்ட் ஆகிவிட்டது. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. எழுந்து அவளால் நடக்க முடியவில்லை. பக்கத்து சீட்டில் இருந்த மாலா... ''என்னடி... ஏன்... ஒரு மாதிரி இருக்கே?'' என்றாள்.

சுவேகா அழுதுவிட்டாள். விஷயத்தைக் கேள்விப்பட்டதும் மாலாவும் கூட வந்தாள். சுவேகா கூட ஹாஸ்பிடலுக்கு. நித்தியனுக்குக் கட்டுப்போட்டுப் படுக்க வைத்திருந்தனர். வலது கை, முட்டி, காலில் சிராய்ப்பு என்று லேசான அடிதான்.

அவனைப் பார்த்ததுமே... சுவேகா மயங்கி விழுந்து விட்டாள். அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினர். அவள் அழுத அழுகை கொஞ்சமில்லை. நித்தியனே... எனக்கு நல்லாத்தான் இருக்கு. நீ அழாதே சுவேகா,'' என்றான்.

அவள் முகம் வீங்கி விட்டது.

டாக்டர் வந்து இப்படிக் கூட்டம் போடாதீங்க. எல்லோரும் வீட்டுக்குப் போங்க. ஒருத்தர் மட்டும் இருங்க என்றார்.

அவன் அப்பா, ''நான் இங்கு இருக்கேன். நீங்க எல்லாம் போங்க,'' என்றார்.

சுவேகா இரவு முழுவதும் தூங்கவில்லை. அன்று ஒரு நாள் காலையில் அருண் ஆப்பிளைக் கொடுத்து நறுக்கித் தரச் சொன்னான். இவள் கையில் வைத்துக் கொண்டு, கத்தியில் ஆப்பிளை நறுக்கினாள். அது ஆப்பிளையும் நறுக்கி உள்ளங்கையையும் நன்றாக நறுக்கி விட்டது.



இரத்தம் கொட்டியது. இவள் கையை வேகமாக உதறினாள். நித்தியன் ஓடி வந்து கையைப் பிடித்துக் கொண்டான். ''முட்டாள்! என்ன இது. இரத்தம் வரும்போது இப்படிக் கையை உதறலாமா? இது தெரியாதா உனக்கு'' என்று பாக்கெட்டில் இருந்த கர்ச்சீப்பால் கட்டுப் போட்டு விட்டு, ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனான்.

வீட்டுக்கு வரும்போது, ''நான் ஊருக்குப் போகிறேன்,'' என்றாள்.

''ஏன்...? இதுக்குப் போய் எதுக்கு ஊருக்கு? இங்கேயே... இரு,'' என்றான்.

''வேலை பார்க்காமல் ஒரு நேரச் சாப்பாடு யார் போடுவா...'' என்றாள்.

கண்களில் கண்ணீர் வழிந்தது. அன்று இரவு நல்ல ஜூரம் அடித்தது. ஊரில் கொண்டு விட்டு விட்டு வந்து விட்டான். இங்கு இருந்தால் யார் பார்ப்பாங்க அவளுக்கு.

மறுநாள் காலையில் அவள் மாமனார் வந்துவிடவும், சுவேகா டிபன் எடுத்துக் கொண்டு ஹாஸ்பிடலுக்குப் போனாள். ''நான் பகல் முழுவதும் இருக்கேன் மாமா. நீங்க ரெஸ்ட் எடுத்துட்டு, இரவு வாங்க,'' என்று சொல்லி விட்டுப் போனாள்.

அவன் அறையைத் திறந்து கொண்டு உள்ளே போனவள், அப்படியே நின்று விட்டாள். அவன் தலையை மடியில் வைத்துக் கொண்டு ஒரு பெண் இட்லியை எடுத்து ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

இதைப் பார்த்த அவளுக்கு, அந்த ஹாஸ்பிடலே... தன் தலையில் இடிந்து விழுந்தது போல் இருந்தது.

''கதவைத் தட்டிவிட்டு வரும் நாகரிகம் கூடத் தெரியாது. இப்படி மாடு மாதிரி வந்து நிக்கிறே...'' என்று அந்தப் பெண் எரிந்து விழுந்தாள்.

இவளுக்குக் கை, கால் எல்லாம் நடுங்கியது. கண்கள் இதோ உடைந்து விடுவேன் என்றன. குனிந்த தலை நிமிரவில்லை.

நித்தியன், ''வா சுவேகா...'' என்றான். இவள் கையில் இருந்த டிபன் கூடையைக் கீழே வைத்துவிட்டு, ''சாரி...'' என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வெளியே போய் விட்டாள்.

நித்தியனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. வசு பேசியது. ''ஏன் வசு அவளை இப்படிப் பேசினே... நீ இருப்பது அவளுக்குத் தெரியுமா? அதோட இது ஹாஸ்பிடல். படுக்கை அறை இல்லை. நான்தான் இருப்பேன் என்று வந்திருப்பாள்,'' என்றான்.

வசு புலம்பத் தொடங்கி விட்டாள் ''உங்களுக்கு என்றைக்குமே... அவதான் பெரிசு. நான் எத்தனை வேதனையடைந்தேன் தெரியுமா...? இராவெல்லாம் எப்படித் துடித்தேன். எப்ப விடியும் என்று. வந்ததுக்கு நீங்க நல்லா என்னைத் திட்டி விட்டீங்க!'' என்று கண்ணைக் கசக்கினாள்.

''சரி வசு, நீ அழாதே!'' என்றான். ஒரு கையில் அவளை வருடியவாறு. அவன் மனதில் சுவேகா எங்கு போயிருப்பாள் என்று நினைத்துக் கொண்டிருந்தான்.



சுவேகா பக்கத்தில் இருந்த கோயிலுக்குப் போய் விட்டாள். இனி அங்கு போக முடியாது.

வீட்டுக்கும் போக முடியாது. ஏன்... என்பார்கள். என்ன பதில் சொல்ல முடியும். நான் இரவு வரை இங்கு இருந்து விட்டு, பிறகு வீட்டுக்குப் போகலாம் என்று உட்கார்ந்திருந்தாள்.

டிபனை அவனுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டு வந்திருந்தாள். பசி வேறு. தலையை வலித்தது. இந்த அதிர்ச்சியை அவளால் தாங்க முடியவில்லை. வீட்டிற்குப் போய்ப் படுத்தால் தேவலை போல் இருந்தது. சாமி கும்பிட்டு விட்டு வீட்டுக்குப் போய் விட்டாள். இவள் வீட்டுக்கு வந்ததை யாரும் கவனிக்கவில்லை. நேராகத் தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

அழுகை முட்டி மோதிக் கொண்டு வந்தது. அடக்கி வைத்ததெல்லாம் கண்ணீரால் கரைத்தாள். எப்படி அவள் மடியில் படுத்திருக்கான். இது ஒரு ஹாஸ்பிடல் என்ற நினைப்புக்கூட வரலேயே... எப்படி என்னைத் திட்டுகிறாய். ஒரு வார்த்தை கேட்டானா... பேசாமல் இருக்கானே... என்று அழுதாள். இனி நான் உயிருடன் இருக்கலாமா... என்று நினைத்தாள்.

டிஸ்சார்ஜ் ஆகி, வசு வீட்டுக்குப் போய் விட்டான். வீட்டில் இதைப் பற்றி யாரும் கேட்கவில்லை. இவள் எப்பவும் போல் வேலைக்குப் போய் வந்தாள். அங்கு போய் சுவேகா பார்க்கவில்லை.

இரவு ஹாஸ்பிடலுக்கு வந்த அப்பாவிடம் நித்தியன் கேட்டான். சுவேகா வீட்டுக்கு வந்து விட்டாளப்பா

''இல்லையே... வரவில்லை. இங்குதானே வந்தா. இன்னும் வரவில்லை என்றதும் நானே வந்தேன்,'' என்றார்.

நித்தியன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவள் செல்லுக்கு போன் போட்டான். சுவிட்ச் ஆஃப் என்றது. வீட்டுக்குப் போட்டுக் கேட்டால் அவள் இன்னும் வரவில்லை என்றனர்.

நித்தியன் மறுபடியும் போய்க் கட்டு அவிழ்த்துவிட்டு வெறும் பிளாஸ்திரி மட்டும் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்தான். இவள் அவனைக் கண்டு கொள்ளவில்லை. நித்தியனுக்கு ஆத்திரம் வந்தது. திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாளே... என்று.

ஒரு வாரம் லீவில் வீட்டில் இருந்தான். ஒரு வார்த்தை கூட சுவேகா பேசவில்லை... மறுவாரத்தில் இருந்து அவனும் ஆபீஸ் போய் வந்தான்.

ரேவதி அடிக்கடி தோட்டத்தில் போய் நின்று போனில் பேசுவதைப் பார்த்தாள். ''யார்கூட இப்படித் தனியாகப் போய்ப் பேசுற?'' என்றாள்.

அவள் கொஞ்சம் துடுக்காகப் பேசுவாள். ''அதை நீங்க கேட்டு என்ன செய்யப் போறீங்க?'' என்றாள்.

''ரேவதி! நான் உன் அண்ணி. உன் நல்லது, கெட்டதில் எனக்கும் பங்கு இருக்கு. இந்த வயதில் நீ எதிலும் போய் மாட்டிக் கொள்ளக்கூடாது என்றுதான் சொல்கிறேன்,'' என்றாள்.

''எனக்கு எல்லாம் தெரியும். நீங்க ஒண்ணும் அட்வைஸ் பண்ண வேண்டாம்,'' என்றாள்.



ஒரு நாள் ரேவதி பிரண்டைச் சந்தித்தாள்.

அவளிடம் மெல்ல விசாரித்தாள். அவள் ரேவதி திவாகர் என்பவருடன் அடிக்கடி வெளியே போகிறாள். ஹோட்டல், பார்க், பீச் என்று. அவன் அவ்வளவு நல்லவன் இல்லை. சொன்னால் கேட்க மாட்டேன்கிறாள்,'' என்றாள்.

அவன் யார்...? என்ன என்று விசாரித்துக் கொண்டாள். அவன் காலேஜுக்கு வரும் வழியில் நின்றாள். அவன் வரவும், ''ஹலோ திவாகர்!'' என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்துவிட்டுத் திகைத்தான். ''நீங்கள் யார்...? உங்களை இதற்கு முன் நான் பார்த்தது இல்லையே...'' என்றான்.

''என்னை உனக்குத் தெரியாது. ஆனால் உன்னை எனக்குத் தெரியும். ரேவதி சொல்லியிருக்கா,'' என்றாள்.

''ரேவதியா...'' அவன் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

''வா திவாகர். அந்த ரெஸ்டாரண்டில் போய்ப் பேசலாம்.''

''நான் வரலை. நீங்க யார்...?'' என்றான்.

''நான் ரேவதியோட அண்ணி. உன்னிடம் நான் பேச வேண்டும்,'' என்றாள் கண்டிப்பாக.

அவன் அவளுடன் சென்றான். காபிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, சுவேகா பேச்சை ஆரம்பித்தாள்.

''நீ ரேவதியை விரும்புறியா...?'' என்றாள் நேரடியாக.

''இல்லை. சும்மா ஜஸ்ட்... பிரண்டுதான்!'' என்றான்.

''அப்புறம் எதுக்கு அடிக்கடி போன் பண்ணுறே... பிரண்ட்டுனா... காலேஜில் தினமும் பார்த்துக்கிறீங்க

வீட்டுக்கு வந்ததும் எதுக்கு அத்தனை தடவை போன் பண்ணுறீங்க?'' என்றாள்.

''சும்மா... தான். ஏதாவது டவுட் கேட்டிருப்பேன்,'' என்றான்.

''அதுக்கு நீ தாராளமாக வீட்டுக்கு வரலாமே...'' என்றாள்.

''நீ எல்லோரிடமும் அப்படித்தான் பழகுவியா...?

''உன் அப்பா, அம்மா என்ன செய்றாங்க. படிக்க வேண்டிய வயதில் இப்படித் தப்புப் பண்ணலாமா...? இதனால் உன் படிப்பும் கெட்டு, அவள் படிப்பும் கெட்டு, இரண்டு பேருடைய லைஃபும் வீணாப் போகுது.''

''இதையெல்லாம் என்கிட்டே வந்து எதுக்கு சொல்றீங்க. உங்க வீட்டுப் பெண்ணைக் கண்டிச்சு வைங்க. நான் அப்படித்தான் பழகுவேன். உங்களால் என்ன செய்ய முடியும்?'' என்றான் கோபமாக.

''நான் பிரின்ஸிபாலைப் பார்ப்பேன்,'' என்றாள்.

''தாராளமாக. நீங்க யாரை வேண்டுமானாலும் பார்க்கலாம். நான் என்ன, அவ கையைப் பிடித்தா இழுத்தேன்.''

''நீ அவளை வரச் சொல்லி, பார்க், பீச், ஹோட்டல் என்று சுத்தலே... இது தப்பில்லையா?''

''உங்க வீட்டுப் பெண்ணே, இப்படி அலையறா... என்னை வந்து சொல்ல வந்திட்டீங்க. என் கூட மட்டுமா சுத்துறா... போன வாரம் இன்னொருத்தன் கூடப் போனாள்.

''என் பிரண்ட்ஸ் எல்லோருடனும் சேர்ந்து தண்ணியடிக்கிறா... எல்லோருக்கும்தான் முத்தம் கொடுக்



கிறா... நான் மட்டும் என்னவோ... அவ கூடச் சுத்துற மாதிரிப் பேசுறீங்க.''

சுவேகா அதிர்ந்தாள். தண்ணி அடிக்கிறாளா...?

''நீ கோபப்படாதே, திவாகர். உன் நன்மைக்கும்தான் சொல்றேன். முதலில் படிப்பை முடிங்க. பிறகு காதல், கல்யாணம் என்பதைப் பத்தி நினைக்கலாம்,'' என்றாள் தணிவாக.

''இப்ப யாரு காதல் பண்றா... கல்யாணம் பண்றா... இதெல்லாம் ஒரு ஜாலி. அவ்வளவே... இதுக்குப் போய் இப்படி அலட்டுறீங்களே... எனக்கு நேரமாகி விட்டது. நான் போகிறேன்,'' என்று போய் விட்டான்.

சுவேகா அப்படியே உட்கார்ந்திருந்தாள். இவளை எப்படிக் கண்டிப்பது? காதலித்தால் கூடப் பரவாயில்லை. இப்படி சும்மா... ஜாலி என்ற பேரில் தன்னைத் தொலைத்து விட்டால், இவளின் கதி? வீட்டுக்கு வந்து விட்டாள்.

ரேவதி வீட்டுக்கு வந்ததும் அறைக்குள் புகுந்து கொண்டாள். சுவேகா போய் எழுப்பினாள். அவளைப் பார்த்ததும் வெடித்தாள். ''எதுக்கு என் விசயத்தில் தலையிடுறீங்க. திவாகரைப் பார்த்து ஏன் மிரட்டுனீங்க? உங்களை யார் வரச் சொன்னது காலேஜுக்கு? அவனை நான் லவ் பண்ணுகிறேன். அவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்,'' என்றாள்.

''அவன் உன்னை விரும்பவில்லை ரேவதி. நீயாக எதையாவது நினைத்துக் கொண்டிருக்காதே... நீ அவனை விரும்பின என்றால், எதற்கு அவன் பிரண்ட்ஸ் கூட எல்லாம் போறே... இதுதான் காதலா...?'' என்றாள்.

"இவனை லவ் பண்ணினால், அவன் பிரண்ட்ஸ் கூட பழகக் கூடாதா...?" என்றாள்.

"பழகுறது வேறு. கூத்தடிப்பது வேறு. அவன்களுடன் சேர்ந்து தண்ணி அடிக்கிறியாம், இது என்ன?" என்றாள்.

"நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உங்களுக்கென்ன?"

விட்டாள் ஒரு அறை. "எனக்கென்ன, எனக்கென்ன என்கிறே.. உன் வாழ்வு பாழாகக் கூடாது என்றுதான்டி, இந்தப் பாடு படுறேன்."

"எல்லாம் எனக்குத் தெரியும். என் வாழ்வைக் காப்பாற்ற. நீங்க சொல்ல வேண்டாம் எனக்கு."

"இங்கே பார். நீ அவன்களுடன் பழகுவதை நிறுத்து. இல்லையென்றால். உன் அம்மா, அண்ணாவிடம் சொல்லி விடுவேன்," என்றாள்.

"தாராளமாகச் சொல்லலாம். நீங்க சொல்வதை யாரும் நம்ப மாட்டாங்க," என்றாள்.

"ஏன்...?"

"என்மீது அவ்வளவு நம்பிக்கை. நான் உங்களைப் பற்றித் தப்பாகச் சொன்னால் நம்பி விடுவாங்க," என்றாள்.

"சரி. அதைப் பிறகு பார்ப்போம். நீ இனி ஒழுங்காக இரு. அவனை நீ நம்பாதே. உன்னை அவன் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். அவனை நீ மறந்து விடு." என்றாள்.



"நான் மறக்க மாட்டேன். அவன் என்னைக் கைவிட மாட்டான். நீங்க இப்படித்தான் சொல்வீங்க," என்று சொன்னாள்.

"ரேவதி! உனக்கு நான் கெடுதல் நினைப்பேனா... நீ காதலிப்பது தப்பு என்று சொல்லவில்லை. நீ தேர்ந்தெடுத்திருக்கும் ஆள்தான் சரியில்லை என்கிறேன். அவனிடம் கவனமாக இரு." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

ஆனால் ரகசியமாகக் கண் காணித்தாள். அவள் பிரண்ட்சிடம் சொல்லி வெளியில் போனால் எனக்கு உடனடியாக போன் பண்ணு என்று நம்பர் கொடுத்தாள்.

ஒரு நாள் மாலை இவளுக்கு போன் வந்தது. ரேவதியோட பிரண்ட் போன் பண்ணினாள். "இன்று மாலை ஹோட்டலில் ஒரு பார்ட்டி. அதற்குத் திவாகர், ரேவதி எல்லோரும் போறாங்க," என்றாள்.

"சரிம்மா. ரொம்ப தேங்க்ஸ்!" என்றாள். எந்த ஹோட்டல் என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள். இவ்வளவு பெரிய ஸ்டார் ஹோட்டலா... என்று நினைத்தாள்.

கொஞ்ச நேரத்தில் சுவேகா, அந்த ஹோட்டலுக்குப் போனாள். எல்லோரும் தண்ணி அடித்துக் கொண்டும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டும் ஆடிக் கொண்டிருந்தனர். நிறையப் பெண்களும், ஆண்களும். இவள் ரேவதியைத் தேடினாள். அவளும் ஆடிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் ரேவதியை மட்டும் கூட்டிக் கொண்டு, திவாகர் ஒரு அறைக்கு செல்வதைப் பார்த்தாள். பின்னாடியே இன்னும் சிலர் போனார்கள். ஏதோ

விபரீதம் நடக்கப் போகுது என்று அவள் உள் மனசு சொன்னது.

இவள் இங்கு உட்கார்ந்திருப்பதை அந்த வசு வேறு பார்த்து விட்டாள். உள்ளுக்குள் நெருப்பு கனன்றது. இவளை எப்படியாவது விரட்டி அடிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே... நித்தியனுக்கு போன் போட்டாள். இந்த ஹோட்டலுக்கு உடனே வாங்க என்று. அவனும் வர்றேன் என்றான்.

சுவேகா வேகமாக அந்த அறையை நோக்கிப் போய்க் கதவைத் தட்டினாள். சிறிது நிமிடத்துக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. இவள் வேகமாக உள்ளே போனாள். இவள் அங்கே கண்ட காட்சி, இவள் உயிரையே உலுக்கியது.

வேகமாகப் போய், ரேவதியைக் கட்டிலில் இருந்து இழுத்துக் கன்னத்தில் இரண்டு அறை விட்டாள். அவளுக்குப் போதை தெளிந்தது. அவளுக்கு டிரஸ்சை எடுத்து அவசரமாகப் போட்டு விட்டாள். திவாகரையும், பக்கத்தில் நின்று வீடியோ எடுத்தவனையும் சரமாரியாக அடித்தாள்.

அவன்கள் அத்தனை பேரும், சுவேகாவைப் பிடித்துக் கொண்டனர். "ரேவதி, நீ போ... நான் வந்து விடுவேன்," என்று கத்தினாள். அவளும் போய் விட்டாள்.

திவாகர் அவள் சேலையைப் பிடித்து இழுத்தான். சுவேகா கத்தினாள். "எடுடா... வீடியோவை. இவளால் இன்று எல்லாம் கெட்டது. அவளை விட இவள் நல்லாத் தான் இருக்கா...!" என்று திவாகர் அவளை அணைக்கப்



போனான். அவள் எட்டி உதைத்தாள். எல்லோரும் அவளைப் பிடித்துக் கொண்டனர்.

சுவேகா கத்தினாள். என்னைக் காப்பாற்றுங்கள் என்று அவள் கத்திய கத்தல் வெளியில் கேட்டது.

வசுவோ... இவன் வர இத்தனை நேரம் என்று நித்தியனைத் திட்டிக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீதர் கான்பரன்ஸ் முடிந்து காரிடாரில் நடந்து வந்து கொண்டிருந்தான். வந்தவன் காதில் அந்த அலறல் சத்தம் கேட்டது. மறுபடியும் வேகமாகத் திரும்பிப் போனான்.

சத்தம் வந்த அறையின் முன் நின்று கதவைத் தட்டினான்.

அது திறக்கவில்லையென்றதும் வேகமாக உடைத்து விடுவது போல் தட்டினான். அவனின் சத்தம் அலறலாகக் கேட்டது.

கதவு தட்டிய வேகத்தில் அவன்கள் பயந்து, கதவைத் திறந்து விட்டனர். வேகமாக உள்ளே போனான். சுவேகாவைப் பார்த்து அலறி விட்டான். "சுவேகா... கா.. நீ எங்கே இங்கே..?" அவனுக்கு வந்த ஆத்திரத்தில் அவன்களை நொறுக்கி எடுத்து விட்டான் அத்தனை பேரையும்.

சுவேகா அவசரமாகச் சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள்.

"ஸ்ரீதர்! நீங்க இங்கே எங்கே... என்னைத் தெய்வம் மாதிரி வந்து காப்பாத்தினீங்க!" என்றாள்.

வெளியில் உட்கார்ந்து பேசலாம் என்று காபிக்குச் சொல்லிவிட்டு, நீ எங்கே இங்கே என்பது போல் பார்த்தான்.

சுவேகா நடந்ததை முழுவதும் சொன்னாள். "நீ செஞ்சது சரிதான். ஆனால் நீயாக வந்திருக்கக் கூடாது. உன் ஹஸ்பெண்ட் எங்கே? அவருகிட்டேயும் நீ சொல்லியிருக்கலாமே... இப்படித் தனியா வரலாமா...? நான் வரவும் போச்சு. இல்லையென்றால் என்ன ஆகியிருக்கும்?"

"நான் சின்னப் பசங்கதானே.. என்று நினைத்தேன். இப்படிப் பண்ணுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை," என்றாள்.

"சின்னப் பசங்களா.. சின்னப் பசங்க செய்யும் வேலையா.. இது! எதுக்கும் நீ ஜாக்கிரதையாக இரு."

"என்னை நீங்க சந்தேகப்படுறீங்களா..?" என்றாள்.

"சேச்சா... என்ன கேள்வி இது சுவேதா... உன்மேல் நான் போய்ச் சந்தேகப்படுவேனா..?" என்றான்.

"என்மேல் உங்களுக்குக் கோபம் இருக்கும். இருந்தாலும் என்னைக் காப்பாத்தினதுக்கு மீண்டும் நன்றி."

"என்ன பேசுறே.. சுவேதா.. இந்த இடத்தில் யாராக இருந்தாலும் நான் காப்பாற்றியிருப்பேன். அதுவும் நீயாக இருக்கும் போது எப்படிப் போவேன். உன் மீது கோபம் தான். இல்லை என்று நான் சொல்லவில்லை. அதுக்காக இந்த நிலைமையில் உன்னை விட்டுப் போவேனா...?" என்றான்.

"சுவேகா! உன்னைப் பற்றி ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது என் மனைவியிடம் பேசிவிடுவேன்," என்றான் சிரித்துக் கொண்டே.



"அவங்க உங்களை உதைக்கப் போறாங்க. எப்பப் பார், என்ன சுவேகாவைப் பற்றிப் பேச்சு?" என்று அவளும் சிரித்தாள்.

இதையெல்லாம் வசு நித்தியனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவர்கள் அறையில் இருந்து வந்தது முதல் நித்தியனும் பார்த்தான். வசு வேறு ஏற்றி விட அவனுக்கு உள்ளுக்குள் கொதித்தது. எப்படி அடுத்தவன் கூடப் பேசிச் சிரிக்கிறா...

வசு சொன்னாள். "மூன்று பேர் வந்தார்கள். அறைக்குள்ளும் மூன்று பேரும்தான் போனார்கள். எப்படித்தான் இப்படி இருக்காளோ... இரண்டு பேர் போய்விட்டார்கள். இப்ப இவன் கூடப் பேசிச் சிரிச்சிக்கிட்டு இருக்கா.

"உங்களை அவமானப்படுத்தத்தான் இப்படிப் பண்ணுறா... வேலைக்குப் போறாளே... அங்கு எப்படி இருப்பாளோ.. இத்தனை அழகா இருந்தா எவன் விடுவான்? இல்லை இவள் தான் சும்மா இருப்பாளா..?"

வசு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டே சொன்னாள். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். இனி என்ன நடக்கப் போகிறதோ...?

"ஏங்க, நீங்க பாட்டுக்குப் போய் அவளை அடித்து, வீட்டை விட்டுத் துரத்திவிடாதீங்க. அப்புறம் உங்களுக்குத்தான் அவமானம். அவர்கள் கேட்டால் இதையெல்லாம் சொல்ல முடியுமா..? அசிங்கம் உங்களுக்குத் தான்."

ஸ்ரீதரோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, "போகலாமா...?" என்றாள்.

"போகலாம். உன்னை நானே டிராப் பண்ணி விட்டுப் போறேன்," என்றான்.

''சரி. எனக்கும் உடம்பில் தெம்பில்லை,'' என்றாள்.

''சுவேகா... உனக்கும் கல்யாணம் ஆகி ஒரு வருடம் இருக்குமே.. ஏன் இன்னும் குழந்தையைத் தள்ளிப் போடுறே..''

சுவேகாவுக்குக் கண் கலங்கிவிட்டது. அவன் பார்க்காத வாறு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இதை ஸ்ரீதரும் கவனித்தான். ஏன்.. இவ கண் கலங்குறா... இதற்கு மேல் கேட்டால் நாகரிகமாக இருக்காது என்று விட்டு விட்டான்.

''உங்க குழந்தைக்கு என்ன வயசு?''

''ஒரு வயசு. சேட்டை ரொம்ப. என்னைப் பார்க்காமல் தூங்கமாட்டான். நான் பக்கத்தில் படுக்க வேண்டும். இப்படி ஆபீஸ் விசயமாக வெளியே வந்தால் போனில் பேசித் தூங்கச் சொல்வேன்.''

''நான் பேசட்டுமா ஸ்ரீதர்? எனக்கு ஆசையா இருக்கு.''

''ம்.. பேசு,'' என்று அவன் பேசிவிட்டு, அவளிடம் கொடுத்தான்.

சுவேகா வாங்கி, ''ஹலோ சார், எப்படி இருக்கீங்க? நான் யார் பேசுறேன் தெரியுமா...?'' என்றாள்.

''தெரியும். சுவேகா.. ஆன்ட்டி தானே..'' என்றது மழலையில்.

''ஆமாம்டா, கண்ணா.. நான்தான் பேசுறேன்.... உனக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''டாடி... சொன்னாங்க,'' என்றது.



ஸ்ரீதர் வாங்கி மனைவியிடம் பேசினான். ''கலா! சுவேகாவிடம் பேசுறியா...?'' என்றான்.

''இந்தா சுவேகா.. பேசு,'' என்றான்.

அவள் சங்கடத்துடன் நெளிந்தாள். ''என்னைப் பற்றித் தப்பாகச் சொல்லி வைத்திருப்பீங்க. நான் என்னத்த பேச...'' என்று சிரித்தாள்.

''உங்க மனைவி எப்படி ஸ்ரீதர்?'' என்றாள்.

''எப்படினா...?''

''உங்களை எப்படிக் கவனித்துக் கொள்வார்கள்?''

''நீ எப்படி உன் ஹஸ்பெண்ட்டைக் கவனிக்கிறே... அதே மாதிரிதான். உன் அளவிற்கு இல்லையென்றாலும் உன்னை விட எதிலும் குறைந்தவள் இல்லை என் மனைவி!'' என்று சிரித்தான்.

''குட்... இப்படித்தான் இருக்கணும். யாரிடமும் எந்த சூழ்நிலையிலும் மனைவியை விட்டுக் கொடுக்காமல்!'' என்றாள்.

''என்னைத் திட்டுவாங்களா, ஸ்ரீதர்?''

''அவ உங்களை அப்படி திட்டவில்லை என்றால், நீங்கள் திருந்தி இருப்பீங்களா?'' என்று.

''நீ எதுக்கு வேலைக்குப் போறே... சுவேகா..?''

''வீட்டில் பொழுது போகணுமே..!'' என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு, காரின் அருகில் வந்ததும், ''ஸ்ரீதர்! நான் டிரைவ் பண்ணட்டுமா... டென்சனா இருக்கும் போது எனக்கு டிரைவ் பண்ணினா பிடிக்கும்.''

"எதுக்கு, எங்காவது கொண்டுபோய் இடிக்கவா.. நான் முழுசா ஊர் போய்ச் சேர வேண்டாமா..?"

அவள் களுக்கென்று சிரித்து விட்டாள். "அவர் கூட இப்படித்தான் சொல்லுவார். நான் வரமாட்டேன். என் கோபத்தை எல்லாம் கார் வேகத்தில் காட்டுவேன். ஒரு நாள் வேண்டும் என்றே, எதிரில் வண்டி வருவது தெரிந்தே வேகத்தை நான் குறைக்கவில்லை. அவர் என் கையைத் தள்ளிவிட்டுச் சட்டெனத் திருப்பிவிட்டார்."

சுவேகாவை வீட்டுப் பக்கத்திலேயே இறக்கி விட்டு விட்டு ஸ்ரீதர் போய்விட்டான்.

சுவேகா அவர்கள் அறைக்குப் போனாள். அங்கு ரேவதி நின்று அவள் அண்ணனுடன் பேசிக் கொண்டிருந்தாள். "சரி. நீ போ.. நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றான்.

ரேவதி போனதும் சுவேகாவிடம், "எங்க போயிட்டு வர்றே..?" என்றான். இவள் இந்தக் கேள்வியை எதிர் பார்க்கவில்லை. இதற்கு என்ன பதில் சொல்வது? ஹோட்டலுக்குப் போனேன் என்று சொன்னால் ஏன்.. எதற்கு என்பான். காரணம் சொல்லணும். ரேவதியைக் காட்டிக் கொடுத்த மாதிரி ஆகிவிடும். வேறு என்ன சொல்லலாம் என்று யோசிக்கும்போதே.. அவன் அவளை அறைந்தான்.

"என்னடி யோசிக்கிறே... என்ன பொய் சொல்லலாம் என்றா.... நீ ஹோட்டலுக்குப் போனது. அறை எடுத்து அவனோடு போனது. இருவரும் காபி குடித்துவிட்டுப் பேசிச் சிரித்தது. நீ அவனுடன் காரில் வந்தது. எல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு என்ன தைரியம் இருந்தால்



இப்படிச் செய்வே... என்னைச் சொல்ல வந்துட்டே.... இப்ப நீ செய்வதற்குப் பேர் என்ன?" என்று அடித்தான்.

சுவேகாவுக்கு அதிர்ச்சியாகப் போய் விட்டது. என்ன இவன் என்னைத் தப்பாகப் புரிந்து கொண்டானே... இவனுக்கு எப்படிப் புரிய வைப்பது.

"நீங்க என்னைச் சந்தேகப்படுறீங்களா..?" என்றாள்.

"ஆமாம். கண்ணாலே பார்த்தேன். அவன் கூட அறையில் இருந்து வெளியே வந்ததை. இன்னும் சந்தேகப்படுறியா என்று வேறு கேட்கிறே..." என்று அடித்தான்.

"நான் சொல்வதைக் கேளுங்கள். நான் தப்பு பண்ணவில்லை," என்று அழுதாள்.

"அப்புறம் எதுக்கு அங்கு போனே... காரணத்தைச் சொல்லு," என்றான்.

என்ன காரணம் சொல்லுவாள். நா.. நான் சும்மாதான் சாப்பிடப் போனேன் என்றாள்.

அவளுக்குத் தலை சுற்றியது. அவன் அடித்த அடி, அவளால் தாங்க முடியவில்லை.. "என்னை அடிக்காதீங்க. நான் தப்புப் பண்ணவில்லை," என்றாள்.

"நான் உன்னிடம் படுக்கவில்லை யென்றதும் இது மாதிரி நீ அலையறீயா...? உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். என்னைப் பழிவாங்கத்தானே.... இப்படிப் பண்ணினே... வாடி... இதுக்குத்தானே... இப்படிப் போனே..." என்று அவள் சேலையைப் பிடித்து இழுத்தான்.

"ஐயோ.. விடுங்க!" என்று கத்தினாள். "நீ வீட்டை விட்டுப் போ. இங்கு இருக்கக் கூடாது. நீ

இப்படிப்பட்டவள் என்று தெரிந்துவிட்டது. இதுக்குத் தான் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை பத்து நாள் வீடு போட்டுவிட்டு ஊருக்குப் போறீயா?'' என்று வார்த்தையால் அடித்தான்.

சுவேகா வாயைத் திறக்கவில்லை. அழுது கொண்டிருந்தாள். அவள் எவ்வளவோ கெஞ்சினாள். ''நான் தப்புப் பண்ணுவேனா.. நான் தப்புப் பண்ணவில்லை. ஹோட்டலுக்குப் போனது நிஜம். காபி சாப்பிட்டது நிஜம். அவர் எனக்குத் தெரிந்தவர். ஆனால் நான் எந்த தப்பும் பண்ணவில்லைங்க,'' என்றாள்.

''பொய் வேறா பேசறா..?'' என்றான்.

அவன் கை இதுவரை அவளை அடிக்கத்தான் அவள் மேல் பட்டிருக்குது. அதை நினைத்து அழுதாள். உடம்பு எல்லாம் வலித்தது. எழுந்து அவள் அறைக்குச் சென்றாள்.

நித்தியனுக்கே தன் மீது வெறுப்பு வந்தது. எப்படி அடித்து விட்டேன். இருந்தும் அவள் மீது ஆத்திரம் அடங்கவில்லை. அவள் அழுவது கேட்டது. கண்களை இறுக மூடித் திறந்தான்.

## 10

நித்தியன் காலையில் எழுந்திருக்கும் போது, சுவேகாவின் அறைக் கதவு திறந்து கிடந்தது. கீழே போனான். சுவேகா அங்கில்லை. தோட்டத்தில் பார்த்தான். அங்கும் இல்லை. அவன் அம்மா, ''எங்கேடா... அவள்?'' என்றார்.

''ஊருக்குப் போனாள் அம்மா,'' என்றான்.



''ஊருக்கா.. என்ன இப்ப... அதுவும் யாரிடமும் சொல்லாமல். இவ்வளவு சீக்கிரமா..?'' என்றார்.

''போகணும் என்றாள். போ,'' என்றேன்.

சுவேகா போய்ப் பதினைந்து நாளானது. இவனும் இதுவரை ஒரு போன் பண்ணிப் பேசவில்லை. அவளும் பண்ணவில்லை.

சுவேகா அப்படித்தான். மனது கஷ்டமாக இருந்தால் ஊருக்குப் போய்விடுவாள். ஒரு வாரம் சமைக்க மாட்டாள். எந்த வேலையும் செய்ய மாட்டாள். அவள் மாமியார் திட்டுவார். அதையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டாள்.

பிறகு அவளாகவே வந்து வேலையைப் பார்ப்பாள். அவளுக்குத் தேவையானதை அவளே வாங்கிக் கொள்வாள். இதுவரை நித்தியன் அவளுக்கு எதுவும் செய்யவில்லை. அவளும் கேட்டதில்லை.

தீபாவளிக்குக் கூட அவளேதான் புடவை எடுத்துக் கொண்டாள். ஊருக்குப் போனால் எடுத்து வருவாள். சாதனா, ரேவதிக்கும் எடுத்துத் தருவாள்.

வசு இப்போ எல்லாம் சுவேகாவை ரொம்ப தரக்குறைவாகத் திட்டினாள். நித்தியனாலேயே பொறுக்க முடியவில்லை. ''வசு, விடு அந்தப் பேச்சை,'' என்றான்.

''நீங்க இப்படி இருப்பதால்தான் அவ அப்படி அலையறா... நான் எதுவும் சொல்லக் கூடாது.''

''அவ உன்னைப் பற்றி ஒரு நாள் கூடப் பேசினதில்லை... நீ ஏன் அவளைப் பற்றிப் பேசறே... எப்பப் பார்த்தாலும் திட்டுறே...'' என்றான்.

வசு, ''அவ யார் கூடவாவது ஓடிப் போயிருப்பா,'' என்றாள்.

விட்டான் ஒரு அறை. இதுவரை நான் வசுவை அடித்ததில்லை. சண்டை போட்டதுமில்லை. சுவே காவைப் பற்றித் திட்டியதால், அவளுக்குப் பொறாமை. அதான் பேசுகிறாள் என்று நினைத்தான். இப்போ இப்படிப் பேசுகிறாள்.

வசு அழுதுவிட்டாள். அவளைச் சமாதானப்படுத்த முடியவில்லை. சுவேகாவைத் திட்டினாலும் கொஞ்ச நேரம் உம்மென்று இருப்பாள். அவளே வந்து பிறகு பேசுவாள்.

நித்தியன் போய்விட்டான். அவன் தினமும் வசு வீட்டுக்குப் போக மாட்டான். வாரத்தில் இத்தனை நாள் என்று கணக்கு வைத்திருந்தான். நேற்று அவளை அடித்தது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. அவளுக்குப் பிடித்த ஸ்வீட், பூ வாங்கிக் கொண்டு அவள் வீட்டுக்குப் போனான்.

வாசலில் ஒரு ஜோடி புதுச் செருப்பு இருந்தது. யார் வந்திருப்பாங்க? அவனுக்குத் தெரிந்து இதுவரை சொந்தம் என்று யாரும் வந்ததில்லை. அவள் அம்மா மட்டுந்தான் அவளுக்கு. கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

படுக்கையறையில் சிரிப்புச் சத்தம் கேட்டது. யார்... என்று நினைக்கும்போதே.. இருவரும் கதவைத் திறந்து கொண்டு வந்தனர். அந்த நேரத்தில் அவனை எதிர்பார்க்காத வசு திணறினாள்.

அவர்கள் இருந்த நிலையே ''என்ன'' என்பதை அவனுக்கு உணர்த்தியது. ''இவன் யார்..?'' என்றான் உறுமலாக.



''இவன் என் அண்ணன்!'' என்றாள்.

''அண்ணனா..? அண்ணன் கூடத்தான் இப்படி படுக்கையில் இருந்து வருவியா..?'' என்றான் காட்டமாக.

''ஆமாம். இப்ப என்ன. அன்று சுவேகா ஹோட்டலில் இது மாதிரிதானே இருந்தா. இப்ப அவளை என்ன பண்ணிட்டீங்க. பேசாமல்தானே இருக்கீங்க,'' என்றாள்.

''ஏன்டீ, எனக்குத் துரோகம் பண்ணினதும் இல்லாமல் விளக்கம் வேறு கொடுக்கறீயா...?''

''என்ன பெரிய துரோகம் பண்ணிவிட்டேன். நீங்க என்ன எனக்குத் தாலி கட்டிய புருசனா... இந்த அதிகாரம் பண்ணுறீங்க. இதைக் கேட்க நீங்க யார்...? உங்களை நம்பி இனி நான் இருக்க முடியுமா..? எத்தனை நாளைக்கு ... அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு இருக்கீங்க. இதுவரை அவளை நான் தொடவில்லை என்கிறீங்க. நான் எப்படி நம்புவது.

''இத்தனை அழகான பெண்ணை வைத்துக் கொண்டு இப்படிச் சொன்னால் யார் நம்புவா..? அவள் உங்களை என்கிட்டேயிருந்து பிரிக்கமாட்டா என்று என்ன நிச்சயம்? நாளைக்கே நிச்சயம் குழந்தை பிறந்தால் இங்கு வருவீங்களா..?'' என்றாள் ஆணித்தரமாக.

நித்தியன் வாயடைத்துப் போனான். இவள் இப்படிக் கேட்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. நான் சொன்னதை எல்லாம் இவள் நம்பவில்லை. இவள் பாதுகாப்பைத்தான் நினைக்கிறா.. அது தப்பில்லை. அதுக்காக இவ இந்த வழியைத் தேர்ந்தெடுக்கலாமா...?

''இதோ பார் வசு, நீ செய்வது கொஞ்சம் கூட நல்லா யில்லை. தப்பு பண்ணிவிட்டு, பேச்சு வேற பேசுறே... உன்மேல் எத்தனை அன்பாயிருந்தேன்!'' என்றான்.

''உங்க அன்பு யாருக்கு வேண்டும்? எனக்குப் பணந் தான் வேண்டும். நீங்க இனி இங்கு வராதீங்க,'' என்றாள்.

அவனுக்குச் சாட்டையால் அடித்தது போல் இருந்தது. ''யாருடி இனி உன்னைத் தேடி வருவா...? என்னை என்ன அந்தளவுக்குக் கேவலமாகவா நினைத்தே... தூ...'' என்று துப்பிவிட்டு வந்துவிட்டான். ''நீ இனி என் முகத்தில் விழிக்காதே!'' என்று.

இப்பொழுதுதான் வசுவைப் பற்றிப் புரிந்து கொண்டான்.

## 11

திடீரென மறுநாள் காலை சுவேகா வீட்டுக்கு வந்தாள். நித்தியன் அவளிடம் எதுவும் பேசவில்லை. வந்தவள் எப்பவும் போல் வேலையைச் செய்தாள்.

அங்கு சுஜிக்கு மாப்பிள்ளை பார்த்தனர். பேசி முடிவாகிவிட்டது. சுவேகா அப்பா நீ ஊருக்குப் போம்மா. நாங்கள் வந்து முறையோடு அழைக்க வேண்டும் என்றார். சரிப்பா என்று இவளும் வந்துவிட்டாள்.

கல்யாண நேரத்தில் நாம் பிடிவாதமாக அங்கிருந்தால், இவன் கல்யாணத்துக்கு வர மாட்டான். அப்பா வேறு ஹார்ட்பேஷண்ட். ஏன்.. என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? எங்களுக்குள் சண்டை என்று சொல்ல முடியுமா...? அதனால் வந்துவிட்டாள்.

மறுவாரமே பெங்களூரில் இருந்து வந்து அழைத்து விட்டுப் போனார்கள். இரண்டு நாளைக்கு முன்பாகவே வாருங்கள் என்று.



சுவேகா அன்று இரவு அவன் அறைக்குச் சென்றாள். அங்கு போகவே மாட்டாள். என்ன செய்வது? அவளைப் பார்த்துவிட்டு அவன் பேசாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் போய், ''என்னங்க...'' என்றாள்.

அவன் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. மறுபடியும் கூப்பிட்டாள். அவன் திரும்பவில்லை. அவளாகவே.... ''என் தங்கைக்கு நிச்சயதார்த்தம். எப்போ போகலாம்?'' என்றாள்.

''ஏன்..? உனக்குப் போகத் தெரியாதா...? இப்ப என்ன வந்து புதுசா... என்னைக் கேட்கிறே... நான் வர முடியாது. நீ போகலாம்,'' என்றான்.

''ப்ளீஸ்... நான் உங்களிடம் சொல்லாமல் போனது தப்புத்தான். என்னை மன்னித்துவிடுங்கள். நம் பிரச்னை எங்க வீட்டில் யாருக்கும் தெரியாது. என் அப்பா ஒரு ஹார்ட் பேஷண்ட். அவர் தாங்க மாட்டார். ப்ளீஸ்... வாங்க. போய்ட்டு வரலாம்,'' என்று கெஞ்சினாள்.

''ஆமாம். எப்படித் தெரியும்? என்னைப் பற்றிச் சொல்வதென்றால் உன்னைப் பற்றியும் சொல்லித்தான் ஆகணும். அதனால் சொல்லாமல் இருப்பே,'' என்றான் குத்தலாக.

''நீங்க இன்னும் என்னை நம்பலையா...?''

''இல்லை.''

''நான் சத்தியமா எந்தத் தப்பும் பண்ணலைங்க,'' என்றாள்.

''அப்புறம் எதுக்கு நீ ஹேட்டலுக்குப் போனே... இதுவரை அதுக்குப் பதில் இல்லை.''

அவள் தயங்கினாள். ''நேரம் வரும்போது சொல்றேனே... ஆனா நான் தப்புப் பண்ணலைங்க,'' என்றாள்.

''அந்த நேரம் வரட்டும். நானும் வர்றேன்,'' என்றான் பிடிவாதமாக.

சுவேகா எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் அவன் வர முடியாது என்று சொல்லிவிட்டான். அவள் அழுது கொண்டே கிளம்பிப் போனாள்.

அங்கு கேட்டவரிடம் அவருக்கு வேலையிருக்கு. அதனால் எப்படியும் நிச்சயதார்த்தத்துக்கு வந்து விடுவார் என்றாள்.

சுஜி அவனுக்கு போன் போட்டாள். ''என்னத்தான் நீங்க வரவில்லை. எனக்கு வேற யார் இருக்கா. நீங்களும் அக்காவும்தானே.. இதுவே உங்க சாதனாவாக இருந்தா இப்படிச் சொல்வீங்களா... உங்களுக்கும் அக்காவுக்கும் ஏதோ பிரச்னை என்று நினைக்கிறேன். அவள் அழுது கொண்டே இருக்கிறாள். ப்ளீஸ் அத்தான். அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். எனக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் இல்லை. ஒரு அண்ணனாக, அத்தானாகக் கலந்து கொள்ளக் கூடாதா...?'' என்றாள்.

''நான் கட்டாயம் வருவேன் சுஜி,'' என்றான். அன்று இரவே கிளம்பிச் சென்றான்.

இவனைப் பார்த்ததும் சுவேகா முகம் மலர்ந்தது. ''ரொம்ப தேங்க்ஸ்ங்க. நீங்க வந்ததுக்கு,'' என்றாள்.

நல்ல முறையில் விழா நடந்தது. ஒருநாள் இருந்து விட்டு மறுநாள் கிளம்பினான். சுவேகாவும் அவனுடன் கிளம்பினாள். நித்தியன் காரில்தான் வந்திருந்தான்.



காரில் கேசட்டைப் போட்டான் நித்தியன். மெலோடி சாங். அத்தனையும் காதல் பாட்டு, காரில் வந்தாலே... நான் ஒட்டுகிறேன் என்பாள். இன்று பேசாமல் வந்தாள்.

அவள் மனம் முழுவதும், சுஜியும், மாப்பிள்ளையும் பேசிச் சிரித்தது. போட்டோ எடுத்தது. அவன் அவளுக்கு முத்தம் கொடுத்தது. இது எல்லாம் மனதை அடைத்தது. மெல்லக் கண்ணயர்ந்தாள்.

இங்கும் சாதனாவுக்கு மாப்பிள்ளை அமைந்தது. ஒரு நாள் சாதனா, சுவேகா கையைப் பிடித்துக் கொண்டு, ''அண்ணி! நீங்க இல்லைன்னா... இன்னேரம் என்ன ஆகியிருக்கும் என் வாழ்க்கை. நான் தப்பு செய்ய இருந்தேனே...'' என்று அழுதாள்.

''இதையெல்லாம் இப்ப நீ நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. நல்லா சந்தோசமா கனவு கண்டுக் கிட்டு, நிம்மதியா இரு,'' என்றாள்.

இதை நித்தியன் கேட்டான். என்ன இவள் சொல்கிறாள். ஏதாவது பெண்கள் விசயமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

## 12

சாதனாவும் கல்யாணமாகிப் புகுந்த வீடு சென்று விட்டாள். சுஜியும் சென்றுவிட்டாள். இப்போ இருவருக்கும் வளைகாப்பு நடந்தது.

சாதனாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. சுவேகா குழந்தையைக் கீழே விடவேயில்லை.''

''சாதனா! இந்தக் குழந்தையை எனக்குக் கொடுத்திடேன். ஆசையா இருக்கு எனக்கு. எனக்கு இந்தக் குழந்தை மட்டும் போதும்,'' என்றாள்.

மற்றவர்கள் தன்னை விசித்திரமாகப் பார்ப்பதை உணர்ந்தாள். சுவேகா விழிப்பதைப் பார்த்துவிட்டு, நித்தியன் முன்னே வந்து, ''அவள் உன்னைச் சும்மா கிண்டல் பண்ணுகிறாள். நீ என்ன சொல்வாய் என்று. அப்படித்தானே... சுவேகா...?''

''ஆம்...'' என்று தலையை ஆட்டிவிட்டு உள்ளே போனாள்.

''இவ்வளவு ஆசையிருக்கு. நீ பெற்றுக் கொள்வது தானே...,'' என்றாள். சாதனாவின் மாமியார்.

சாதனாவின் கல்யாணத்திற்கு அத்தனை வேலைகளையும் செய்தாள் சுவேகா...

அவளுக்குத் தேவையான அனைத்தும், பார்த்துப்... பார்த்து வாங்கிக் கொடுத்தாள்.

மாப்பிள்ளை வீடு பார்க்கப் போகும் போது, டிரைவர் சீட்டில் சுவேகா உட்கார்ந்தாள். அவள் மாமியார் மகனிடம், ''என்னடா... நித்தி, அவள் ஓட்டப் போறாள். அவளுக்குத் தெரியுமா... கார் ஓட்ட?'' என்றாள்.

''தெரியும்மா... ஆனா சுவேகா, நீ அந்தப் பக்கம் உட்கார். நான் மட்டும் என்றால் நீ ஓட்டுவது சரி. இன்று குடும்பம் இருக்கு. அதுவும் ஒரு நல்ல காரியத்துக்குப் போறோம். தடங்கல் ஏற்படக்கூடாது,'' என்று அவளைத் தள்ளி உட்காரச் சொன்னான். அவள் பிடிவாதமாக, ''நான் தான் ஓட்டுவேன். மெல்லவே ஓட்டுகிறேன்,'' என்றாள்.

காரில் இடம் இல்லாததால் நெருங்கி உட்கார வேண்டியிருந்தது. நித்தியன் சுவேகாவை ரொம்ப ஒட்டி உட்கார்ந்திருந்தான். அவள் தோளின் பின்னே கை போட்டுக் கொண்டு, ஒரு பக்கமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.



இதுவரை இவன் இப்படி உட்கார்ந்ததில்லை. அவளுக்கு மூச்சு முட்டியது. அவனின் வாசம் என்னமோ செய்தது. அவன் பேசும் போது அவள் காதில் ரகசியம் பேசுவது போல் இருந்தது.

காரைச் சர்ரென எடுத்தாள். ''சுவேகா! மெல்ல,'' என்றான்.

சாதனாவுக்குப் புடவை எடுக்கும் போது, சுவேகாவுக்கும் தனியாக எடுத்தான். அதை சுவேகா வாங்க மறுத்துவிட்டாள். ''எனக்கு எதுக்கு எடுத்துத் தர்றீங்க? வீண் செலவு உங்களுக்கு. இவ்வளவு நாள் எங்கே போயிற்று இந்தப் பாசம்?''

''இன்னும் கொஞ்ச நாள் பொறுங்கள். நான் உங்களை விட்டு, நிரந்தரமா போய்விடுறேன். நீங்க நிம்மதியாக இருங்கள்,'' என்றாள்.

அன்று சுரேஷ் வீட்டில் ஒரு பார்ட்டி இருந்தது. அதற்கு, ''நீயும் வா,'' என்று அழைத்துப் போனான்.

இவன் ஃபிரண்ட்ஸ் எல்லோரும் இருந்தனர். இவளுக்கு வெறுப்பாக இருந்தது. எப்பப் பார் குடி... டான்ஸ் என்று நினைத்தாள்.

சுரேஷ் ஒய்ஃபும் குடித்தாள். ''நீயும் குடி, சுவேகா...'' என்றாள்.

''எனக்குப் பிடிக்காது. வேண்டாம்,'' என்றாள்.

உடனே நித்தியனைக் கூப்பிட்டாள். ''நித்தியன்! இங்கு வாங்க. உங்க ஒய்ஃப் சொல்வதைக் கேட்டீங்களா..? இவங்களுக்குக் குடிக்கப் பிடிக்காதாம். நீங்களும் வசுவும் எப்படிக் குடித்து விட்டு ஆடுவீங்க. அதன் பிறகு அந்த

இரவு எவ்...வ..ளவு... இன்பமாக இருக்கும் என்பாள் வசு... இதை இன்னும் இவங்களுக்கு உணர்த்தலையா..?

"இவங்க கூட இருக்கும் போது மட்டும் சைவமா...?" என்று சிரித்தாள்.

சுவேகாவுக்கு அருவருப்பாக இருந்தது.

நித்தியன் கையிலும் மதுக் கிண்ணம். அவளைப் பார்த்து, உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கினான்.

நித்தியன் அவளைக் கூப்பிட்டான். "வா, ஆட," என்று. அவள், "வரமாட்டேன். எனக்குத் தெரியாது," என்றாள்.

"சும்மா பொய் சொல்லாதே... உனக்கு டான்ஸ் தெரியும் என்று எனக்குத் தெரியும். இன்று நீ ஆடித்தான் ஆகணும்," என்றான் பிடிவாதமாக.

"என்னால் முடியாது. நான் போறேன்," என்று எழுந்து வெளியே போய் காரை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

போதையோடு வீட்டுக்கு வந்தான்.

வந்தவன் கதவைத் தட்டினான். அவள் திறந்ததும் அவளைப் பிடித்து இழுத்தான். "இன்று நீ எனக்கு வேண்டும். உன்னை விட மாட்டேன். இதுவே வசு என்றால் என்னை இன்னேரம்... எப்படி அணைத்திருப்பாள் தெரியுமா..?" என்று அவளை அணைக்கப் போனான்.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. "சீ.. விடுங்க. என்னைத் தொடாதீங்க. வேண்டும் என்றால் அவளிடம் போக வேண்டியதுதானே... என்னிடம் எதுக்கு வந்தீங்க?" விடுங்க கையை," என்று பிடுங்கினாள்.



"எனக்கு நீதான்டி வேணும். அவ வேண்டாம்..." என்று குழறினான். "போய்ப் படுங்கள்," என்று அவன் அறையில் தள்ளி வெளியில் தாழ்ப்பாள் போட்டாள்.

இரவு முழுவதும் சுவேகா தூங்கவேயில்லை. ஒரு நாளும் இவன் இதுவரை இப்படி நடந்து கொண்டதில்லை. குடியும், அங்கு அவர்கள் நடந்து கொண்ட முறையும், அவனை இப்படி நடக்க வைத்திருக்குது.

காலையில் நித்தியன் எழுந்து கதவைத் தட்டினான். சுவேகா போய்க் கதவைத் திறந்து விட்டாள். "எதுக்கு என்னை உள்ளே வைத்துப் பூட்டியிருக்கே... முதலிரவுக்குப் பெண்ணை உள்ளே அனுப்பி விட்டுக் கதவைச் சாத்துவது போல்..." அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

அவனை முறைத்து விட்டுப் போய்விட்டாள். அவளுக்கு உடலும் உள்ளமும் ஏங்கின. அந்த வலிமையான கைகள் அணைத்தால் எப்படியிருக்கும். தலையைக் குலுக்கிக் கொண்டாள். என்ன நினைப்பிது, காலையில். அவன் மீது கோபம் வருவதற்குப் பதில் ஆசைதான் வந்தது.

தன் மனதுக்குப் பிடித்தவன் கூட இருந்தும் இப்படித் தள்ளி இருக்க வேண்டியிருக்கே... அவன் அவளுடன் எப்படி டான்ஸ் ஆடுகிறான். அவள் உடலோடு உடல் ஒட்டி, பார்க்கவே சகிக்கவில்லை. நான் வரவில்லை என்றாலும் விடுவதில்லை.

அவன் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. சாப்பிடாமலேயே... கிளம்பி விட்டாள். நித்தியனுக்கு நேற்று நடந்தது நினைவுக்கு வந்தது. சுவேகாவின் கோபம் புரிந்தது.

அவன் மீதே அவனுக்கு ஆத்திரம் வந்தது. குடித்து விட்டு, அவளிடம் என்ன பேசினேனோ... தெரிய வில்லை. இத்தனை கோபமா இருக்கா.

இப்போது எல்லாம் நித்தியன் வசுவைச் சுத்தமாக மறுந்துவிட்டான். எத்தனை செலவு செய்தான். அவன் ஆபீசில் இருந்து எல்லோரும் டூர் கிளம்பினர். குடும்ப மாக. நித்தியனையும் கட்டாயப்படுத்தினர்.

அவனுக்குத் தெரியும் சுவேகா வரமாட்டாள் என்று. அவன் ஃபிரண்ட்ஸ்கள் போல் இவர்கள் இருக்க மாட் டார்கள். ரொம்ப டீசண்டாக நடப்பார்கள். இதைச் சொன் னாலும் அவள் நம்ப மாட்டாள்.

இவன் வேண்டாம் என்று சொன்னதைக் கேட்காமல் சேர்த்துக் கொண்டார்கள். மூன்று நாள் கொடைக்கானல். எல்லோரும் ரிச் பேமிலி. ஒரு வேன் ஏற்பாடு செய் தார்கள்.

ஆபீசில் இருந்த பெண்களும் வந்தனர். கல்யாண மானவர்கள் தன் கணவனோடும், ஆகாதவர்கள் தனி யாகவும் வந்தனர்.

இதற்கிடையில் நித்தியன் ஆபீஸ் விசயமாக ஒரு கான்பரன்ஸ்சுக்குப் போனான். அங்கு ஸ்ரீதரைச் சந்தித் தான். நித்தியனுக்கு அவனைத் தெரியவில்லை. ஸ்ரீதர் அடையாளம் கண்டு கொண்டு, ''ஹலோ, நீங்க சுவேதா வோட ஹஸ்பெண்ட்தானே...'' என்றான்.

இவன் புரியாமல் பார்க்க, தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டான்.

''ஹலோ...'' என்றான் நித்தியன்.



''உங்க தங்கை நல்லாயிருக்காளா...? எல்லாம் சரியாகிவிட்டதுதானே... இப்போ ஒன்னும் பிரச்னை யில்லையே... இருந்தால் சொல்லுங்கள். அவன்களை நானே... தொலைத்து விடுகிறேன்,'' என்றான் ஆத்திர மாக.

நித்தியனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல் கிறான் இவன்? என் தங்கையை இவனுக்கு எப்படித் தெரியும். ''என்ன சொல்றீங்க நீங்க?'' என்றான்.

ஸ்ரீதர் அன்று ஹோட்டலில் நடந்தது அத்தனையும் சொன்னான். ''நான்தான் சுவேகாவுக்குக் காபி வாங்கிக் கொடுத்து, வீட்டுக்குக் கூட்டி வந்தேன். நான் வீட்டில் உங்க தங்கைக்கு அட்வைஸ் செய்கிறேன் என்றேன். சுவேகா அதெல்லாம் வேண்டாம். நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் போங்கள் என்று தெருமுனையி லேயே அனுப்பி விட்டாள். என் இனிமையான எதிரி!'' என்று சிரித்தான்.

நித்தியனுக்கு எல்லாம் புரிந்தது. அன்று போன் பண்ணி வசு சொன்னது இதைப் பார்க்கத்தான் போல் இருக்கு. ரேவதியும் ஒன்றும் தெரியாத மாதிரி அண்ணி இப்பவெல்லாம் அடிக்கடி வேறு ஆண்களுடன் காரில் போகிறாள். இன்று என் ஃபிரண்ட்ஸ் ஒரு பார்ட்டி கொடுத் தாங்க. நான் அதுக்குப் போயிருந்தேன். அங்கு அண்ணி ஒரு ஆணுடன் ஒரு அறைக்குள் போவதைப் பார்த்தேன் என்று அன்று சொன்னாள்.

வசு வந்து அவளை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று என்னைக் கூப்பிட்டுக் காண்பித்தாள். ரேவதி தான் தப்பிக்க அவள் மீது பழி போட்டிருக்காள்.

எங்கே தன்னைப் பற்றிச் சொல்லி விடுவாளோ என்று அன்று அத்தனை அடி அடித்தும், வாய் திறந்து அவள் ஒரு வார்த்தை சொல்லவில்லை. வீட்டை விட்டுப் போ என்று விரட்டினேன்.

இங்கு இருந்தால் பிரச்னை அதிகமாகி விடும் என்று தான் அவள் ஊருக்குப் போயிருக்காள்.

அவன் மௌனமாக நிற்பதைப் பார்த்து, "ஹலோ... மிஸ்டர்..." என்றான் ஸ்ரீதர்.

"நித்தியன்!" என்றான் லேசாகச் சிரித்துக் கொண்டு.

"உங்களுக்கு விசயம் தெரியாது போல் இருக்கு. நான் தான் உளறி விட்டேனா... சுவேகா உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன் என்றாளே..."

"அப்போதே கேட்டேன். இது மாதிரி பிரச்னைக்கு நீ ஏன் தனியாக வந்தே. உன் ஹஸ்பெண்டையும் கூட்டி வரலாம் என்றேன். அதற்கு அவள் சிரித்தாள். " இது கூட என்னால் முடியாதா..?" என்றாள்.

"உங்களுக்கு விசயமே தெரியாதா...?" என்றான்.

"தெரியும். இவ்வளவு விவரமாகத் தெரியாது," என்று சமாளித்தான்.

"ஆமாம். சுவேகா கத்திய கத்தலில் நான் ஆடிப் போய் விட்டேன். எனக்கு முதலில் சுவேகா என்று தெரியாது. யாரோ ஒரு பெண்தான் என்று காப்பாற்றப் போனேன். அது சுவேகாவா இருக்கவும் அதிர்ந்து விட்டேன். அவளும் ரொம்ப பயந்து விட்டாள்.

"அதைப் போக்க என் பையனுடன் பேச என்று போன் போட்டுக் கொடுத்தேன். அவளும் பேசினாள். என் ஒய்ஃபும் பேசினாள்.



"குழந்தைன்னா அவள் அவ்வளவு ஆசைப்படுறாளே... ஏன்...? தள்ளிப் போடுறீங்களா...? இல்லை, கிடைக்கவில்லையா...? டாக்டரிடம் பார்க்கலாமே," என்றான்.

"ம்... பார்க்கணும்," என்றான்.

"சுவேகா அன்று கேட்டாள், என் மீது சந்தேகப்படுறீங்களா.. என்று. நான் உன் மீது சந்தேகப்படுவேனா... நான் ஒரு நாள் குடித்ததற்கே... என்னைத் தூக்கி எறிந்தவள். நீ இவ்வளவு பெரிய தப்பைப் பண்ணுவாயா..?" என்றேன். "சொன்னாளா...?" என்றான்.

ஒரு முறுவலோடு தலையசைத்தான்.

"நான் சந்தேகப்படுகிறேன் என்றால் என்னை அடித்து நொறுக்கி விடுவாள். அவளுக்குத்தான் கராத்தே தெரியுமே... அன்றும் அவன்களை அடித்திருக்கா. அவன்கள் நிறையப் பேர் இருந்ததால் அவளைப் பிடித்துக் கொண்டனர்.

"சுவேகா மாதிரிப் பொண்ணு கிடைக்கக் குடுத்து வச்சிருக்கணும். எல்லாத் திறமையும் அவள் ஒருத்தியிடமே... என் மனைவி என்னிடம் சொல்லிக் கொண்டே இருப்பாள். உங்க எதிரியை ஒரு நாள் வீட்டுக்குக் கூட்டி வாங்களேன் என்று. நீங்க பெங்களூர் வரும்போது கட்டாயம் வர வேண்டும்," என்றான். விசிட்டிங் கார்டைத் தந்து கொண்டே...

"கட்டாயமா... என் மனைவியைக் காப்பாற்றியதற்கு உங்களுக்கு நன்றி!" என்றான்.

"பை.. நான் வர்றேன்," என்று [illegible]

# 13

நித்தியனுக்குத் தங்கை மேல் கோபம் வந்தது. இப்படிப் பண்ணி விட்டாளே.. சுவேகாவும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை. இவனிடம் எதற்குச் சொல்லணும். இவன் என்ன ஒழுங்கு என்று நினைத்திருப்பாள்.

நித்தியன் சுவேகா முகத்தையே குறுகுறுவெனப் பார்த்தான். அவள் முகத்தைச் சுழித்தாள். முகத்தில் என்ன தேன் வடியுது இப்படிப் பார்க்க என்று முணுமுணுத்தாள்.

அவன் இதழோரம் புன்னகை பரவியது. ''சுவேகா, எங்க ஆபீசில் இருந்து டூர் போறாங்க.. கொடைக்கானல். அதற்கு நாமும் போகணும். மூன்று நாளைக்குத் தேவையானதை எடுத்து வைத்துக் கொள்,'' என்றான்.

''நான் வரவில்லை உங்க கூட. இனி எங்காச்சும் என் கூட வான்னு... சொன்னீங்க. நான் மனுசியா இருக்க மாட்டேன்,'' என்றாள்.

''நான் எதுக்கு உங்களுக்கு. நீங்க குடித்துக் கும்மாளம் போடுவதை நான் பார்க்கவா..?'' என்றாள், வெடுக்கென்று.

''இது ஆபீஸ் டூர் சுவி. என் ஃபிரண்ட்ஸ்ங்க எல்லாம் வரமாட்டாங்க. ஆபீசில் இருந்து எல்லாரும் ஃபேமிலியாக வருவாங்க. நாம் கட்டாயம் போக வேண்டும்,'' என்றான் மென்மையாக.

''எதா இருந்தாலும், உங்க கூட வரலை நான்.''

''என் மீது உனக்கு நம்பிக்கையில்லையா..?''

''ஐயோடா... ரொம்ப.. நம்பிக்கை.''



அவனுக்குச் ''சுருக்''கென்றது.

''நாம் கட்டாயம் போக வேண்டும் சுவி,'' என்றான் அழுத்தமாக.

பேசாமல் உள்ளே போய்விட்டாள். அவன் சொன்ன மாதிரி மூன்று நாளைக்குத் துணிகளை எடுத்து வைத்துக் கிளம்பினாள்.

ஏ.ஸி. வேன் குலுங்காமல் போனது. இரவு கிளம்பினார்கள்.

சுவேகா சன்னல் ஓரம் உட்கார்ந்து கொண்டாள். சிறிது நேரத்திலேயே தூங்கியும் போனாள். அவளைத் தன் மடி மீது சாய்த்துக் கொண்டான்.

அவள் பின் கழுத்தையும், முதுகையும் வருடினான்.

ஒரு பெரிய ஹோட்டலில் அறை எடுத்திருந்தனர். சிறிது நேரம் தூங்கிவிட்டு பின் வெளியில் போகலாம் என்று முடிவு செய்தனர்.

சுவேகாவுக்குக் குளிரியது. பெங்களூரில் இருந்து இப்போ சென்னை வெயிலுக்குப் பழக்கப்பட்டுப் போனாள்.

''கொஞ்ச நேரம் படுக்கலாம் சுவேகா... பிறகு நாம் போகலாம்,'' என்றான்.

அவள் படுக்கவும், அவளை நெருங்கிப் படுத்தான் நித்தியன். அவள் அவனை முறைத்தாள். ''நீ என்னை முறைத்துப் பார்க்கும் போது, என்னை வா... என்று அழைப்பது போல் இருக்கு. உன் கண்ணு அழகு!'' என்றான்.

''சரி... சரி... உளறாதீங்க. தண்ணி எதுவும் அடிக்கலையே...''

''இந்தக் குளிருக்கு இரண்டு பெக் குடித்தால், நல்லா இருக்கும். சுட... சுட...'' என்று அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

இருவரும் தூங்கி, காலை பத்து மணிக்குத்தான் எழுந்தனர். பின் சாப்பிட்டுவிட்டுக் கீழே இறங்கினர். வேன் போய்விட்டது. நித்தியன் போன் பண்ணினான்.

''நீங்கள் தூங்கியதால் எழுப்பவில்லை. இருவரும் தனியாக இன்று சுற்றிப் பாருங்கள்,'' என்றான் ஒருவன், சிரித்துக் கொண்டே.

''என்னத்தைச் சுற்றிப் பார்க்கிறீங்க. அறையிலேயே இருங்க,'' என்றான் மற்றொருவன்.

''சுவேகா, அவர்கள் போயிவிட்டார்கள். நாம் கால் டாக்சியில் போகலாமா...?'' என்றான்.

வெளியில் நடக்கும் போது அவள் கையைப் பிடித்துக் கொண்டான். ஒரு சில நேரங்களில் தோளில் கை போட்டு லேசாக அணைத்துக் கொண்டான்.

அவளுக்கு இந்த அணைப்பு தேவையாக இருந்தது. இருந்தாலும் மனம் நெருடியது. உன்னைத் தொட மாட்டேன் என்றவன், இப்போ இப்படி நெருங்கி வரக் காரணம் என்ன என்று நினைத்தாள்.

அவளும் அவனிடம் ஒரேயடியாக வெறுப்புக் காட்ட வில்லை. ஒட்டியே நடந்தாள். மாலையானதும் மேகம் திரண்டது. இருட்டி விட்டது போல் ஆகி விட்டது. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. நித்தியன் ஒரு கல்லின் மேல் அமர்ந்து அவளையும் தன் அருகே அமர்த்திக் கொண்டான்.



''இந்தச் சூழலைப் பாரேன் சுவி. எத்தனை ரம்மியமா இருக்கு. பகலிலேயே... இருட்டு... நல்லா இருக்குல்லே... இவர்களுக்குப் பக்கத்திலும் ஒரு ஜோடி அணைத்த நிலையில் தங்களை மறந்திருந்தனர். ஒருவருக்கொருவர் இதழில் முத்தமிட்டனர் அவசரமாக.

அதைப் பார்த்த சுவேகா முகத்தைத் திருப்பிக் கொண் டாள். நித்தியன் அவளின் சிவந்த முகத்தைத் திருப்பி, இதழில் அழுந்த முத்தமிட்டான்.

அங்கு நிறைய ஜோடிகள் தங்களை மறந்த நிலையில். ஒரு சிலர் எல்லையும் மீறினர். நித்தியன் அதைப் பார்த்துவிட்டு சுவேகாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

சிறிது நேரத்திலேயே மழை பெய்தது. அதே நிலை யில் இருந்தனர். மழைச் சாரலில் அவனுடன் சேர்ந்து நனைவது, ஆனந்தமாக இருந்தது. அவன் கை அவள் மேல் ஊர்ந்தது.

மழையில் நனைந்ததும். அவளின் இளமை அழகாகத் தெரிந்தது. அவளை இறுகக் கட்டியணைத்தான். அவள் திமிறத் திமிற...

அவன் எல்லை மீறுவதை உணர்ந்தாள். சட்டென அவனை விட்டு விலகினாள். ''வாங்க. அறைக்குப் போகலாம்,'' என்றாள்.

இருவரும் நனைந்து கொண்டே......... நடந்து வந்தனர்.

அறைக்குள் போனதும், ''சுவேகா.................'' தாபத் துடன் அழைத்தான்.

அவள் அதைப் புரிந்து கொண்டு..... ''வேண்டாம்,'' என்று விலகினாள்.

''ப்ளீஸ் சுவி. எனக்கு............ நீ இப்ப வேண்டும்டா...''

''என்னால் முடியாது....................'' என்றாள் கோபமாக.

பின் பால்கனியில் உட்கார்ந்து அவளையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, மழைச் சாரலை ரசித்தான்.

''சுவேகா, நீ டான்ஸ் ஆடுவியாமே.. இப்ப ஒரு டான்ஸ் ஆடேன்... எனக்காக ப்ளீஸ்,'' என்றான்.

அவளும் இன்று முழுவதும் சந்தோசத்தில் இருந்தாள். அதனால் அவன் கேட்டவுடன், அறைக்குள் வாங்க நான் ஆடறேன் என்று உள்ளே போனாள்.

துப்பட்டாவை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆடினாள். நித்தியன் அவளை அப்படியே கட்டிக் கொண்டான்.

பின் இருவரும் கேசட்டைப் போட்டுக் கொண்டு நேரம் போவது தெரியாமல் ஆடினர். சுவேகா நித்திய னுக்கு ஈடு கொடுத்து ஆடினாள். அவளைத் தூக்கி ஒரு சுழற்றுச் சுழற்றினான் நித்தியன். அவள் அவனை அப்படியே கட்டிக் கொண்டாள். அவன் வெற்று மார்பும், அதில் இருந்த சுருள் முடியும் அவன் ஆண்மையின் இலக்கணமாகத் திகழ்ந்தான்.

அவன் பெர்முடாஸ் ஒன்றைப் போட்டிருந்தான். அவள் பார்வையைப் பார்த்துவிட்டு, குனிந்த அவள் முகத்தை நிமிர்த்தினான். ''நீ என்னை மட்டும் இப்படிப் பார்க்கலாம். நான் உன்னைப் பார்க்கக் கூடாதா...?'' என்றான் காதில் ரகசியமாக.



அவள் முகம் செந்தாமரையாய்ச் சிவந்தது. அவள் இதழைப் பற்களால் சேலாகக் கடித்தான். பின் சுவைத் தான். அவள் அப்படியே கிறங்கிப் போனாள். மழையில் நனைந்ததற்கும், இந்தக் குளிருக்கும் இந்த அணைப்பு, இதழ் ஒற்றுதல் எல்லாம் அவளுக்குத் தேவைப் பட்டது.

பின், ''தலை ஈரமா இருக்கு சுவி. தலையைக் காய வை,'' என்று அவள் கூந்தலைப் பிரித்து விட்டான். அதில் இருந்து பூவின் வாசம் அவனைத் தாக்கியது. அதில் முகம் பதித்தான்.

''சுவி, சாப்பிடலாமா..? பசிக்குது. கீழே போக வேண் டாம். மேலே கொண்டு வரச் சொல்கிறேன்,'' என்று போனைக் கையில் எடுத்துச் சொன்னான். மறுகரத்தில் சுவியின் மலர்க் கரம்.

சாப்பாடு வந்ததும், அவனே எல்லாம் எடுத்து வைத் தான். ''வாடா.. சுவி,'' என்று அழைத்தான். அவள் வந்த தும் பிசைந்து அவளுக்கு ஊட்டி விட்டான். அவளும் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''சுவி... என்னடா... எதுக்கு இப்ப அழறே...'' என்றான்.

அவள் அழுகையின் ஊடே... ''எனக்கு எதுக்கு இப்படி ஆசை காட்டுறீங்க. இது உங்களுக்கே நல்லாயிருக்கா... உடம்புக்குப் பிடித்திருந்தாலும், என் மனதுக்குப் பிடிக் கணும் இல்லே... எதற்கு என்னை இப்படிச் சித்ரவதை செய்றீங்க?''

''நீங்கள் என்னிடம் நடந்து கொள்வதைப் பார்த்தால் அவளை நினைத்து என்னிடம்.... இல்லை, இது மாதிரி அவளையும் அழைத்து வந்து இப்படித்தான் இருந் தீங்களா..? நான் என்ன நினைப்பது? பேசாமல் என்னை விட்டுருங்க. நான் எங்காவது போய் விடுகிறேன்,'' என்று அழுதாள்.

நித்தியன் பேசாமல் உட்கார்ந்து விட்டான். இதுக்குப் பதில் என்ன சொல்வது. இவள் கேட்பதில்தான் என்ன தப்பு.

இரண்டு நாட்களாக விலகியே இருந்தாள். அவளிடம் என்றுமில்லாத ஒதுக்கம் இருந்தது. இது நித்தியனை மிகவும் தாக்கியது.

இவர்கள் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். ஒரே கலகலப்பாக இருந்தது. நித்தியன் ஜோக் அடித்து அத்தனை பேரையும் சிரிக்க வைத்தான். ஆண்கள் எல்லாரும் சீட்டு ஆடினர்.

பெண்கள் செஸ், சீட்டு, பாட்டு, டான்ஸ் என்று ஆடினர். பாட்டுக்குப் பாட்டு விளையாடினர். அதில் தோற்றால் சீட்டில் என்ன எழுதியிருக்கோ... அதன் படி நடித்துக் காட்டணும்.

ஒருவருக்கு நாய் மாதிரி குரைக்க வேண்டும் என்று வந்தது. அவர் குரைப்பதைப் பார்த்துவிட்டு, எல்லோரும் சிரித்தனர்.

மற்றொருவருக்குக் குரங்கு போல் தாவ வேண்டும் என்று வந்தது. அவர் தாவிய தாவலில் அனைவருக்கும் வயிற்று வலியே வந்து விட்டது. சிரித்த சிரிப்பில்.

இந்த முறை சுவேகா தோற்றாள். அவளுக்கு நடனம் ஆட வேண்டும் என்று வந்தது. எல்லோரும் கத்தினர். ''நித்தியன் சார், நீங்களும் அவளுடன் சேர்ந்து ஆட வேண்டும்.'' என்று.

''இல்லை. யார் யாருக்கு என்ன வருதோ, அதைத் தான் செய்யணும்.''

சுவேகா நித்தியனைப் பார்த்தாள். அவன் ஆடு என்று ஜாடை காட்டினான். டேப்பில் கேசட் போடப்பட்டது. சுவேகா ஆடத் துவங்கினாள். எல்லோரும் மெய் மறந்தனர். இடையில் நித்தியனும் சேர்ந்து கொண்டான். அந்த இனிமையான மாலைப் பொழுது சுவாரசியமாகக் கழிந்தது.

பாட்டு முடிந்ததும், அத்தனை பேரும் கை தட்டினர். ''இரண்டு பேரும் ஜோடிப் பொருத்தம் பிரமாதம். சுவேகா, நீ டான்ஸ் ஆடுவியா?'' என்றனர். அவள், ''ம்...'' என்றாள் வெட்கத்துடன்.

''நித்தியன் சாரைக் கேட்கவே வேண்டாம். அவர் டான்சிலும் புலி, பாட்டுப் பாடுவதிலும் கில்லாடி!'' என்றனர்.

சுவேகா வியந்து அவனைப் பார்த்தாள். உங்களுக்கும் தெரியுமா.. என்று. அவன் கண்களில் சிரித்தான். அதை மற்றவர்கள் பார்த்துவிட்டு, ''இரண்டு நாள் முழுக்க தனியாகத்தானே இருந்தீங்க. இப்ப என்ன கண் ஜாடை?'' என்றனர்.

''பாவம் இளம் தம்பதிகள். இருவரும் வேலைக்குப் போகிறவர்கள். வீட்டில் கொஞ்சம் கூட நேரமிருக்காது. இங்கேயாவது தனிமையாக இருக்கட்டும் என்றுதான்

நாங்கள் உங்களைத் தொந்தரவு பண்ணவில்லை. இரண்டு நாள் போதவில்லையா... உங்களுக்கு?'' என்று கேலி பண்ணினர்.

''எப்போ குழந்தை பெத்துக்கப் போறதா... உத்தேசம்?'' என்றனர்.

''சொல்லிவிடலாமா..? சுவி, எப்போ என்று.''

இவளுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள். எப்படித்தான் இப்படி பேசுகிறானோ... இவனைப் பற்றி இவர்களுக்குத் தெரியாதா..? அப்படித்தான் இருக்கும்.

## 14

இப்போ எல்லாம் மாலையே வீட்டுக்கு வந்து விடுவான் நித்தியன். சுவேகாவுக்குத் தான் வேலை அதிகமாக இருந்தது. சீக்கிரம் வீட்டுக்கு வர முடியவில்லை.

இது ஆடிட்டிங் டைம் வேற. இவள் முக்கியமான பைல்கள் எல்லாம் பார்க்க வேண்டும். ரொம்ப நேரம் ஆனது. நித்தியன் வீட்டில் பார்த்துவிட்டுக் கேட்டான். ''இன்னும் சுவேகா வீட்டுக்கு வரவில்லையா..?''

''அவ இந்த ஒரு வாரமாகவே லேட்டாகத்தான் வருகிறா... நேற்று அருண் போய்க் கூட்டி வந்தான்,'' என்றாள் அவன் அம்மா.

இன்று நித்தியன் காரை எடுத்துக் கொண்டு அவள் ஆபீசுக்குப் போனான். அவனை எதிர்பார்க்கவில்லை சுவேகா...

காபி வரவழைத்துக் கொடுத்தாள்.



அவனைப் பார்த்த அவள் பாஸ் எழுந்து வந்து வாடா நித்தியா... என்றான்.

''டேய்.. நீயா..டா.. அபிஷேக்?'' என்றான்.

''நானே தான். இவங்க தான் உன் மிஸ்ஸசா... உள்ளே வா... உன்னிடம் நிறையப் பேசணும்,'' என்றான்.

இருவரும் ஸ்கூல் மேட். அபிஷேக் அப்பாவுக்கு மாற்றலாகவும் +2 வோடு பிரிந்து விட்டனர்.

சுவேகாவுக்கு வேலை முடிந்தும் இவன் பேசிக் கொண்டிருந்தான். ''இருடா நித்தியா. டிபன் சாப்பிட்டு விட்டுப் போகலாம்,'' என்றான்.

''இல்லைடா.. அவ இருக்கா. இன்னொரு நாள் சந்திக்கலாம்,'' என்றான்.

''சரிடா.. போய்ட்டு வாடா..'' என்றான். சுவேகா வந்ததும் காரை எடுத்தான். நேரா ஹோட்டலுக்குப் போனான். ''எதுக்கு, வீட்டுக்குப் போகலாமே...'' என்றாள்.

''வா, பேசாமே.. இவ்வளவு நேரம் வேலை பார்த்திருக்கே.. உனக்குப் பசிக்காதா..?'' என்றான்.

''இப்ப எல்லாம் என் மேல் ரொம்ப அக்கறை வழியுது!'' என்றாள்.

''ஏன்.. சுவி? இருக்கக் கூடாதா..? நீ என் மனைவியில்லையா...?''

''அதான் இல்லையே... அப்புறம் என்ன..?''

''ப்ளீஸ் சுவி. பேசாமல் சாப்பிடு,'' என்றான்.

பில்லை அவள் கையில் எடுத்தாள்.

''என் கிட்டேயும் பணம் இருக்கு சுவி. உனக்குச் சாப்பாடு வாங்கித் தரும் அளவிற்கு!'' என்றான் கோபமாக.

உதட்டை அழகாகச் சுழித்தாள். அதைப் பார்த்த நித்தியனின் முகத்தில் இளம் முறுவல் அரும்பியது.

அன்று இரவு அவள் வீட்டுக்குள் நுழையும் போது, "இங்கு வந்து படேன் சுவி. ரொம்ப வேர்க்குது இல்லே."

"ஏ.. அது இன்னைக்குத்தான் தெரியுமா..? இத்தனை நாள் தெரியலையா.. வேர்த்தது?" என்றாள் பட்டென்று.

"இந்த அறைக்குள் நீங்க நுழையக்கூடாது, என்று சொன்னதாக நினைப்பு எனக்கு. உங்களுக்கெப்படி?"

"அதை நான் மறந்துட்டேன்."

"நீங்கள் மறக்கலாம். அது என்னால முடியாது."

"இதுதான் உன் முடிவா..?"

"ஆம்..."

"நான் மாறிவிட்டேன் சுவேகா.."

"நானும்தான் மாறி.. விட்டேன்."

இனி இவனுடன் இருக்க முடியாது. நாம் வீட்டை விட்டுப் போய் விட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். இவனுக்குத் தெரியாமல் வேலையை ராஜினாமா செய்தாள்.

ஊட்டியில் ஒரு வயதான தம்பதியருக்கு வீட்டோடு வேலைக்கு ஆள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து அவர்களுடன் தொடர்பு கொண்டாள். அவர்கள் வா, உனக்கு வேலை நிச்சயம் என்றதும் உடனே கிளம்பிப் போய்விட்டாள். யாரிடமும் சொல்லாமல்.

நித்தியன் மறுநாள் காலை வரை, சுவேகாவோட நடமாட்டத்தைக் காணவில்லை என்றதும், அவன்



அம்மாகிட்டே, "எங்கேம்மா சுவேகா... ஆளையே காணோம்," என்றான்.

"தெரியலைடா.. மேலே இல்லையா.. அவதான் இஷ்டம் இருந்தா.. வந்து வேலை பார்ப்பா, இல்லை யென்றால், பேசாம படுத்திருப்பா.. இவ வேலையே அது தானே..." சான்ஸ் கிடைத்தது என்று பேசினாள்.

மேலே போய் அவள் அறையில் பார்த்தான். இல்லை. ஊருக்கு எதுவும் போய்விட்டாளா..? அவள் அறைக்குள் போனான்.

டேபிள் மீது ஒரு லெட்டர் படபடத்தது. அதை எடுத்துப் பிரித்தான். அதைப் பார்த்தவன் கண்களில் அதிர்ச்சி.

நான் வீட்டை விட்டுப் போகிறேன். நீங்கள் இனி கவலைப்பட வேண்டாம். அவளை வீட்டுக்குக் கூட்டி வந்து குடும்பம் நடத்தலாம். குழந்தையும் பெற்றுக் கொள்ளலாம். என்னால் உங்க சந்தோசத்தை எதுக்கு வீணாக்கணும். இனி நான் வரமாட்டேன்.

உடனே அவள் செல்லுக்குப் போட்டான். அவளுக்குப் போகவில்லை. சிம்மை மாற்றிவிட்டாள் போல. இதற்கு மேலும் பொறுத்துக் கொண்டு இந்த வீட்டில் இருக்க முடியாது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். நான் போகிறேன். அதைப் படித்த அவனுக்கு இதயமே வெடித்து விடும் போல் இருந்தது.

தலையைக் கையில் பிடித்துக் கொண்டு, உட்கார்ந்து விட்டான்.

அடிப்பாவி! இப்படிப் பண்ணிவிட்டாயே.. நான் என்ன செய்வேன்? எங்கு போயிருப்பாள்? எங்கு போய்த்

தேடுவேன். இங்கு கேட்பவர்களுக்கு என்ன பதில் சொல்வேன்?

அவள் ஆபீசுக்கு போன் போட்டான். அவன் ஃபிரண்ட் அபிஷேக் எடுத்தான். ''என்னடா... காலையில், சுவேகாவை ஏன்.. ரிசைன் பண்ணச் சொன்னே? எப்படி இருக்கீங்க?'' என்றான்.

நித்தியன் அதிர்ந்ததுக்கு அளவே.. இல்லை. ''என்..ன..? ரிசைன் பண்ணிவிட்டாளா..? எப்பொழுது..? ஏன்..? எதற்கு..?'' படபடத்தான்.

''என்னடா நித்தியா.. ஆர் யூ ஆல் ரைட்.. ஏன்.. இப்படி படபடக்கிறே... உனக்குத் தெரியாதா...? நீ சொல்லாமலா.. ரிசைன் பண்ணினாள். என்ன பிரச்னை அவளுக்கு?'' என்றான்.

''ஒன்னுமில்லேடா... நா..ன் பிறகு பேசறேன்,'' என்று கட் பண்ணினான்.

வேலையைக் கூட ரிசைன் பண்ணியிருக்கா. இவ திட்டம் போட்டுத்தான் பண்ணியிருக்கா. அவள் அம்மா வீட்டுக்குப் போயிருப்பாளா..? எப்படி அங்கு போன் பண்ணிக் கேட்பது? கேட்காமல் இருக்க முடியாது. போன் போட்டான்.

அவர்கள் பேசிவிட்டு சுவேகா நல்லா இருக்காளா... என்றனர். அவனுக்குப் பகீர் என்றது.

இனி எங்கு தேடுவது? யாரிடம் விசாரிப்பது? அவள் தங்கை சாதனாவுக்கு போன் போட்டான். குழந்தை பிறந்ததில் இருந்து அடிக்கடி அங்கு போவாள். ஆனால் அவளும் இங்கு வரவில்லை என்று சொல்லிவிட்டாள்.



அவள் தங்கையிடமும் விசாரித்தான் அவளும் வரவில்லையென்றாள்.

அவன் இது மாதிரி திகைத்து உட்கார்ந்தது இல்லை. அடுத்த நிமிடம் என்ன செய்வது என்று புரியாமல்.

அவனும் தெரிந்த இடம், எல்லாம் விசாரித்துப் பார்த்தான். எந்தத் தகவலும் இல்லை.

இனி என்ன செய்வது? தப்பான முடிவுக்குப் போய் இருப்பாளோ..? மனம் 'திக்கென' அதிர்ந்தது. அவளை எத்தனை அவமானப்படுத்தினேன். என் குடும்பத்துக்காக எவ்வளவு பண்ணினாள். அவளைச் சந்தேகம் வேறு பட்டேன். அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டு.

இப்படியே ஒரு வாரம் ஆனது. அவனால் வேலையும் பார்க்க முடியவில்லை. வீட்டிலும் இருக்க முடியவில்லை.

அவன் அம்மா தொணதொணத்தாள். ''எங்கேடா... போனா.. ஊருக்குப் போய்விட்டாளா..? இப்படிக் கூட ஒரு பெண் இருப்பாளா..? ஒரு வார்த்தை சொல்வதில்லை. எங்கு போகிறேன் வருகிறேன் என்று,'' அவர் புலம்பினார்.

நித்தியன் பதிலேதும் சொல்லவில்லை. அம்மா மேல் ஆத்திரம் வந்தது. இவங்களுக்கு வேலை செய்ய ஆள் வேண்டும். இவங்க பிரச்னை இவங்களுக்கு. வீட்டில் விரல் சொடுக்கினா... வேலைக்கு ஆள். இங்கு வந்து வீட்டு வேலை பார்க்கிறா...

எப்படித்தான் இப்படி மாறினாளோ... எல்லாம் எனக்காகத்தானே.. நான் அவளை எவ்வளவு கேவலமாகப் பேசினேன். அன்று எப்படி அழுதாள்.

ஒரு கணவனோட ஆதரவு இல்லாமல் இந்த வீட்டில் இருக்க முடியுமா.. என்னால் என்று அன்று கேட்டாளே... அதான் போய் விட்டாளோ... சுவேகா! இதை உனக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும் என்று இருந்தேனே... இப்போ இப்படிப் பண்ணி விட்டாயே.. நான் என்ன பண்ணுவேன். அன்று மாலை அவனுக்கு ஒரு போன் வந்தது. "ஹலோ... நான் ஸ்ரீதர் பேசறேன்," என்றான்.

"ஹலோ... நான் நித்தியன். நீங்க எப்படியிருக்கீங்க?"

சுவேகா ஊட்டியில் இருக்காளா..? மை... காட்.. எங்கெல்லாம் தேடினேன். ரொம்ப... ரொம்ப தேங்க்ஸ் ஸ்ரீதர். நீங்க சுவேகாவைப் பார்த்தீங்களா..? எப்படி இருக்கா...? நான் இதோ இப்பொழுதே கிளம்பி வருகிறேன்," என்றான்.

"சரி. சீக்கிரம் வாங்க. நேரில் பேசிக் கொள்ளலாம்," என்றான்.

## 15

அதிகாலையிலேயே ஸ்ரீதர் எஸ்டேட்டுக்குப் போய் விட்டான். "வாங்க நித்தியன்," என்று காபி வரவழைத்தான்.

"காபி எல்லாம் இருக்கட்டும். சுவேகா எங்கே ஸ்ரீதர்?"

"அவ பக்கத்து எஸ்டேட்டில் இருக்கிறாள்."

"பக்கத்து எஸ்டேட்டிலா.. ஏன்..?"

"அதான் உங்களைக் கேட்கிறேன். அவள் ஏன்...? இங்கு வேலைக்கு வந்தாள்? என்று."

"வேலைக்கா..." அதிர்ந்தான் நித்தியன்.



"உங்களுக்குத் தெரியாதா நித்தியன்?"

"நிச்சயமாகத் தெரியாது. அவ லெட்டரைப் பார்த்துத்தான் நான் தெரிந்து கொண்டேன். வீட்டை விட்டுப் போகிறேன் என்று எழுதியிருந்தாள். எங்கு, ஏன்.. போனாள் என்று எனக்குத் தெரியவில்லை.

"ஒரு வாரமாகத் தேடினேன். எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அந்த நேரத்தில்தான் நீங்க போன் பண்ணுனீங்க."

"எந்த ஒரு காரணமும் இல்லாமலா... வீட்டை விட்டு வருவா.. ஒரு பெண். அதுவும் சுவேகா வர மாட்டாள்," என்றான்.

நித்தியன் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான்.

"நீங்க அவளை மறந்து திருந்தீட்டீங்க. அதை நம்பலாமா..?"

"நான் பொய் சொல்லவில்லை ஸ்ரீதர். நீங்க என்னைத் தாராளமாக நம்பலாம்."

"நான் நம்புறது இருக்கட்டும். அவ நம்பணுமே... அதானே இப்ப. ஆனால் அவள் நம்புவது கஷ்டம்."

"அது எனக்கும் தெரியும். ஏன்னா... நான் அந்த மாதிரி அவளைப் பேசியிருக்கேன்.

"சரி வா ஸ்ரீதர். போய் சுவேகாவைக் கூட்டி வரலாம்," என்றான்.

இருவரும் கிளம்பிப் போகும் போது, நித்தியன் கேட்டான். "உங்களுக்கு எப்படித் தெரிந்தது - சுவேகா இங்கு இருப்பது?"

''நான் எஸ்டேட்டுக்கு வந்தேன். நான் வரும் போதெல்லாம் பக்கத்து எஸ்டேட்டில் அதான் சுவேகா இருக்கும் வீட்டில் உள்ள பெரியவர்களைப் போய்ப் பார்ப்பதுண்டு. அது மாதிரி நான் போன போது சுவேகாவை நான் பார்த்தேன். ஆனால் அவள் மறைந்து கொண்டாள். அவர்களிடம் பேசிக் கேட்டபோது, அவள் ஒரு அனாதை. அவளுக்குன்னு யாருமில்லை. அதான் இங்கு வேலைக்கு வந்தாள். நல்ல பெண் என்றார்கள். எனக்குச் சந்தேகம் வந்தது. இவள் எதுக்காக இப்படிச் சொல்லி இங்கு வர வேண்டும். பிரச்னை என்று நினைத்துத்தான் உங்களுக்குப் போன் பண்ணினேன்,'' என்றான்.

இருவரையும் பார்த்த அவள் அப்படியே நின்றுவிட்டாள். நித்தியனின் பார்வை அவளை விட்டு விலகவில்லை. அவள் தலை குனிந்தாள்.

நித்தியன் ஷேவ் செய்து ஒரு வாரம் ஆகியிருந்தது. தலை கலைந்து, கண்கள் சிவந்து, டிரஸ் கசங்கி, அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

ஸ்ரீதர் வீட்டுகாரங்களிடம் என்னமோ பேசினான். ''சரி, கூட்டிப் போங்கள்,'' என்றனர்.

''வா... சுவேகா,'' என்று ஸ்ரீதர் வீட்டுக்கு வந்தனர்.

''உனக்கு இவ்வளவுதான் தெரியுமா..? சுவேகா... என்னை விட்டு வர உனக்கு எப்படி மனசு வந்தது?''

''நான் எதுக்கு உங்களுக்கு. நீங்களாவது நிம்மதியாக இருங்கள் என்றுதான் இங்கு வந்தேன். என்னைத் தேடி எதுக்கு வந்தீங்க.''

''நான் செய்தது தப்புத்தான் சுவேகா. என்னை மன்னித்துவிடு. வா, வீட்டுக்குப் போகலாம்,'' என்றான்.



''என்? அவ என்ன ஆனால் உங்களுக்கென்ன? உங்க வீட்டுக்கு வேலைக்கு ஆள் வேண்டுமா..? இல்லை, செலவுக்குப் பணம் பத்தவில்லையா..? நான் சம்பாதித்துப் போட வேண்டுமா..?'' வார்த்தைகள் சவுக்கடியாய்ச் சுழன்றன.

''சுவேகா..'' என்று அதட்டினான்.

''நான் வர முடியாது. என்னால் அந்த மாதிரி வாழ்க்கை வாழ முடியாது.''

''நீ அந்த மாதிரி வாழ்க்கை வாழ வேண்டாம். நான் அவளை விட்டு வந்து மூன்று மாதம் ஆகிறது. எனக்கும், அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை,'' என்றான்.

அவனை ஏளனமாகப் பார்த்தாள். ''ஏன்..? அவள் அலுத்து விட்டாளா..? இப்போ நான் தேவைப்படுகிறேனா..? நான் அலுத்துப் போனால் இன்னொருத்தியா..?'' என்றாள் துடுக்காக.

நித்தியன் அடிக்கக் கை ஓங்கி விட்டான். அதற்குள் ஸ்ரீதர், ''சுவேகா... என்ன பேச்சு இது. உன் வாயில் இருந்து இத்தனை மட்டமான வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை,'' என்றான் வருத்தமாக.

''நித்தியன்! நீங்கள் அவசரப்படாதீங்க. பொறுமையாக இருங்க. முதலில் என்னோடு வெளியே வாங்க. சுவேகா, நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. நாங்கள் ஒரு மணி நேரத்தில் வருகிறோம்,'' என்று வெளியே கூட்டிப் போனான்.

## 16

நித்தியனின் முகம் இறுகியிருந்தது. ஸ்ரீதர் பேசினான். ''இங்கே பாருங்கள் நித்தியன். இந்த நேரம்

பொறுமையாக இருக்க வேண்டிய நேரம். நீங்கள் இப்படிப் பேசினால், அவளுக்கும் கோபம் வரும். எந்தப் பெண் தான் பொறுத்துப் போவாள். அவ புரியற மாதிரி எடுத்துச் சொல்லுங்கள்,'' என்று பேசினான்.

நித்தியனுக்கும் இது சரியென்றே பட்டது. அவன் இப்படிக் கத்தியிருக்கக் கூடாது. ''எனக்குப் பொறுமை இல்லை என்று உனக்குத் தெரியும். சுவேகா... என்று பேசியிருக்கக் கூடாது.

அவளும் பதிலுக்குப் பதில், அது எனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை என்றாள்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு, ''கிளம்பு சுவேகா...'' என்றான்.

''ஒரு வேசியோடு ஒப்பிட்டுப் பேசிய என்னை எதுக்கு இப்ப கூப்பிடுறீங்க. போய் அந்த ஒழுக்கமுள்ளவளோடு வாழுங்க,'' என்றாள்.

''எதுக்கு அவளை விட்டு வந்தீங்க என்ற காரணம் எனக்குத் தெரியணும்,'' என்றாள்.

''அதைத் தெரிந்து நீ என்ன பண்ணப் போறே... உனக்காகத்தான் விட்டு வந்தேன்,'' என்றான்.

''இது பொய். அவ உங்களை விரட்டி விட்டிருப்பா..'' என்றாள் இகழ்ச்சியாக.

''சரி. அப்படியே வைத்துக் கொள்,'' என்றான்.

''நான் எத்தனை கெஞ்சினேன். என்னால் உங்களை விட்டு இருக்க முடியாது என்று. என்ன கேட்டீங்க. நீயெல்லாம் ஒரு பொம்பளையா.. என்றுதானே... இப்போ மட்டும் உங்க கண்ணுக்கு என்னவாகத் தெரிகிறேன்?'' என்றாள் ஆத்திரமாக.

அவன் கண்களை இறுக மூடி, கை முஷ்டி இறுக நின்றான்.

''என் மனதில் என் வசுக்குத்தான் இடம் என்றீர்கள். என்னை நினைக்கக்கூட கூடாது என்றீர்கள். நான் உங்களை நினைக்கவில்லை. என் நெஞ்சில் இருந்து தூக்கி எறிந்து விட்டேன்.

''என்ன சொன்னீங்க. என்னை யாருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளலாம், எனக்கு ஆட்சேபணையில்லை என்றீர்கள். எப்படி மனசு வந்தது? இந்த வார்த்தையைச் சொல்ல? அதுக்கு எதுக்கு உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கணும்,'' என்று அழுதாள்.

''நான் பேசியதெல்லாம் தப்புத்தான் சுவேகா... இப்போ என் மனதில் உன்னைத் தவிர யாருமில்லை,'' என்றான்.

ஸ்ரீதர் வந்தான். ''நான் நேற்றே ஊருக்குப் போக வேண்டியது. நான் இன்று கிளம்புகிறேன். இந்தாங்க, பங்களா சாவி. வீட்டில் வேலைக்காரங்க கிட்டே சொல்லியிருக்கேன். உங்களைப் பார்த்துப்பாங்க. பேசி ஒரு நல்ல முடிவுக்கு வாங்க. பத்து நாள் இங்கு இருந்து பிறகு வாங்க,'' என்றான் சிரித்துக் கொண்டே.

''சுவேகா! மன்னிக்க முடியாத குற்றம் எதுவுமில்லை உலகில். நித்தியன்தான் மனம் திருந்தி வந்து விட்டாரே.. ஏன் இந்தப் பிடிவாதம் உனக்கு. விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் வாழ்க்கை. இதை நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை.''

''எதை விட்டுக் கொடுத்து வாழ்வது? புருசனையா..?'' என்றாள் வெடுக்கென்று.

''உன் கோபம் நியாயம்தான். ஆனால் இத்தனை கூடாது,'' என்றான் புன்னகையுடன்.

''சரி, சண்டை போட்டது போதும். நான் கிளம்புகிறேன். எதற்கு உங்களுக்கு இடையில். ஒரு வேளை நான் ஊருக்குப் போகட்டும் என்று தான் இப்படிச் சண்டை போடுறீங்களா..?'' என்றான் கேலியாக.

அவன் போன் அடித்தது. அவன் மகன் பேசினான். ''சுவேகா, என் மகன் பேசுறான். பேசு,'' என்றான்.

அவள் வாங்கிப் பேசினாள். அவன் மழலைப் பேச்சில் மனதைப் பறி கொடுத்தாள். ஊருக்கு வாங்க என்றது. உங்களைப் பார்க்க ஆசை. நீங்க அழகா இருப்பீங்களாம். உங்களுக்குப் பாப்பா இருக்கா என்றது.

எனக்குப் பாப்பா இல்லை எனும் போதே... நித்தியன் போனைப் பிடுங்கினான். ''இனி மேல் பிறக்கும் கண்ணா!'' என்றான்.

இவள் முகத்தைத் திருப்பினாள்.

ஸ்ரீதர் சிரித்துக் கொண்டே... ''ஆம் சுவேகா, ஒரு பெண்ணைப் பெற்றுக் கொள். நான் மருமகளாக்கிக் கொள்கிறேன். இந்த எஸ்டேட் உன் மகளுக்குத்தான். இன்னும் எத்தனை வாங்க வேண்டும் என்று சொல். இப்ப இருந்தே... வாங்கி விடலாம்,'' என்றான்.

குழந்தை என்றதும், சுவேகா முகம் மென்மையாக முறுவல் பூத்தது.

நித்தியனைப் பார்த்துக் கண் அடித்துவிட்டு வருகிறேன் சுவேகா... என்று விட்டுப் போனான்.



# 17

சன்னல் புறம் திரும்பி நின்றவளைத் தோளை தொட்டுத் தன்புறம் திருப்பிப் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றான். படுக்கையில் உட்கார வைத்து விட்டு, பக்கத்தில் அமர்ந்து, அவள் கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டான்.

அந்த மென்மையான அழுத்தம், அவளை என்னமோ செய்தது. அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவன் அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

''உன் மனசு எப்படித் துடித்திருக்கும் என்று புரிந்து கொண்டேன்டா... நீ எவ்வளவு செய்திருக்கே. அன்று உன்னை எப்படி அடித்துக் கேட்டேன். நீ ஒன்றும் பதில் சொல்லவில்லையே.. ஏன்..? உண்மையை நீ சொல்லியிருக்கலாமே...''

''எப்படிச் சொல்ல முடியும்? இது சொல்லக் கூடிய விசயமா... ஒரு கல்யாணம் ஆகாத பெண்ணைப் பற்றி... அதான் சொல்லலை. ஆனா என் மேல் சந்தேகப்படுவீங்க என்று நான் நினைக்கலை.''

''நான் சந்தேகப் படலை. என்னைத் திட்டம் போட்டு வரவழைத்தது வசு. நீ அறையில் இருந்து வந்ததை ஸ்ரீதரோடு பேசிச் சிரித்தது. காபி சாப்பிட்டது அனைத்தையும் நான் பார்த்தேன். ஆனா அது ஸ்ரீதர் என்று எனக்கு அப்போ தெரியாது.''

''வசு வேறு உன்னைப் பற்றித் தவறாகச் சொல்லியிருந்தாள். உன்னை அங்கு பார்த்தேன். வண்டியில போனாய். அப்படி இப்படி என்று. அன்று ரேவதி வந்தும் உன்னைத் தவறாகத்தான் சொன்னா... எல்லாம் சேர்ந்து

என்னை அப்படி நினைக்க வைத்துவிட்டது. சாரி கண்மணி!'' என்று அவள் கண்ணில் முத்தமிட்டான்.

''அவளை ஏன் விட்டு வந்தீங்க? உனக்காக என்று பொய் சொல்ல வேண்டாம்,'' என்றாள்.

ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பின் நடந்ததை அனைத்தையும் அப்படியே கூறினான். கோபத்தில் அவன் தாடை இறுகியது.

அவன் முகத்தை வருடிவிட்டாள். அந்தக் கையைப் பிடித்து அப்படியே கன்னத்தில் வைத்து அழுத்தினான்.

''அதற்கு முன்னாடியே என் மனம் மாறத் தொடங்கியது. சுவி, பெங்களூரில் உன் வீட்டில், இரவு நீ அழுதாய் பார். அப்பொழுதே.. எனக்கு உன் மேல் பிரியம் தான். அத்தனை பேசிவிட்டு எப்படி உன்னை என்று நினைத்தேன்.

''ஒரு நாள் இரவு நான் படுத்திருக்கும் போது, என் அறைக்கு வந்தாயே... வந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தாய்.. ஏன்டா.. அப்படி?''

''என்னால் படுக்க முடியவில்லை. நீங்கள் என்னை அப்படிப் பேசியும், உங்களை விட்டு இருக்க முடியவில்லை. வந்தாவது உங்க முகத்தைப் பார்க்கலாம் என்று வந்தேன்,'' என்றாள் முகம் சிவக்க.

''என் செல்லமே...'' என்று அவள் கன்னத்தைக் கடித்தான். பதிலுக்கு அவளும் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''உன் தங்கை கல்யாணத்தன்று இரவு உன் செல்லுக்கு போன் பண்ணினாள். நீதான் கோபத்தில் பால்கனியில் படுத்திருந்தாயே.. நீ தூங்கிவிட்டாய் போல. உன் செல்லை நான் எடுத்தேன். உன் தங்கை நீதான் என்று நினைத்து, தன் சந்தேகத்தைக் கேட்டாள்.



நானே... ஆடிப்போய் விட்டேன். என்ன பதில் நான் சொல்ல முடியும். கேட்காத மாதிரி, என்ன சுஜி?'' என்றேன்.

''அவளும் அதிர்ந்து விட்டாள் என்று நினைக்கிறேன். நானே.. நீ சொன்னது எனக்குச் சரியாகக் கேட்கவில்லை. என்ன இன்னேரத்தில்... உன் அக்கா தூங்குறா... எழுப்பட்டுமா..?'' என்றேன்.

''வேண்டாமத்தான்,'' என்று போனை வைத்து விட்டாள்.

''அப்படி என்ன கேட்டாள் அவள்?'' என்றாள்.

அவள் காதுக்குள் ரகசியமாகச் சொன்னான். அவள் சீய்.. என்று சிவந்தாள். ''இப்படியா... கேட்டாள். எனக்கே கூச்சமா இருக்குங்க,'' என்றாள்.

''இதில் என்ன கூச்சம் இருக்கு. அக்கா அனுபவப் பட்டவள். நமக்கு முன்னாடியே கல்யாணம் ஆனவள். தெரியாத விசயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கேட்டிருப்பாள்,'' என்று கண்ணடித்தான்.

மீண்டும் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''என்னடா... எதுவா இருந்தாலும் இன்றே இப்பொழுதே கேட்டு விடணும். நானும் மறைக்காமல் சொல்லிவிடுகிறேன். இனிமேல் மனமொத்த தம்பதிகளாக இருக்கணும்,'' என்றான்.

''அன்று நான் ஹோட்டலுக்கு வந்த போது, நீங்க இருவரும் இருந்தீங்க. உங்களுக்கு என்னைப் பார்த்துக் கஷ்டமாக இல்லையா...?''

''இருந்தது. என்னால் சாப்பிடவே முடியவில்லை. நான் என்ன செய்ய முடியும். அதான் மறு வாரம் அம்மா,

அப்பா எல்லாரும் கோயிலுக்குப் போயிருந்த போது, டிபன் வாங்கி வந்து கொடுத்தேன். நீதான் தூக்கி எறிந்து விட்டாயே...

''கொடைக்கானலில் உன்னை நெருங்கி வந்தேனே... அப்பக் கூட என்னைப் புரிந்து கொள்ளவில்லையா..?''

''புரிந்து கொண்டேன். அதான் இனி உங்களுடன் இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். என்மேல் எனக்கே நம்பிக்கையில்லை. எங்கே உங்களுக்கு இணங்கி விடுவேனோ என்ற பயம் வந்துவிட்டது. அவளிடம், அது மாதிரி இருந்து கொண்டு, என்னிடமும் அது மாதிரி இருக்க முயற்சி பண்றீங்க என்று நினைத்துத்தான் வீட்டை விட்டு வந்தேன்,'' என்றாள்.

''நான் அது மாதிரி உன்னிடம் அப்படி இருப்பேனா... உன்னை மட்டம் தட்டிப் பேசவுமே... எனக்கு அவள் மேல் கோபம் வந்தது. எனக்கு அவள் மீது இருந்தது கவர்ச்சி தானே தவிர காதல் இல்லை. அதன் பிறகுதான் நானே புரிந்து கொண்டேன்.

''உனக்கு நான் டைவர்ஸ் தர மாட்டேன் என்று சொன்னேனே... அது என்னை அறியாமல் என் ஆழ் மனதில் இருந்திருக்கே... நீ கேட்டே... அவளையே கல்யாணம் பண்ணியிருக்க வேண்டியதுதானே என்று. பிறகு தான் நினைத்துப் பார்த்தேன். நான் அப்படி நினைத்திருந்தால், யாரால் தடுக்க முடியும்? ஏதோ காரணம் சொல்லி உன்னை மணந்து கொண்டேன்.

''நீ அன்று என்னை அணைக்க வந்ததும், உன்னைத் தள்ளினேனே... அது ஏன் தெரியுமா...? என் மனம் தளர்ந்துவிடுமோ... என்ற பயம்தான்,'' என்றான்.



''ஏன்டா எனக்கு இவ்வளவு டிரஸ் எடுத்து வைத்திருக்கே... என்னை ஒரு நாள் கூட நீ விட்டுக் கொடுத்ததில்லையே சுவி...'' என்று கொஞ்சினான்.

''ஹாஸ்பிடலில் உங்க கூட அவ இருந்தது எனக்கு எப்படியிருந்தது தெரியுமா..? அவள் அன்று என்னை எப்படிப் பேசினாள்? என் மனமே உடைந்துவிட்டது எனக்காக நீங்க ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே...''

''நான் பேசினேன் சுவி. பேசாமல் இருப்பேனா..?''

''அப்புறம் ஏன்..? அவ வீட்டுக்குப் போனீங்க?'' என்றாள்.

''எனக்கு உதவிக்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. பாத்ரூம் போகக் கூட, இதை வந்து நான் உன்னிடம் எதிர்பார்க்க முடியுமா..? சொல்லு. எதிர்பார்ப்பதுதான் முறையா..? அதான் அங்கு போய் விட்டேன்.''

''ஏன் நான் பார்க்க மாட்டேனா... இல்லை, பார்க்கக் கூடாதா...?''

''நீ பார்ப்பாய் என்று எனக்குத் தெரியும். எனக்குத்தான் கஷ்டமாக இருந்தது. அதான்...'' என்றான் சமாதானமாக.

''வேற என்ன சந்தேகம், என் தேவதைக்கு? எல்லாம் முடிந்ததா..? இனி வேலையைத் துவங்கலாமா..?'' என்றான் புருவத்தை உயர்த்தி.

''என்ன வேலை ஐயாவுக்கு இந்த நேரத்தில்...?'' அவள் சின்ன சிவந்த உதட்டால் கேட்டாள்.

''முக்கியமான வேலை. இந்த எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரியை ரெடி பண்ண வேண்டும். அதான்...'' அவள் இதழில் இதழ் பதித்தான்.

அவள் கைகள் இரண்டையும் மாலையாக்கி, அவன் கழுத்தில் போட்டுத் தன் பக்கம் இழுத்தாள்.

அவள் முகம் நோக்கிக் குனிந்தான். இனி அவர்கள் வாழ்வில் என்றும் இனிமைதான். காற்று கூடச் சத்தமில்லாமல் நுழைந்து விட்டு, கண்ணை மூடிக் கொண்டு வெளியே வந்தது. நாம் கூட இனி அவர்களுக்கு இடையே போகக் கூடாது என்று.

*



# இனி அவள்தான்



## 1

"நான் சொல்வதை உன்னால் கேட்க முடியுமா...? முடியாதா..?"

"நான் கேட்க மாட்டேன். என் உயிரே போனாலும். எதற்கு என்று காரணம் சொல்லுங்கள். அது சரி என்றால், நான் கேட்கிறேன்."

மாதவனுக்குத் தாடை இறுகிற்று. பற்களை நற... நற வெனக் கடித்தான். "நான் சொல்வதைக் கேள். இந்தக் குழந்தை வேண்டாம். உன்னை மன்னித்துவிடுகிறேன்." என்றான்.

"நான் என்ன தவறு செய்தேன். நீங்கள் என்னை

''வாயைத் திறந்தே. அப்படியே கொன்று போட்டு விடுவேன். என்ன தவறு செய்தேன் என்றா.. என்னிடமே கேட்கிறாய். அதை என் வாயால் வேற சொல்ல வேண்டுமா..? உனக்கே இது கேவலமா இல்லை. நீ என்ன தவறு செய்தாய் என்று, எனக்கு தெரியாமல் போய் விடும் என்று நினைத்தாயா..?'' அவன் கோபத்தின் உச்சியில் இருந்தான்.

தேவி நடுங்கிப் போய் விட்டாள். எதற்கு இந்தக் கோபம். தவறு செய்தாய்... தவறு செய்தாய்.. என்று சொல்கிறானே. அது என்ன தவறு, என்று தெரிந்தாலாவது, ஆமாம், இல்லை, என்று சொல்லலாமே. இப்படி எதுவுமே புரியாமல் பேசினால், என்ன செய்வது. இன்று முடிவாகக் கேட்டு விட வேண்டும். இவன் இப்படியே தினம் சண்டை போடுகிறான்.

மெதுவாக, ''ஏங்க, குழந்தை வேண்டாம் என்று சொல்றீங்க. இது உங்க குழந்தைதானே!'' என்று வாய் மூடும் முன் அறைந்தான்.

அவளுக்குச் செவிப்பறை கிழிந்தது. காது ஙொய்... என்று கேட்டது. அவள் அதிர்ந்துவிட்டாள். ஒன்றும் புரியவில்லை. வாய் திறந்து கூட எதுவும் கேட்க முடியவில்லை.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது. அவன் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

''என்ன... ஒரு தைரியம் இருந்தால், இது என் குழந்தை என்பாய். இது யார் குழந்தை? உண்மையைச் சொல். இல்லையென்றால் உன்னைக் கொன்றே விடுவேன்,'' என்று அவளைப் பிடித்து உலுக்கினான்.



அவளுக்குச் சர்வமும் ஆடியது. கை, கால் எல்லாம் நடுங்கியது. நிற்க முடியவில்லை. பக்கத்தில் இருந்த கட்டிலை இறுகப் பிடித்துக் கொண்டாள். வியர்த்து வழிந்தது. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. வாய் திறந்து பேச முடியவில்லை. நாக்கு மேல் அன்னத்தில் ஒட்டிக் கொண்டது. அவன் சொன்னது நமக்குத்தான் சரியாகப் புரியவில்லையோ.. நம் காதில்தான், சரியாக விழவில்லையோ, என்று தடுமாறி, ''என்..ன சொன்னீங்க?'' என்றாள்.

''ஏன்? நான் உனக்குப் புரிந்த மொழியில்தானே... சொன்னேன். இது என் குழந்தை இல்லையென்று.''

அவளுக்குக் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. இதயத்தைக் கொதிக்கிற எண்ணெயில் போட்டது போல் இருந்தது. இனி என்ன இருக்கு பேச. இதை விட ஒரு மனைவியைக் கணவன் கேவலப்படுத்த முடியுமா..? இதைக் கேட்டுக் கொண்டு, இன்னும் உயிர்... என் உடம்பில் இருக்கிறதே. பூமி பிளந்து உள்ளே போகவில்லையே.. அப்படியென்றால், அவன் சொல்வது உண்மையோ..? கடவுளே! என் உயிரை எடுத்துக்கொள் என்று மனதில் நினைத்தாள்.

''எதனால், உங்களுக்கு என்மேல் இந்தச் சந்தேகம்? நான் நீங்கள் சந்தேகப்படும்படி நடந்து கொண்டேனா..? இல்லை, வேறு யாருடனும் தப்பாகப் பழகியதை நீங்கள் பார்த்தீர்களா..? திடீர் என என்மேல் இப்படி ஒரு பழியை ஏன் போடுறீங்க. இதற்கு என்னை நீங்க கொன்று போட்டிருக்கலாம். ஒரு பெண் என்ன பேர் வாங்கக் கூடாதோ... நான் வாங்கிவிட்டேன். அதுவும் உங்க

வாயாலே...'' குரலே எழவில்லை. மெதுவாகக் கேட்டாள்.

''நான் உன்னைக் கேட்க வேண்டிய கேள்வியை எல்லாம், நீ என்னிடம் கேட்கிறாயா..? நான் உனக்கு என்ன குறை வைத்தேன். நீ இப்படி அலைய...'' என்று அவள் இதயத்தை நார்... நாராகக் கிழித்தான்.

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. ''நான் 'அந்த' மாதிரி தப்புப் பண்ணுவேன் என்று நினைக்கிறீங்களா..?''

''அதான் பண்ணிவிட்டாயே. மறுபடி என்ன கேள்வி? நாயைக் குளிப்பாடி நடுவீட்டில் வைத்தாலும், அது குரைத்துக் கொண்டு, தெருவுக்குத்தான் போகுமாம். அது போல நான் அந்தஸ்து பார்க்காமல், உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன் பார். எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

''நீ ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை என்று கல்யாணம் செய்தேன் பார், என்னைச் சொல்லணும். எனக்குத் தீராத அவமானத்தை, நீ தேடித் தந்துவிட்டாய். இதை விட எனக்கு வேற என்ன வேண்டும். இது நாலு பேருக்குத் தெரிந்தால் என் கவுரவம் என்ன ஆவது? வெளியில் தலை காட்ட முடியுமா? இனி என் முகத்தில் முழிக்காதே.. வீட்டை விட்டு வெளியே போ...'' என்று விரட்டினான்.

அவளுக்கு என்ன சொல்லிப் புரிய வைப்பது என்றே தெரியவில்லை. இப்படியொரு சந்தேகம் வரக் காரணம் என்ன என்றே தெரியவில்லை.

அவள் எவ்வளவோ கெஞ்சினாள். இது உங்கள் குழந்தைதான் என்று.



''இன்னொரு முறை இப்படிச் சொல்லே..'' என்று அறைந்தான். ''வீட்டை விட்டுப் போ!'' என்று கேவலமாக விரட்டினான்.

''போ.. போ... என்றால், நான் எங்கு போவேன்?'' என்று அழுதாள்.

''எங்காவது போய்த் தொலை. இல்லையென்றால் உயிரை விடு.'' என்றான் அரக்கத்தனமாக.

அவளுக்கு உயிரையே பிடுங்கி அனலில் போட்டது போல் இருந்தது. கட்டிய கணவன் எங்காவது போய்த் தொலை.. இல்லை, உயிரை விடு என்றால், என்ன செய்வது, என்று தெரியாமல் அழுதாள்.

படித்தவன், பண்புள்ளவன், நாலு பேருடன் பழகுபவன் இப்படிப் பேசினால், என்ன செய்ய முடியும்?

அன்று இரவு தேவிக்குத் தூக்கம் வரவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் நிற்கவில்லை. வந்தவன் பேசாமல் போய்ப் படுத்துவிட்டான். அவள் சாப்பிடவில்லை. உயிரைத்தான் விட்டு விடலாமா..? எதற்காக இந்த அவப் பெயருடன் வாழ வேண்டும்?



## 2

அவள் நினைத்து... நினைத்துப் பார்த்தாள். அவனுக்குப் பிடிக்காத யாருடனும் பேசினோமா...? எங்காவது வெளியில் சென்றோமா...? எதுவும் நினைவுக்கு

வரவில்லை. அது மாதிரி சென்றால் அல்லவா நினைவிற்கு வர.

அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும், நெஞ்சில் ஈட்டியாய்க் குத்தியது. உன்னை டைவர்ஸ் செய்து விடுவேன். இல்லை, எப்போதோ.. வீட்டை விட்டுத் துரத்தியிருப்பேன். என் கவுரவம் என்ன ஆவது. என் ஃப்ரெண்ட்ஸ் எல்லோரும் என்ன நினைப்பாங்க. என் தொழிலில் தொடர்புடையவர்கள் அத்தனை பேரும் மேல் மட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று தான், உன்னை வீட்டில் வைத்திருக்கேன். உன் மேல் ஆசைப்பட்டோ.. பாசமோ... பிரியமோ, எதுவும் எனக்குக் கிடையாது. இந்த வீட்டில் உள்ள பொருள்களில் நீயும் ஒன்று. அவ்வளவுதான்.''

அவன் பேசியதை நினைக்க, உடம்பெல்லாம், தீப்பற்றி எரிந்தாற் போல இருந்தது. இனி என்ன செய்வது? உன்னிடம் பிரியம், பாசம் இல்லை. இந்த வீட்டில் நீயும் ஒரு பொருள் என்பவனிடம் இனி இருக்கலாமா..? அவன் போடும் சாப்பாட்டை இனி சாப்பிடலாமா..? எங்கு செல்வது. அம்மா வீட்டிற்கும் செல்ல முடியாது. அண்ணியிடம் அம்மா படும் பாடே பெரிதாக இருந்தது.

அண்ணி ஏற்கெனவே, நீ இவ்வளவு வசதியாகத் தானே இருக்கே. உன் அம்மாவை உன்னிடம் வைத்துக் கொள்வது தானே என்று திட்டுகிறாள். மாதவனுக்கோ அவள் அம்மா இங்கு வரக்கூடாது. ஏதாவது செலவுக்குப் பணம் கொடுக்கலாம் என்றால், அதுவும் முடியாது. மாதவன் தேவியிடம் பணம் கொடுக்கமாட்டான். அவள் என்னதான் செய்வாள்? நானே இந்த வீட்டில் அனாதை



மாதிரி இருக்கிறேன். இனி இன்னொரு அனாதைக்கு எங்கே இடம்?

மாதவன் கல்யாணம் நடந்த நாளில் இருந்தே. அவளிடம் அதிக அன்பாகவோ, பாசமாகவோ நடந்து கொள்ளவில்லை. அது அவளுக்குத் தெரிந்திருந்தாலும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவன் குணமே அப்படித்தானோ... என்று நினைத்தாள். ஆனால் அவன் மீது இவள் உயிரையே வைத்திருந்தாள். அந்த அன்பைக் காண்பிக்கக் கூட, அவன் இடம் தரவில்லை.

அவன் தேவை என்றால் தவிர, அவளிடம் பேச மாட்டான். ஏன் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான். அவளாகப் பேசினால் கூட முகம் திருப்பிக் கொண்டு சென்றுவிடுவான். அவளுக்கு மனம் வலிக்கும். இருந்தாலும் அதை மறந்து விட்டு, மறுபடியும் அவனிடம் செல்வாள். வேறு வழி இல்லையே - பொறுத்துப் போவது தவிர. ஒரு வேளை எல்லோருமே இப்படித்தான் குடும்பத்தில் இருப்பாங்களோ.. நாம் தான் அவனிடம் அதிக அன்பை எதிர் பார்க்கிறோமோ, என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொள்வாள்.

வகை, வகையாக டிபன், சாப்பாடு செய்வாள். ஒரு நாள் கூட வாய் திறந்து, நல்லாயிருக்கு என்று சொல்ல மாட்டான். அவளாக நல்லாயிருக்கா, உங்களுக்கு டேஸ்ட் பிடிக்குதா, பிடிக்கவில்லையென்றால் சொல்லுங்கள். உங்களுக்குப் பிடிச்ச மாதிரி செய்கிறேன் என்பாள்.

அவன் உடனே, நான் சாப்பிடட்டுமா..? இல்லை, எழுந்து போகட்டுமா..? என்பான். முகத்தில் அறைவது

போல. நீ இப்படியே தினம் கேட்டால், நான் வீட்டில் சாப்பிடுவதையே விட்டுவிடுவேன் என்றான்.

அதில் இருந்து, அவள் கேட்பதேயில்லை. அவன் சாப்பிடும் நேரத்திலாவது, ஏதாவது பேசமாட்டானா என்று தான் பேச்சுக் கொடுப்பாள். அவன் எதற்கும் மசிய மாட்டான். மற்றப் பெண்கள் எல்லோரும் எப்படித் தான் முந்தானையில் முடிந்து வைத்திருக்காங்களோ... தெரியவில்லை. அதற்கு என்ன செய்ய வேண்டுமோ தெரியவில்லை.

தன்னை எதனால் இப்படி வெறுக்கிறான்? கல்யாணமாகி இரண்டு வருடத்திற்கு மேல் ஆகிறது. ஏன் என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவன் என்ன பேசினாலும் பொறுத்துத்தான் போகணும். அண்ணியிடம் இருக்க முடியாது. தான் போனால், அம்மாவிற்கு இன்னும் தொந்தரவு. அங்கு அண்ணியிடம் கடுஞ்சொல் வாங்கிக் கொண்டு, வாழ்வதை விட இவனிடமே இருந்துவிடலாம் என்று நினைத்தாள்.

அடிவயிற்றை மெதுவாகத் தடவிப் பார்த்தாள். நீ ஆணா, பெண்ணா என்று தெரியாது. உன்னை உன் அப்பாவிற்குப் பிடிக்கவில்லை. முடிந்தவரை உனக்காகப் போராடுகிறேன். முடியவில்லை என்ற நிலை வரும் போது, நான் உன்னைக் காப்பாற்ற, இந்த வீட்டை விட்டுப் போய் விடுகிறேன் என்று குழந்தையிடம் பேசினாள்.

குழந்தை பிறந்தாலாவது, அவனிடம் ஒரு பாசம் பிறக்கும். வீட்டிற்கு நேரத்திற்கு வருவான். லேட்டாக வந்தால் ஏன் என்று கேட்கக் கூடாது. அப்படித்தான் கல்யாணம் ஆன புதிதில், ''எங்க இவ்வளவு லேட், வேலையிருந்ததா?'' என்று கேட்டு வாய் மூடு முன் அறைந்தான்.

இந்த மாதிரி என்னைக் கேள்வி கேட்குற வேலையெல்லாம் வைத்துக் கொள்ளாதே. இதுவே கடைசி முறையா... இருக்கட்டும்.

அதில் இருந்து அவள் வாய் திறப்பதேயில்லை. அவளாகச் சென்று உதவினாலும், அவன் வேண்டாம் என்று சொல்லிவிடுவான். இன்று வரை நீ சாப்பிட்டியா.. இல்லையா.. என்று ஒரு நாள் கூடக் கேட்டதில்லை. ஒரு கடைக்கு, சினிமாவுக்கு, எதுவும் கிடையாது.

தீபாவளி, பொங்கல் என்றால், ஒரு சேலையை எடுத்து வந்து, அவள் முன் விசிறியடிப்பான். அதையும் மனம் வலித்தாலும், வெளிக் காட்டிக் கொள்ளாமல், எடுத்துக் கொள்வாள். அண்ணியும் இப்படித்தானே. அப்போது வாங்கிக் கொள்ளவில்லையா.. என்று மனதைச் சமாதானப்படுத்தினாலும், தன்னையறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் வழியும்.

மறுநாள் காலையில் எழுந்து, எதுவும் நடவாதது போல், வேலைகளைப் பார்த்தாள். அவனுக்கு டிபன் செய்து எடுத்து வைத்தாள். அவன் சாப்பிடாமலேயே சென்றான். ''சாப்பிடுங்க,'' என்று அவன் பின்னாலேயே சென்றாள்.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கிவிட்டுச் சென்று விட்டான். அவளுக்குப் பசி, மசக்கை, அவன் பேசியது எல்லாம் சேர்ந்து, மயக்கம் வந்தது. அப்படியே சோபாவில் படுத்து விட்டாள்.

மாதவன் வந்து இரவு லைட்டைப் போட்டான். அப் பொழுதுதான் அவள் விழித்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை முதலில். பின் காலையில் நடந்ததை நினைத்தாள். நாம் ஒரு நாள் முழுவதும் மயக்க நிலையி லேயே... இருந்திருக்கோம். எழ முயன்றால், எழ முடிய வில்லை. தலை பாரமாக இருந்தது. அவன் நேராக மாடிக்குச் சென்றுவிட்டான். இவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

மெதுவாக எழுந்து முகத்தில் தண்ணி அடித்துக் கழுவி னாள். நெஞ்சு பட..பட வெனத் துடித்தது. அப்படியே குழாய் அடியில் கண்மூடி அமர்ந்துவிட்டாள்.

கீழே இறங்கி வந்தவன், அவள் உட்கார்ந்து இருந்த நிலையைப் பார்த்தான். ஒரு கணம் தயங்கி, பின் சென்று விட்டான். அவளைப் பார்த்தாலே அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. அவளுக்கு என்ன குறை வைத்தேன். எனக்குத் துரோகம் பண்ணினாள். அவன் மனம் நீ அவ ளுக்குக் குறை வைக்கவில்லையா.. என்று கேட்டது. கண்களை இறுக மூடித் திறந்தான். காரை மனம் போன போக்கில் செலுத்தினான்.

அவன் அம்மாவிடம் எவ்வளவோ எடுத்துச் சொன் னான். எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று. அவன் அம்மா கேட்கவில்லை. ஏன் வேண்டாம் என்கிறாய். உனக்கு ஏன் இந்தப் பிடிவாதம் என்று கோபப்பட்டார்.

ஆனால்.. அவன் இன்று வரை, யாரிடமும் ''அந்த ரகசியத்தைச்'' சொல்லவில்லை. கல்யாணம் செய்து கொண்டு, ஒரு பெண்ணுடைய வாழ்க்கையை வீணாக்க வேண்டுமா... என்று நினைத்து மறுத்தான்.



கடைசியில் அவன் அம்மாவின் பிடிவாதமே ஜெயித்தது. மறுக்க முடியவில்லை அவனால். நான் தொழிலில் முன்னேற வேண்டும் என்று வாதிட்டான்.

உன்னை மாதிரி எல்லோரும் நினைத்தால், என் னாவது. தொழிலில் எப்ப வேண்டுமானாலும் முன்னேற லாம். ஆனால் கல்யாணம் எப்ப நடக்கணுமோ, அப்போ நடந்தாகணும். அது தான் நல்லது. இப்ப தொழிலில் நல்ல முன்னேற்றம் தானே. கல்யாணத்தைச் செய்து கொண்டு, தொழிலில் முன்னேறு என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

அவனால் அம்மாவின் வார்த்தையைத் தட்ட முடிய வில்லை. சிறு வயது முதல் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்து, ஆளாக்கியவர். அவர் மனம் கலங்குவது, அவனால் தாங்க முடியாமல் போயிற்று.

அம்மா! இப்போது நானல்லவா... கஷ்டப்படுறேன். நீங்கள் பார்த்த பெண் ஏழை என்றால் கூட பரவா யில்லை என்று தானே சம்மதித்தேன். ஆனால் அவள் இன்று... நினைக்கவே எனக்கு அருவருப்பாக உள்ளது. என் மனைவி என்று கூடச் சொல்லத் தகுதியற்றவளை, நான் எப்படி வைத்துக் குடும்பம் நடத்த முடியும். அவள் செய்த தப்புக்கு, நான் தண்டனையை அனுபவிக் கிறேன். சத்தமில்லாமல் வீட்டோடு இரு. ஆனால் குழந்தையை அழித்து விடு என்கிறேன். கேட்க மாட்டேன் என்கிறாள். இனி இவளை ஒரு நிமிடம் கூட வீட்டில் வைத்திருக்க முடியாது.

அவளைப் பார்க்கப்... பார்க்க, நான் கொலைகாரன் ஆகிவிடுவேனோ என்று பயமாக இருக்குது. இதே சிந்தனையில் வெகு தூரம் வந்துவிட்டான்.

தேவி தூங்காமல் விழித்திருந்தாள். காலிங் பெல் சத்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்துவிட்டாள். அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பின் தலையைக் குனிந்து கொண்டு சென்றுவிட்டாள்.

''தேவீ...'' என்று அழுத்தமாகக் கூப்பிட்டான்.

அவள் திரும்பாமலேயே நின்றாள்.

''என்ன முடிவு எடுத்திருக்கே...?''

''இதற்கு என்ன காரணம் என்று சொல்லுங்கள். நான் என் முடிவைச் சொல்கிறேன்.''

''இது என் குழந்தை இல்லை.''

''அப்படியென்றால்..?'' திரும்பி நின்று கேட்டாள்.

''இது தவறான முறையில் வந்த குழந்தை என்கிறேன். நீ ஒழுக்கமானவள் இல்லை என்கிறேன்!'' என்றான். நெஞ்சிலே ஈரம் இல்லாமல்.

அவள் கண்களில் தீப்பொறி பறந்தது. ''என்னை நடத்தை கெட்டவள் என்கிறீர்களா..?''

''ஆமாம்,'' என்றான் அழுத்தமாக.

அவள் ஆவேசமானாள். ''நான் கூட குழந்தை தான் வேண்டாம் என்கிறீர்கள் என்று நினைத்தேன். இப்பொழுது தான் தெரிகிறது. இது தவறான முறையில் வந்த குழந்தை என்று தான் வேண்டாம் என்கிறீங்க என்று. நான் அப்படி நடந்து நீங்க பார்த்தீங்களா..?'' என்றாள் ஆத்திரமாக.

''இதை வேறு நான் பார்க்கணும் என்று சொல்கிறாயா..?'' அவனும் கோபத்தின் உச்சிக்குப் போனான்.



''நானும் சொல்லக் கூடாது என்று தான் மறைமுகமாகப் பேசினேன். ஆனால் என்னைச் சொல்ல வைத்துவிட்டாய், கேட்டுக் கொள்,'' என்று, அவள் மீது திராவகத்தை வீசினான்.

''போன மாதம் வந்திருந்தானே... உன் அத்தை பையன். உன் முறை மாப்பிள்ளை. அவன்தான்டி. இந்தக் குழந்தைக்குத் தகப்பன். அவனே சொன்னான் என்னிடம், சிறு வயதில் இருந்தே, எங்க இரண்டு பேருக்கும் தான் திருமணம் என்று சொல்லி வளர்த்தார்கள். அது இப்போது நடக்காமல் போய்விட்டது என்றான். அவன் வந்து இரண்டு நாள் தங்கி, ஆட்டம் போட்டு விட்டுப் போனான், அப்படித்தானே...?''



3

தேவி காது இரண்டையும் பொத்திக் கொண்டாள்.

''ஐயோ கடவுளே... என்ன பேச்சு பேசுறீங்க. நா..னா... அப்படி. எப்படி என் மீது இப்படி ஒரு சந்தேகம் வந்தது? அத்தை மகன் என்றால், நான் அது மாதிரி நடந்து கொள்வேனா..? சொந்த பந்தங்களில், சில வீடுகளில் இது மாதிரி பேசிக் கொள்வதில்லையா..? அதுக்கும், இதுக்கும் முடிச்சுப் போடுறீங்களே.. அவன் கூட நான் அப்படியிருந்தால். உங்களை ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்?'' என்று அழுதாள்.

''எல்லாம் பணந்தான்டி... பணத்துக்காக, என்னோடயும், சுகத்துக்காக அவனோடயும்...''

''போதும் நிறுத்துங்கள். இனி ஒரு பேச்சுப் பேசுனீங்க நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது.

''இந்த இரண்டு வருடத்தில், உங்கள் மனம் கோணும் படி நடந்து இருக்கேனா? ஒரு வார்த்தை என்னிடம் அன்பாகப் பேசியிருப்பீங்களா? நீ சாப்பிட்டியா...? இல்லையா..? உனக்கு என்ன வேண்டும் என்றாவது கேட்டிருப்பீங்களா? உங்களுக்கு நான் என்றைக்குத் தேவையோ, அன்று மட்டும் மேலே வா... என்று சொல்வீங்க. நான் ஒரு நாளாவது, உங்களைக் குறை கூறி இருக்கேனா? ஒரு மனைவி மாதிரியா என்னை நடத்தினீங்க? ஏழை என்றாலே.. எனக்குப் பிடிக்காது என்றீர்களே. அப்புறம் எதுக்காக என்னைக் கல்யாணம் செய்து கொண்டீங்க. உங்க குணம் கண்டு தானே நடக்கிறேன். மற்றவர்களுடன் எல்லாம், எப்படிப் பேசிச் சிரிக்கிறீங்க. ஒரு நாளாவது, என்னோடு ஒரு வார்த்தை பேசியிருப்பீங்களா..?

''உங்க பிறந்த நாள் அன்று ஹோட்டலில் பார்ட்டி கொடுத்தீங்களே.. ஒரு வார்த்தை என்னிடம் சொன்னீங்களா? நான் ஏன் சொல்லவில்லை என்று கேட்டேனா?''

''அப்போ இத்தனை வருடம் நான் நடத்தை கெட்டவள் என்று தானே நினைத்துக் கொண்டிருக்கீங்க. உங்க கவுரவத்துக்காகத் தானே என்னை இந்த வீட்டில் வைத்திருக்கீங்க. நான் கனவில் கூட நினைக்கவில்லையே... நீங்கள் என்னை இப்படி நினைப்பீங்க என்று. என்றாவது ஒரு நாள், என் அன்பைப் புரிந்து கொள்வீங்க என்று நினைத்தேனே. எனக்குனு ஒரு மனசு. அதில் ஆசை, பாசம் ஒன்றுமில்லை என்று நினைத்து விட்டீங்களே. நான் என்ன செய்வேன்?'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

''பணத்துக்காக நான் உங்களை, உடம்பு கூ..த்.. ஐயோ! சொல்லவே நாக் கூசுதே. பணத்துக்காக நான் தப்பு பண்ணுவேனா? அதை உங்களைக் கல்யாணம் பண்ணித் தான் செய்யணுமா? ஏழை என்றால் தன்மானம் இருக்காதா? ஒழுக்கம் இருக்காதா?'' என்று அழுதாள்.

அவன் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. கல்லில் வடித்த சிலை போல் நின்றிருந்தான். அவள் சென்று விட்டாள்.

காலையில் மாதவன் கிளம்பிக் கீழே வந்தான். டைனிங் டேபிளில் ஒன்றுமில்லை. விருட்டென்று போய்விட்டான். போனவன் இரவு தான் வீட்டுக்கு வந்தான். வீடு இருட்டாக இருந்தது. லைட்டைப் போட்டான். காலையில் வீடு எப்படி இருந்ததோ அப்படியே இருந்தது. அவனுக்கு மனம் 'திடுக்'கென்றது. உள்ளே சென்று பார்த்தான். அவள் இல்லை. அடுப்படியில், பின் தோட்டத்தில் பார்த்தான். எங்கும் இல்லை. அவள் போய் விட்டாள். எங்கு போயிருப்பாள் என்று நினைத்தான்.

அப்படியே சோபாவில் இரவு முழுவதும் உட்கார்ந்திருந்தான்.

தேவி விடியும் முன்பே வீட்டை விட்டுப் போய்விட்டாள். அவளுக்குப் போக வேற இடம் இல்லை. தன் அண்ணன் வீட்டிற்குத்தான் சென்றாள். என்ன நடக்குமோ என்று பயந்தாள்.

மகளைப் பார்த்ததும், அந்தத் தாயின் சுருங்கிய முகத்தில் அப்படி ஒரு பிரகாசம். மகளைப் பார்க்க

முடியவில்லையே என்ற தவிப்பு, ஏக்கம், அந்தத் தாயின் மனதில். தன் பெண் நன்றாக இருக்கிறாள் என்ற நினைப்பே போதும், என்று சந்தோசப்பட்டாள். இப்பொழுது தன் பெண்ணை நேரில் பார்க்கவும், எழுந்து சென்று, அப்படியே அணைத்துக் கொண்டாள். கண்களில் கண்ணீர் வழிந்தது.

தேவியும் அம்மாவைக் கட்டிக் கொண்டாள். மகளை நிமிர்த்தி, என்னம்மா இவ்வளவு காலையிலே என்று விசாரித்தார். அவள் என்ன சொல்ல முடியும்?

அவள் அண்ணனும் அண்ணியும் எழுந்து வந்தனர். அவர்களுக்கும் அதிர்ச்சி. கல்யாணமாகி வீட்டிற்கே வராதவள், இன்று அதுவும் அதிகாலையில் வந்திருக்கிறாள் என்றால் ஏதாவது ஒரு காரணமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அதட்டும் குரலில், ''என்னடி அதிசயமாக வீட்டுப் பக்கம் வந்திருக்கே?'' என்றாள் கேலியாக.

தேவி நடந்ததை ஒன்று விடாமல் சொன்னாள்.

அதைக் கேட்ட தாய் கண்ணீர் வடித்தார். என் பெண்ணைப் பார்த்து இப்படிக் கேட்டானா.. என்று.

அவள் அண்ணியோ ஏளனமாகச் சிரித்தாள். ''எனக்குத் தெரியும்டி. நீ அது மாதிரி பண்ணுவே என்று. குழந்தை வேண்டாம், கலைத்துவிட்டுப் போவதுதானே. அப்படியென்றால் அவர் சொல்வது உண்மையா?'' என்றாள்.

தேவிக்கு நெஞ்சு கொதித்தது. எதுவும் பேச முடியவில்லை. அவன் பேசிப் பேசியே, பாதி உயிரை எடுத்துவிட்டான். இவள் மீதி உயிரை எடுத்தாள்.



தேவி வாயே திறக்கவில்லை. ''நீ இப்படி இருந்தால், உன்னை நான் வீட்டில் வைத்துக் கொள்வேனா? நீ என்ன தப்பு பண்ணியிருந்தால், உன்னை வீட்டை விட்டு அனுப்புவார். நீ இந்த வீட்டில் நிரந்தரமாக இருக்கலாம் என்று கனவு காணாதே.''

அவள் அண்ணிக்கு மனதிற்குள், அவள் வந்தது சந்தோசமாக இருந்தது. இவளுக்கு இப்படி ஒரு இடமா? நல்ல வசதி, கார், பங்களா என்று.

மாதவன் பார்ப்பவர்களை இன்னொரு முறை திரும்பிப் பார்க்கின்ற வசீகரமான முகம். நல்ல உயரம். எடுப்பான தோற்றம். எந்தப் பெண்ணுமே, அவனிடம் மயங்கி விடுவாள். இவளுக்கு இப்படியொரு இடமா என்று கொதித்தாள்.

தேவியும் அழகில் குறைந்தவள் இல்லை. அவள் அண்ணி, சாப்பிடச் சாப்பாடு இல்லை. ஆனால் அழகுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. முடியைப் பார், எவ்வளவு நீளம் என்று பெருமூச்சு விடுவாள்.

முடிவாகச் சொல்லிவிட்டாள், அண்ணிக்காரி. ''உன் அம்மாவுக்கே, நான் தண்டச்சோறு போடுகிறேன். உனக்கும் சேர்த்துப் போட, நான் என்ன சத்திரமா நடத்துகிறேன். வந்ததுதான் வந்தே... சொத்தில் எனக்குப் பங்கு குடு. இல்லையென்றால், மாதா... மாதம் சாப்பாட்டிற்குப் பணம் குடு என்று கேட்க வேண்டியதுதானே. போ என்றவுடன், ரோசமாக வந்துட்டே. உனக்கெல்லாம் எதுக்கு ரோசம் வருது. உன் அம்மாவையும் கூட்டிக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறு.''



# 4

மாதவனுக்கு வீட்டிற்கு வரவே என்னவோ போல் இருந்தது. அவன் வீட்டை விட்டுப் போ என்றால், குழந்தை எனக்கு வேண்டாம். நீங்கள் தான் வேண்டும் என்று, இங்கேயே இருப்பாள் என்று நினைத்தான். ஒரு கணம் இப்படி நினைத்தாலும், மறு கணம் அவளின் செய்கை ஆத்திரத்தைத் தூண்டியது.

அவள் அம்மா வீட்டிற்குத்தான் போயிருப்பாள். அவள் அண்ணி குணம் சரியில்லை. எப்படி இருக்கப் போறாளோ..?

தேவி அறைக்குள் சென்று பார்த்தான். எல்லாம் நீட்டாக இருந்தது. பீரோவைத் திறந்து பார்த்தான். அவன் வாங்கிக் கொடுத்த புடவை, நகை எல்லாம் அப்படியே வைத்து விட்டுப் போயிருந்தாள். ஒரு கணம் அசையாமல் நின்றான். பீரோவை மூடிவிட்டு வந்துவிட்டான்.

மாதவனுடைய அம்மா கிராமத்தில் இருக்காங்க. வந்து கேட்டால் என்ன சொல்வது. அவளிடம் பேசாமல் இருந்தால் கூட, அவள் வீட்டில் இருந்தது மனதுக்கு நன்றாக இருந்தது.

எதுவும் பேசாமல் நடமாடுவாள். கொலுசுச் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இப்போ மூன்று நேரமும் ஹோட்டல் சாப்பாடு தான். அவள் செய்ததை, எத்தனை நாள் அலட்சியம் செய்தேன். அதற்காக எனக்கு இப்படித்



துரோகம் செய்யலாமா? நான் யாருக்காக இப்படி கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறேன் என்று நினைத்தான்.

மாதவனுக்கு மனச்சாட்சி உறுத்தியது. அவளுடைய வாழ்க்கையைக் கெடுத்துவிட்டோம் என்று. அவள் என்ன படித்திருக்காள் என்று தெரியவில்லை. அவளைப் பற்றிய விபரம் எதுவும் அவனுக்குத் தெரியாது. அவளை மறக்க முயற்சி செய்தான். முடியவில்லை. தன் கவனம் முழுவதும் தொழிலில் செலுத்தினான்.

தேவி பிரச்னைக்கிடையே ஆறு மாதம் ஓட்டினாள். போய்ப் பணம் வாங்கி வா என்று விரட்டினாள். அவனிடம் போய்ப் பணம் கொடு என்று கேட்கலாமா? அவன் சொன்ன மாதிரியே ஆகிவிடும்.

வீட்டு வேலைகள் அனைத்தும் செய்தாள். ''நீ வந்ததால் உன் அம்மாவிற்கு ஒரு நேரச் சாப்பாடு இல்லை. இரண்டு பேருக்கும், மூன்று வேளைச் சாப்பாடு போட நான் எங்கு செல்வேன்?'' என்று கூறிவிட்டாள். அதை நினைத்து தேவி அழுதாள். ''என்னால் தானம்மா உங்களுக்கு இந்த நிலைமை!'' என்று கலங்கினாள்.

அவளுக்குத் தெரிந்த பெரியவர், ''எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் இருக்குது. அவர்கள் தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு நல்ல பெண் வேலைக்குத் தேவை. குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளணும். படிப்புச் சொல்லிக் கொடுக்கணும். வீட்டு வேலை பார்க்கணும். நீ போகிறாயா?'' என்றார்.

''சரிங்க தாத்தா. நான் போகிறேன்,'' என்றாள்.

மறுநாள் அந்த வீட்டிற்கு வேலைக்குப் போனாள். அவள் அம்மா அழுதாள். 'உன் நிலைமை இப்படியா?' என்று.

ஒரு நாள் தண்ணி பிடித்து வரும் போது, வழுக்கிக் கீழே விழுந்து விட்டாள். வயிற்றில் நல்ல அடிபட்டது. வலியில் துடித்தாள். உடனே ஹாஸ்பிடலுக்குப் போனார்கள். அவளுக்கு அபார்சன் ஆகிவிட்டது.

அவள் எதற்காகப் போராடினாளோ... எதற்காக வீட்டை விட்டு வந்தாளோ... அதுவே அவளை விட்டுப் போய்விட்டது. அம்மா, ஏன் இப்படி கஷ்டப்படறே என்று போய்விட்டாயாடா மகனே என்று அழுதாள்.

அவள் வேலை பார்க்கும் வீட்டில், அவுட்ஹவுசில் தங்கிக் கொண்டனர், தாயும் மகளும்.

அவர்களுக்குத் தேவியை மிகவும் பிடித்துவிட்டது. இவள் தாலிக் கொடி போட்டிருக்கா. கணவன் எங்கே? பெரிய இடத்துப் பெண் போல், நாகரிகமாக, கச்சிதமாக நடக்கிறாள். பார்வையை அலையவிடுவதில்லை. நேர் பார்வை. முகம் நோக்கிப் பேசினாள்.

பகலெல்லாம் உழைத்துவிட்டு இரவில் படுத்தால், உறக்கம் வருவதில்லை. மனம் மாதவனைப் பற்றியே நினைக்கும். அவனிடம் அன்பாக இல்லாவிட்டாலும், ஒரு பாதுகாப்பாக பக்கபலமாக இருந்தான். அவன் நமக்கு இருக்கான் என்ற தைரியமே அவளை நடமாட வைத்தது. அது இல்லையென்று ஆன பிறகு, அவள் உடம்பில் இருந்து உயிரே போய் விட்டது போல் இருந்தது. அவள் அம்மாவிற்காக நடமாடினாள்.

ஒரு நாள் நல்ல ஜுரம். அன்று மேலே வா என்று சொல்லி விட்டுப் போனான். அவளுக்குக் குளிர் தாங்க முடியவில்லை. சொல்லிவிட்டானே, போகாமல் இருக்க



முடியுமா? அவளுக்கு ஆத்திரமாக வரும். இப்படிக் கூப்பிடுகிறானே என்று. இதற்கு மட்டுந்தான், என்னிடம் ஒரு வார்த்தை பேசுகிறான்.

மாடி ஏற முடியவில்லை. மெல்லச் சென்றாள். விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. இவன் இப்படித்தான் செய்வான். ஏன் விளக்கு எரிந்தால்... இவள் முகத்தைப் பார்க்க வேண்டி வருமோ என்று தான் அணைத்திருப்பான். பிறகு எதற்குக் கூப்பிட வேண்டும்?

அவளுக்கு அவள் உடம்பு தீயாய்க் கொதித்தது. அவளாலும் தாங்க முடியவில்லை. கண்களில் இருந்து, அவளை அறியாமல் கண்ணீர் வழிந்தது. என்ன நினைத்தானோ, "போ.." என்று சொல்லிவிட்டான்.

அவளால் எழுந்து கீழே போக முடியவில்லை. சரி, நீ இங்கேயே படு என்று சொல்லிவிட்டு, அவன் அடுத்த அறைக்குச் சென்றுவிட்டான்.

படுக்கையில் படுத்துக் கொண்டு குமுறி... குமுறி அழுதாள். ஏன் எனக்கு மட்டும் இந்த நிலைமை? நான் என்ன தவறு செய்தேன்? ஏழையாகப் பிறந்தது தான் தப்பா? அது என்னுடைய தவறா? ஒரு வார்த்தை என்ன செய்யுது என்று கேட்டால் என்ன, குறைந்தா போய் விடும்?

முதல் இரவன்று, அவன் பேசிய பேச்சு நினைவுக்கு வந்தது. எத்தனை கடுஞ்சொற்கள். உன்னை விரும்பி நான் மணக்கவில்லை. என் அம்மாவிற்காகத்தான் உன்னை மணந்தேன். என் அம்மாவை நன்றாகக் கவனித்துக் கொள்.

என் அனுமதியின்றி என் அறைக்குள் வராதே. நீ செய்யும் வேலைக்குச் சாப்பாடு, துணிமணி கிடைக்கும். உன் அம்மா, அண்ணன், அண்ணி இங்கு வரவோ, நீ அங்கு போவதோ கூடாது. என்னிடம் உனக்கு 'எந்த' வித எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது. அந்த எந்தவில் ஓர் அழுத்தம் கொடுத்தான். சரி, நீ வெளியே போகலாம் என்றான்.

அவளுக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது. நான் என்னமோ 'அதுக்கு' அலைவது போலல்லவா பேசுகிறான். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. இப்படியே விடிந்துவிட்டது.

தேவி அம்மாவுக்கு அன்று உடம்புக்கு முடியவில்லை. நெஞ்சு வலி. ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனாள். அவள் அம்மா கண் கலங்கினார். ''நீ வாழ வேண்டிய வயதில் இப்படி வீட்டு வேலை செய்து கொண்டு, என்னையும் பார்த்துக் கொண்டு, இப்படி அவஸ்தைப் படுகிறாயே!'' என்றார்.

''எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை அம்மா. நான் நன்றாக, சந்தோசமாகத்தான் இருக்கிறேன். மாத்திரை சாப்பிட்டுப் படுத்துத் தூங்குங்கள். குழந்தைகள் வந்து விடுவாங்க,'' என்று எழுந்து சென்றாள்.

அவளுக்குள்ளும் ஒரு பயம் வந்துவிட்டது. அம்மாவுக்கு ஏதாவது ஒன்று என்றால் நம் நிலைமை என்னாவது. துணை என்று ஒருவரும் இல்லையே. துணை என்று நினைக்கும் போது, நெஞ்சுக் கூட்டினுள் 'சுரீர்' என்று வலித்தது. அந்த வார்த்தைக்கே எனக்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது.





# 5

முதன் முதலில் அவனைப் பார்த்ததுமே, நெஞ்சில் நடுக்கம் ஏற்பட்டது. கட்டிய கணவனைப் பார்த்ததுமே, ஒரு பரவசம், ஒரு சிலிர்ப்பு, சந்தோஷம் எதுவுமே இல்லை. இரும்பு மாதிரி இறுகி நின்றவனைப் பார்த்ததும் நடுக்கம் ஏற்பட்டது. கடினமான முகம். அதில் பிடிவாதத்தைக் காட்டும் உதடு. கூர் பார்வை. அவள் நெஞ்சைத் துளைத்தது.

இவனை ஏமாற்றவோ, இல்லை... பொய் சொல்லவோ முடியாது.

தன் உயிரினும் மேலாக நினைத்த ஒழுக்கத்தை எவ்வளவு ஈசியாகப் பேசிவிட்டான். பணக்காரர்கள் தப்பு பண்ணினால் வெளியே தெரியாது. அது அவர்களுக்குச் சாதாரணமாக இருக்கும். ஏழைகள் நாம் தப்பு பண்ணினால், அது பெரிய விசயமாக, நாலு பேர் பேசுவார்கள். அது தெரு முழுக்கப் பரவி விடும் என்று அவள் அம்மா சொல்லி வளர்த்தார்கள்.

அந்த நாள் டாக்டரிடம் சென்ற நாள். இன்று நினைத்தாலும் பரவசமாக இருந்தது. நாள் தள்ளிப் போயிற்று. வாந்தி, தலை சுற்றல் இருந்தது. அவளுக்கு இது குழந்தை தான் என்று தெரிந்தது. இருந்தாலும் டாக்டரிடம் உறுதி செய்தாள். அன்று தான் அவனிடம் போய் டாக்டரிடம் போக வேண்டும். எனக்...கு கொஞ்சம் பணம் வேண்டும் என்றாள், திக்கித் திணறி.

அவளை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தான். பேசாமல் பணத்தை எடுத்து டேபிள் மீது வைத்து விட்டுச் சென்று விட்டான்.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. ஏன்? என்ன செய்யுது என்று கேட்டால் என்ன. டாக்டர் பார்த்துவிட்டு, இது கன்சீவ் தான் என்றார். அவர் சொன்னதை கேட்டு, அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இனி என் வாழ்வில் வசந்தம் வரும். இந்தக் குழந்தை எங்கள் இருவரையும் சேர்த்து வைத்துவிடும். இனி என் வாழ்வில் இருள் என்பதே கிடையாது. வெளிச்சம்தான்.

''குழந்தை!'' நினைப்பதற்கோ, சொல்வதற்கோ, எவ்வளவு இனிமையாக இருக்குது. இதை மாதவனிடம் உடனே சொல்ல வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. இப்பொழுது அவன் ஆபீசில் இருப்பான். இரவு அவன் வரும் வரை காத்திருந்தாள். கதவைத் திறந்து விட்டு அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அவள் நின்று கொண்டிருக்கவே, அவன் திரும்பிப் பார்த்தான்.

அவள் அதுவே போதும் என்று, இன்று டாக்டரிடம் போனேன் என்று, அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவன் அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாமல் புருவச் சுழிப்புடன் நின்றான்.

நான் கன்சீவ்வாகி இருக்கிறேன் என்று டாக்டர் சொன்னார் என்று வெட்கத்துடன் சொன்னாள். முகம் குங்குமம் போல் சிவந்து இருந்தது. அவனை நிமிர்ந்து பார்க்காமல், குனிந்த தலையுடன் நின்றாள்.

மனதில் பக்கத்தில் வந்து, முகத்தை நிமிர்த்தி அப்படியா...? என்று ஆசையாக அணைக்க மாட்டானா?



தன்னை இனி ஒரு பூப்போலத் தாங்க மாட்டானா என்று அவள் மனம் ஏங்கியது. ஒவ்வோர் அணுவும் துடித்தது.

எந்த ஒரு சத்தமும் கேட்காமல் போனதால், மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். பார்த்தவள் அப்படியே நடுங்கிப் போனாள். அவன் முகம் ரத்தமாகச் சிவந்து இருந்தது. உதட்டை அழுத்தமாகக் கடித்திருந்தான். கைகளை இறுக மூடி, அவன் நின்ற கோலம் அவளை அச்சுறுத்தியது. எதற்கு இந்த கோபம். சந்தோசப் படாவிட்டாலும், கோபப்படாமல் இருக்கலாமே... என்று நடுங்கும் கை, கால்களைக் கட்டுப்படுத்த முடியாமல், கதவைப் பிடித்துக் கொண்டாள்.

''என்ன.. சொன்னே?'' என்று கர்ஜித்தான். அவள் மறுபடியும் திணறிக் கொண்டே சொன்னாள். அவள் சொல்லி வாய் மூடும் முன் அறைந்தான். அவள் தடுமாறிக் கீழே விழுந்தாள். இதற்கு யார் காரணமோ, அவனிடம் போய்ச் சொல். என்னிடம் எதற்குச் சொல்கிறாய் என்று, அவள் மீது தணலை அள்ளிக் கொட்டினான். அன்று அவன் பேசிய பேச்சு, வார்த்தை, அவளால் மறக்க முடியாது.

சரமாரியாக அடித்தான். வலிக்குதுங்க. என்னை அடிக்காதீங்க. கொன்று போட்டுடுங்க. நான் ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்துவிடுவேன். இப்படிப் பேசாதீங்க என்று அழுதாள்.

எதுக்கு இந்த மாய்மாலம் பண்றே. இப்படி அழுதால், நான் உன்னிடம் மயங்கி, இது என்னுடைய குழந்தை என்று ஏற்றுக் கொள்வேனா? இரண்டு வருடமா உண்டாகாத குழந்தை. ஏன் இப்ப மட்டும் எப்படி உண்டாகும்?

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. இரண்டு வருடமா உண்டாகாத குழந்தை ஏன் இப்போது உண்டாகியது? இதற்குப் பதில் அவளுக்கே தெரியவில்லை. என்ன சொல்ல முடியும். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு வருடமா உண்டாகாத குழந்தை, பிறகு உண்டாகாதா? இல்லை, உண்டாகக் கூடாதா? ஒன்றும் புரியவில்லை.

என்னடி, நான் கேட்கிறேன் வாயே திறக்காமல் இருக்கிறாய் என்று அவள் முதுகில் சிகரெட்டின் நுனியை வைத்து அழுத்தினான்.

எரிச்சல் தாங்க முடியவில்லை. ஐயோ என்று நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அந்த அகன்ற விழிகளில் தவிப்பு தெரிந்தது. பாவி.. பாவி! என்னென்ன சித்திரவதை செய்கிறாய் என்று கேட்காமல் கேட்டது.

ஏன் இப்படி பண்றீங்க. இந்தக் குழந்தைக்காக, உங்கள் அக்கா எப்படி எல்லாம் என்னைப் பேசியிருப்பாங்க தெரியுமா? இப்படி காய்க்காத மரத்தைக் கட்டி வைத்து விட்டோம். என் தம்பி ஒரே வாரிசு. அவனுக்கு அது கூட இல்லை. பணம் காசு தான் இல்லை. குழந்தை கூடவா... பிறக்காது என்று எப்படி எல்லாம் என்னைப் பேசினாங்க. நீங்க அவங்களை விட மோசமா இருக்கீங்க. அவங்களாவது குழந்தை இல்லை என்று பேசினாங்க நீங்க வேண்டாம் என்று பேசறீங்க. நான் என்ன தான் செய்வது?

அதுக்காக நீ எந்த வழியிலாவது, குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று நினைத்தாயா? இதப்பாரு. இந்தக் கதையெல்லாம் என்னிடம் விடாதே. குழந்தையை



அழித்து விட்டு வந்தால், நீ இங்கு இருக்கலாம் என்றான் இரக்கமே இல்லாமல்.

ஏங்க இப்படியெல்லாம் பேசுறீங்க. அவன் என் அத்தை பையன்தான். சின்ன வயதில் பேசியது உண்மைதான். ஆனால் இப்போது எனக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. அவனுக்கும் ஆகிவிட்டது. நான் போய் இது மாதிரி தப்புப் பண்ணுவேனா? இதை நினைக்கக் கூட எனக்கு அருவருப்பா இருக்கு. அவன் இங்கு வந்தான் என்ற ஒரே காரணத்துக்காக இந்த மாதிரி பழி போடலாமா நீங்க. அவ்வளவு வேதனையிலும், பொறுமையாக நிதானமாக எடுத்துச் சொன்னாள். தன்னை நிருபித்து விடும் வேகத்தில்.

யார்தான் ஒத்துக் கொள்வாங்க. நீ மட்டும் என்ன விதிவிலக்கா?

அவள் இவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. அவளுக்கு ஆத்திரம் வந்தது... ஏன்..? நீங்கள் ஆண் பிள்ளை இல்லையா..? அவன் மட்டுந்தான் ஆண் பிள்ளையா..? என்றாள் எரிமலையாக.

அவனுக்குச் 'சுரீர்' என்றது. ஆத்திரத்தில் அவனுக்குக் கண், மண் தெரியவில்லை. என்னடி சொன்னே... நான் ஆண்பிள்ளைதானா.. என்றா..? நான் ஆண்பிள்ளை தான் என்று நிருபிக்கிறேன் இந்த நிமிடமே. இந்த வீட்டை விட்டு வெளியேறு என்று அவள் முடியைப் பிடித்து இழுத்து வந்து, கதவைத் திறந்து வெளியே தள்ளினான்.

அவள் எவ்வளவோ கெஞ்சினாள். அவன் கதவைச் சாத்தி விட்டுச் சென்றுவிட்டான். அவள் என்ன செய்ய முடியும்? வாசற்படியில் படுத்து விட்டாள்.

காலையில் வந்து மாதவன் கதவைத் திறந்தான். அவள் படுத்திருந்த கோலம். பிளவுஸ் தோள் பட்டையில் கிழிந்தது. எல்லாமே அவன் நெஞ்சைப் பிழிந்தது. எழுப்பலாமா.. என்று நினைத்தான். மறுகணமே உள்ளே சென்றுவிட்டான்.

வெயில் தன் மேல் சுரீர் என்று அடிக்கவும், அவளுக்கு நினைவு வந்தது. மெதுவாக எழுந்தாள். ஜுரம் அனலாக அடித்தது.

கதவைப் பார்த்தாள். கதவு திறந்திருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் நடமாட்டம் அதிகமாகத் தெரிந்தது. இனியும் இங்கு உட்காந்திருக்க முடியாது.

ஒரு பெண்ணுக்குப் படிப்பு, வேலை, எவ்வளவு முக்கியம் என்று இப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. அவளா படிக்க மாட்டேன் என்று சொன்னாள். சூழ்நிலை அப்படி. ஒரு வேலையிருந்தாலாவது பிழைத்துக் கொள்ளலாம். இனி அண்ணன் வீட்டுக்குத்தான் செல்ல வேண்டும்.

கல்யாணம் ஆனதும், இவன் அங்கே போகக்கூடாது என்றான். அண்ணி நீ இங்கு வரக் கூடாது என்றாள். ஆனால் இப்போது அங்கு சென்றால்...

மாதவனுக்கும் தூக்கம் வரவில்லை. நான் திருமணம் பண்ணியிருக்கக் கூடாது. அதற்குத்தான் ஏழைப் பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணினான். தன்னைக் கேள்வி கேட்க மாட்டாள் என்று. ஆனால்? எப்படி பேசகிறாள். நீ ஆண் மகனா என்று. மறுபடியும்.. மறுபடியும் அவள் கேட்டது அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் உடம்பு விரைத்தது. ஆத்திரத்தில் சன்னல் மீது குத்தினான்.



போகட்டும். எங்காவது கண் காணாமல் செத்துத் தொலையட்டும் என்று நினைத்தாலும் மனம் கேட்கவில்லை பாவி.. வயித்துப் பிள்ளையோடு. உன் அண்ணன் வீட்டில் இருக்க முடியுமா...? உன் அண்ணி உன்னைச் சும்மா விடுவாளா? இது ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது. முகம் தெரியாத குழந்தைக்காக, என்னையே உதறிவிட்டுப் போய்விட்டாயே... எதற்கு இந்தக் குழந்தை உனக்கு? என் அக்கா பேசினாள் என்பதற்காக இந்தத் தப்பைப் பண்ணினியா...?

நீ தப்பு பண்ணினாலும், உன்னை ஏற்றுக் கொள்கிறேன் என்று தானே சொன்னேன். எப்படிப் பேசுகிறாள், இன்று வரை ஒரு வார்த்தை பேசாதவள்.

அவனுக்கு மனச்சாட்சி குத்தியது. நீ ஒரு மனைவியை நடத்துற மாதிரியா அவளை நடத்தினே. அன்பா ஒரு வார்த்தை கூடவா பேசக் கூடாது. அது அவனுக்கும் தெரிந்தது. எங்கே அன்பாக இருந்தால், ஒட்டிக் கொண்டு விடுவாளோ... தனக்குக் குழந்தை வேண்டும் என்று கேட்பாளோ... என்றுதானே, அவளிடம் பேசாமல் இருந்தான்.

வீடே 'வெறிச்'சென்று இருந்தது.

தேவி வேலை செய்யும் வீட்டில் ஒரு விருந்து. சின்ன விருந்து தான். மாலை விருந்து தயாரானது. ஒரு ஐந்து பேர் வந்திருந்தனர். அவர்களில் கடைசியாக வந்தவனைப் பார்த்து அதிர்ந்து நின்றாள்.

அவனும் இவளைப் பார்த்து அதிர்ந்தாலும், வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. உடனே சமாளித்துச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவளுக்குக் கை, காலெல்லாம் பரபரவென்றிருந்தது. அவனை நிமிர்ந்து பார்க்கவே மனம் கூசியது. எப்படி அமர்த்தலா உட்கார்ந்து சாப்பிடுகிறான். அவனிடம் எந்தப் பதற்றமோ படபடப்போ இல்லையே. அவர்கள், ''சாப்பாடு ரொம்ப பிரமாதம்! யார் செய்தது?'' என்றனர்.

''இந்தப் பெண்தான். புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கா...'' அவளுக்குக் கண்களில் நீர் கோத்தது. எதுவும் பேசாமல் உள்ளே சென்று டீ போட்டுக் கொண்டு வந்து மாதவனிடம் வைத்தாள்.

அனைவருக்குமே ஆச்சரியம். ''உனக்கு எப்படி தெரியும். மாதவ் சாப்பிட்டவுடனேயே டீ குடிப்பான் என்று?'' புருவத்தை உயர்த்தினான் அவள் சின்ன முதலாளி.

அவளுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அவன் கேட்ட கேள்விக்குத் திருதிருவென முழித்தாள். இது அவளை அறியாமல் செய்த வேலை. கைகள் தன்னிச்சையாக டீ போட்டுக் கொண்டு வந்தது அவளுக்கே தெரியவில்லை. தான் ஏன் இப்படி நடந்தோம் என்று அவள் உள் உணர்வு தான் இந்த வேலை செய்யத் தூண்டியிருக்க வேண்டும். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் நின்றாள்.

மாதவன் உடனே, அன்று ஷேர் மார்க்கெட் நிலவரம் பற்றிப் பேசி பேச்சை மாற்றினான். மற்றவர்களும் அவன் பேச்சைக் கவனித்தனர். இவள் விட்டாப் போதும் என்று உள்ளே சென்றுவிட்டாள். பிறகு அவர்கள் செல்லும் வரை வெளியே வரவேயில்லை.

ஆனால் வந்தவன் ஒருவன், இந்தக் கோழி வறுவல் நன்றாக இருந்தது. அடுத்த வாரம் என் குழந்தைக்கு



பிறந்த நாள். அன்று ஏற்பாடு பண்ணியிருக்கேன். உன் வீட்டு வேலைக்காரியை வரச் சொல்ல முடியுமா..?'' என்றான்.

அவன், ''நான் கேட்டுச் சொல்கிறேன்,'' என்றான்.

மாதவன் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் மீது எரிச்சலாக வந்தது. இவ்வளவு மோசமாக ஆகிவிட்டாளே என்று. வீட்டு வேலை என்கிற பேரில் இப்படி நடந்து கொள்கிறாள். இவளை இந்த வேலையும் செய்ய விடாமல் பண்ணணும் என்று மனதில் கறுவினான்.



## 6

அன்று இரவு மாதவனுக்குத் தூக்கமே வரவில்லை. மனதை எதுவோ அடைத்த மாதிரி இருந்தது. எனக்கு என்ன ஆயிற்று. மூச்சை அடைக்கிற மாதிரி, நெஞ்சைப் பிசைவது போல, என்ன... என்ன என்று நினைத்துப் பார்த்தான். ஒன்றுமே நினைவிற்கு வரவில்லை. இன்று என் மனதைப் பாதிக்கிற மாதிரி என்ன நடந்தது. மனது கஷ்டமாக இருக்குது.

காலையில் இருந்து நடந்தவைகளை அசை போட்டான். இன்று விருந்துக்குப் போனதில் இருந்துதான், தனக்கு இப்படி இருக்குது. தொலைந்துவிட்டாள் என்று நினைத்தேன். மறுபடியும் கண்ணில் பட்டுவிட்டாளே.. அவள் குழந்தை என்னானது? குழந்தைக்காகத்தான

வீட்டை விட்டுப் போனா... அதற்குள்ளாகவா... குழந்தை பிறந்திருக்கும். குழந்தை பிறந்த மாதிரி கூட இல்லையே. நன்றாகத்தானே இருக்கா..?

அந்த வீட்டில் எதற்காக வேலைக்குச் சேர்ந்திருக்கா? அவள் நம்பியவன் என்ன ஆனான்? அவனும் விட்டு விட்டுப் போய்விட்டானா? இல்லையென்றால் இந்த தைரியம் வருமா? வீட்டை விட்டுப் போவதற்கு. அவன வன் கூப்பிடுகிறான். என் வீட்டிற்கு வரச்சொல் என்று. சிவா அவ்வளவு நல்லவன் இல்லை. பெண்கள் விசயத்தில். அவனை அறியாமல் தான் ஆழ்மனதில் வேதனை இருந்திருக்குது. ஏதோ தவறு செய்துவிட்டது போல. ஆனால் நாம் ஒன்றும் செய்யவில்லையே என்று மனம் தடுமாறியது.

தேவிக்கும் அன்று இரவு மனம் அவமானத்தால் துடித்தது. எப்படி இருக்கிறான். ஒன்றும் தெரியாதது போல. தன் மனைவி அடுத்தவன் வீட்டில், ஒரு வேலைக்காரியாய் இருக்காளே... என்று ஒரு துடிப்பாவது இல்லாமல் துடைத்துவிட்டாற் போல், முகம் கல்லு மாதிரி இருந்தது. அதில் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் மனம் போலவே, முகமும் இரும்பாக இருந்தது.

அவனாட்டம் வார்த்தைகளில் கடுமையைக் காட்ட முடியாது. கடுஞ்சொல் அவனுக்காகவே உருவாக்கப் பட்டது போல் பேசினான். யாராலும் அந்த மாதிரி கத் தாமல் அடக்கமாக... ஆனால் எரிமலைக் குழம்பின் நடுவில் நிற்க வைத்தது போல... பேச முடியாது.

அந்தக் கண்களை அப்போது பார்க்க வேண்டுமே.. அப்பப்பா... என்ன ஒரு சீற்றம். உன்னைத் தொட்ட கையை நெருப்பில் பொசுக்கி விடலாமா என்று இருக் குது என்று சுவரில் ஓங்கி.. ஓங்கிக் குத்தினான்.

அந்த வாரத்தில் சிவா வீட்டில் விருந்து ஏற்பாடானது. அதற்குத் தியாகு. "தேவி! நீ அன்று செய்த கோழி வறுவல் நன்றாக இருந்ததால், உன்னை வரச் சொன்னான். போய்ட்டு வா," என்றான்.

அவள் தயங்கினாள். "அ..ங்.கு நிறையப் பேர் வருவாங்க. நான் எப்படி..."

"யார் வந்தால் உனக்கென்ன. நீ போய்ச் சொன்ன வேலையைச் செய்துவிட்டு வா..." என்றான் கோபமாக.

அன்று இரவு விருந்தில் ஒருவன் அவள் பின்புறம் தட்டி, "பியூட்டிபுல் பேபி!" என்றான். அதை மாதவன் கவனித்தான்.

அவளுக்குச் சர்வமும் நடுங்கிவிட்டது.

அந்த விருந்தில் ட்ரிங்க்ஸ் பரிமாறப்பட்டது. இவளையே எடுத்துவரச் சொன்னார்கள். இவள் என்ன செய்ய முடியும். அப்படியிருந்தும் அந்த வீட்டுப் பெண்மணியிடம் சொன்னாள். "நான் போகவில்லை. வேற யாரையாச்சும் அனுப்புங்கள்," என்று.

"இதற்கு என்று வேறு ஆளா பிடிக்க முடியும். நாங்க சொல்வதைக் கேட்கத்தான் வேலைக்காரங்க. நீங்க சொல்வதைக் கேட்க அல்ல!" என்றாள் கடுமையாக.

இவளுக்கும் நாக்கு துடித்தது. உங்க வீட்டு வேலைக் காரி நான் இல்லை. நீ சொல்வதையெல்லாம் செய் வதற்கு என்று.

அதற்குள் அந்த வீட்டுப் பெண்மணி முணுமுணுப்பது கேட்டது. இந்தக் காலத்துல வேலைக்காரிங்களுக்கு

இருக்கிற திமிர் வேற யாருக்கு இருக்குது. ஏதாவது சொன்னால், வேலையை விட்டு நின்று விடுவேன் என்று மிரட்டுவது. பத்து வீட்டுப் பத்துப் பாத்திரம் தேய்க்கிறவளுக்கு, என்ன வெட்கம் வேண்டிக் கிடக்குது என்றாள்.

எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு, இவள் தோட்டத்திற்குப் போய்விட்டாள்.

விருந்தில் இவளைப் பற்றி, ''என்னடா... வேலைக்காரி என்கிறே. இவளைப் பார்த்தால்.. அப்படித் தெரியலேயே. ஏதாவது செட்டப்பா..'' என்றனர் தியாகுவிடம்.

அவன் அவசரமாக மறுத்தான். ''உனக்கு வேண்டாம்னா விடு. எங்களுக்கு ஏற்பாடு பண்ணித்தா...'' என்றனர். ''மடக்கினால் படிவாளா..? அவளின் அழகு என்னைத் தூங்க விடவில்லை,'' என்று குழறினான் ஒருவன்.

மாதவனால் சாப்பிட முடியவில்லை. எழுந்துவிட்டான். ''என்னடா அதுக்குள்ளே எழுந்துட்டே...''

''இல்லை. எனக்கு வயிறு சரியில்லை. தோட்டத்தில் நடந்து விட்டு வர்றேன்.''

அவன் வந்ததைத் தேவி கவனிக்கவில்லை. அவனும் தேவி அங்கிருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை.

அவளை அந்தத் தனிமையில், இருளில் பார்த்தது, அவன் மனமும் உடம்பும் கொதித்தது. அந்த ஆத்திரத்தை எல்லாம், ஒன்று கூட்டி அவள் எதிர்பாராமல் இருக்கும் நேரத்தில் ஓங்கி அறைந்தான்.

அவள் தடுமாறிப் பக்கத்தில் இருந்த ரோஜா செடி மீது விழுந்தாள்.



''ஏன்டீ... இங்கு யாரை வரச் சொல்லிட்டு உட்கார்ந்திருக்கே. ஏன் உன் குழந்தைக்குத் தகப்பன் என்னானான்? நீ அவனோடு அல்லவா போய் விட்டாய் என்று நினைத்தேன்.

''ஏன்? அவன் உன்னை விட்டுவிட்டுப் போய்விட்டானா...? இந்த மாதிரி நாளுக்கொருத்தன் என்று அலைந்தால் எவன் உன்னை வைத்திருப்பான். இப்படி ஆள் பிடிக்கத்தான் வீட்டுக்கு வீடு வர்றீயா..?''

அவளுக்குக் கன்னம் தீயாய் எரிந்தது. காது இரண்டையும் பொத்திக் கொண்டாள்.

''என்னடி நடிக்கிறே. காதைப் பொத்திக் கொண்டு. நீ பொத்த வேண்டியதைப் பொத்தாமல் திறந்து காட்டப் போய்த் தானே... அவனவன் பேசுகிறான். சீ.. நீயெல்லாம் ஒரு பொம்பளையா?

''குழந்தை என்னடி ஆச்சு? அவன் வேண்டாம்னு சொல்லிவிட்டானா? அவன் சொன்னதுமே கலைத்து விட்டாயா...? நான் சொன்ன போது கேட்கவில்லை. நானும் இதைத்தானே சொன்னேன்,'' என்றான் வக்கிரமாக.

கிராமத்தில் இருந்து மாதவனுடைய அம்மா வந்தார் வந்ததும், ''தேவீ எங்கே?'' என்றார்.

''அவள் அம்மா வீட்டிற்குப் போயிருக்கா. வருவா. நீங்க குளித்து விட்டு ரெஸ்ட் எடுங்க. நான் ஹோட்டலில் இருந்து சாப்பாடு வாங்கி வருகிறேன்.''

மாலையில் அவன் அம்மா, ''போய்த் தேவியைக் கூட்டி வா. இல்லை. நானும் வருகிறேன். சம்பந்தி அம்மாவைப்

பார்த்து நாளாச்சு. நானும் வந்து பார்த்துவிட்டு, தேவியையும் அழைத்துக் கொண்டு வரலாம்.''

அவனுக்கு வேற வழியில்லை. ''இல்லம்மா, அவள் இனி இங்கு வர மாட்டாள்,'' என்றான்.

''ஏன்..?''

''அவ..ள்... அவள் தப்பாக நடந்து கொண்டாள். அதனால் வீட்டை விட்டுப் போ என்று சொல்லிவிட்டேன்,'' என்று மடி மீது படுத்துக் கொண்டு அழுதான்.

அந்த அம்மாவுக்கு நம்ப முடியவில்லை. ''என்...ன..டா சொல்றே... த..ப்..பா நடந்தாளா..?''

''ஆமாம் அம்மா. அவள் ஒரு நடத்தை கெட்டவள். என்னால் எப்படிம்மா இதைத் தாங்க முடியும். வீட்டை விட்டுப் போ என்றதும், கொஞ்சங்கூடக் கவலைப் படாமல் சந்தோசமா, நீ இரு என்று சொன்னாலும், நான் இருக்க மாட்டேன் என்றாள்,'' என்று சொல்லிட்டு அழுதான்.

இதைக் கேட்க எந்தத் தாய்க்குத்தான் மனம் வரும்? அவர் கொதித்தெழுந்தார். ''ஏன்டா, என்னிடம் அவள் இருக்கும் போதே சொல்லியிருக்க வேண்டியதுதானே!'' என்றார்.

''நீங்க தாங்க மாட்டீங்க என்றுதான் நான் சொல்லலே. என் கஷ்டம் என்னோடு போகட்டும்,'' என்றான்.

''ஏன்டா, உனக்கு ஒரு கஷ்டம். குடும்பத்தில் இவ்வளவு நடந்திருக்குது. வீட்டுப் பெரிய மனுசி நான். என்னிடம் நீ சொல்லியிருக்கணும். நான் அவளைச் சும்மா விட்டிருக்க மாட்டேன்.''



''மூன்று வருடம் ஆகுதே. ஒரு குழந்தையில்லை. நான் ஏதாவது அவளைச் சொல்லியிருக்கேனா? எனக்கு எவ்வளவு வருத்தமாக இருந்தது. கல்யாணமான பத்தாவது மாதமே பெத்துக்கிறாளுங்க. இவளுக்கு அது கூட முடியலே. அவள் இனிமேல் இந்த வீட்டுக்குள் நுழையக் கூடாது. நீயே சேர்த்துக் கொண்டாலும் நான் சேர்த்துக் கொள்ள மாட்டேன்,'' என்றார்.

மாதவனுக்கு மனம் நிம்மதியானது. இதைத்தானே அவன் எதிர்பார்த்தது. நம்பாமல் ஏதாவது பேசி, போய்க் கூட்டி வாடா என்று சொல்லி விடுவாங்களோ...என்று பயந்தான்.

அன்று விருந்தில் அவளைப் பார்த்துப் பேசியது அவனுக்கு நினைவு வந்தது. அவன் பேசியதைக் கேட்டதும், அவளுக்குக் கோபம் வந்ததே. அவளுக்கு அப்படிக் கூட கோபம் வரும் என்று தெரியவில்லை.

நான் எப்படிவேணாலும் இருப்பேன். அதைக் கேட்க நீங்க யார்..? என்னைத் தான் பழி போட்டு, வீட்டை விட்டுத் துரத்தி விட்டீங்களே... இப்போ எதுக்கு வந்து பேசுறீங்க, அடிக்கறீங்க என்றாள்.

இருடி, உன்னை அந்த வீட்டையும் விட்டுத் துரத்துறேன் என்றான்.

வீட்டை விட்டுத் துரத்தினாலும் அவள் அவனைப் பாடாய்ப் படுத்தினாள். அவள் இந்த வீட்டில் இருக்கும் போது, அவள் மீது அன்பு ஏற்படவில்லை. இப்போ தான் அவளின் நினைவாகவே இருக்கு.

அன்று காரில் போகும் போது தேவி இரண்டு, மூன்று பைகளுடன் செருப்புத் தைப்பவனிடம் செருப்பைக்

கொடுத்து விட்டு, வெயிலில் கால் மாற்றி.. மாற்றி நின்றாள்.

மாதவன் காரை ஓரமாகக் கொண்டு வருமுன், அவன் செருப்பை வாங்கிக் கொண்டு, அடுத்த சந்தின் வழியாகச் சென்றுவிட்டாள்.

இவனும் மெதுவாக வண்டியை ஓட்டிக் கொண்டு, அவளை மறித்தாற் போல் கொண்டு நிறுத்தினான்.

அவள் பயந்து பின் வாங்கினாள். அவன் கதவைத் திறந்து கொண்டு வந்து, "வா, வண்டியில் ஏறு. கொண்டு விட்டுட்டுப் போறேன்," என்றான்.

அவள் அவனை அலட்சியமாகப் பார்த்தாள். "நீங்க எதுக்காக என்னைக் கொண்டு விடணும். அப்படியே நான் வந்தாலும், அவர்கள் கேட்டால் என்ன சொல்வீங்க. இவள் என் மனைவி என்றா..?

"எதுக்கு இத்தனை அக்கறை. இத்தனை வருடம் இல்லாதது. நான் உங்கள் வீட்டில் இருக்கும் போது. இந்தக் கார் உங்களிடம் தான்... இருந்தது. அப்பொழுதே நான் நடந்து போய்த்தானே வாங்கி வருவேன். ஒரு நாளாவது இந்தக் காரில் நான் ஏறியிருப்பேனா?

"இப்போது மட்டும் என்ன அக்கறை. எங்காவது போய்ச் சாக வேண்டியதுதானே என்று சொன்னவங்க தானே நீங்க. சாவுக்குப் பயந்து நான் இந்த உயிரை வைத்திருக்கவில்லை. என் அம்மாவுக்காகத்தான் வைத்திருக்கேன். என் அம்மா உயிர் பிரிந்த உடனே, என் உயிரை விட்டு விடுவேன். நீங்க நிம்மதியாக இருக்கலாம்," என்று விட்டுப் போய்விட்டாள்.



"என் வண்டியில்தான் ஏற வேண்டாம். ஒரு ஆட்டோவில்தான் போவது," என்றான். அவள் காதில் விழும்படி.

அவள் நின்று திரும்பி, "ஆட்டோவுக்கும் பணம் யார் கொடுப்பா... நீங்க தருவீங்களா...?" என்று விட்டு மறைந்து போனாள்.

மாதவனது கார் அவளைக் கடந்து வேகமாகச் சென்றது. போகும் காரையே வெறித்துப் பார்த்தாள்.



## 7

தேவி வேலை செய்யும் வீட்டில் லீவிற்கு அவர்கள் எஸ்டேட்டிற்குப் போனார்கள். நீலகிரியில் எஸ்டேட் இருந்தது.

தேவியையும் அழைத்தனர். "பிள்ளைகள் எல்லோரும் வருவாங்க. என் அக்கா பொண்ணு, பையன் எல்லாம். வேலைக்கு ஆள் வேண்டும். அதனால் நீ வா," என்றனர்.

அவர்கள் சொல்வதை மீற முடியுமா..? அவளும் கிளம்பினாள்.

மாதவனும் வேலை விசயமாகவும், அவர்களுடன் அப்படியே ஒரு வாரம் தங்கவும் அவனும், அவன் காரில் வந்தான். இது தேவிக்குத் தெரியாது.

தேவியை ட்ரெயினில் வரச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். அட்ரசும் போன் நம்பரும் கொடுத்திருந் தார்கள். வெளியில் வந்து போன் பண்ணினாள்.

போன் அடிக்கவும் மாதவன் எடுத்தான். தேவி இவன் தான் என்று தெரியாமல், ''நான் வந்துவிட்டேன் சார்... எப்படி வீட்டுக்கு வருவது என்று தெரியவில்லை. அதான்...''

அதற்குள் அங்கு வந்த அம்மா போனை வாங்கி, ''உன்னிடம் தான் அட்ரஸ் இருக்கே. ஒரு ஆட்டோ பிடித்து வா. நீ பெரிய மகாராணி. நீ வரும் போது உன்னை எதிர் கொள்ள காருடன் நிற்க வேண்டுமா..? சீக்கிரம் வா. வீட்டு வேலையெல்லாம் அப்படியே இருக்குது,'' என்று போனை டக்கென வைத்தாள்.

மாதவன் உதட்டைக் கடித்துக் கண்களை இறுக மூடித் திறந்தான். எப்படி வருவாள். இது புது ஊர், புது இடம், ஆட்டோவில் வா என்றால், செலவுக்கு பணம் இருக்கோ இல்லையோ என்று நினைத்தான்.

மறுநாள் எல்லோரும் ஊட்டிக்குக் கிளம்பினர். பிள்ளைகள் சந்தோசமாக விளையாடினர். இவள் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு இருந்தாள்.

கூட்டங்கூட்டமாக மேகங்களும், புகை மூட்டங்களும், பச்சைப் பசேல் புல்வெளிகளும், பார்க்க... பார்க்க பசிக்க வில்லை. ஒவ்வொரு ரோஜாவும் இவ்வளவு பெரிசாவா இருக்கும் என்று கண்களை விரித்தாள்.

சிறிது நேரத்தில் மாதவனும் வந்து சேர்ந்து கொண்டான். ஊரிலிருந்து வந்த பெண் மாலதி. அவள் மாதவனுடன் சிரித்துப் பேசி நன்றாகப் பழகினாள். விளையாடிய பிள்ளை ஒருவன் கீழே விழுந்துவிட்டான். உடனே அந்த அம்மா தேவியை அறைந்தார். ''உன்னை எதுக்குக் கூட்டி வந்தேன். ஊர் சுற்றிப் பார்க்கவா?



பிள்ளைகளைக் கவனித்துக் கொள் என்றால் நீ வேடிக்கை பார்க்கிறாயா..?'' என்றார் கடுமையாக.

''சாரிம்மா. இனி இதுபோல் நடக்காது,'' என்றாள்.

மாதவன் கண்டும் காணாத மாதிரி இருந்தான். மாலதி மாதவனிடம் தேவியைக் காட்டி எதுவோ சொல்லிச் சிரித்தாள். மாதவனும் அவளுடன் சேர்ந்து சிரித்தான்.

தேவிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இப்படி இவளுடன் ஊர் சுற்றத்தான் தன்னை விரட்டிவிட்டானா..?

தேவி அம்மாவுக்கு அன்று நல்ல ஜுரம். அவரை அழைத்துக் கொண்டு ஹாஸ்பிடலுக்குப் போனாள். வீட்டில் அவளைத் திட்டினர்.

அம்மாவிற்கு அடிக்கடி முடியாமல் இருக்கு. நாம் போய் அண்ணனிடம் சொல்லலாம் என்று. அவன் வீட்டிற்குச் சென்றாள். அண்ணி அவளை ஏளனமாகப் பார்த்தாள்.

அண்ணனிடம் சென்றாள். என்ன என்பது போல் பார்த்தான். அவன் வாய் திறந்து ஒரு வார்த்தை கேட்க வில்லை. மனதுக்கு வருத்தமாக இருந்தது. கூடப் பிறந்த தங்கை. கணவனும் கைவிட்டு விட்டான். தாயிடம் தனியே போய் வீட்டு வேலை செய்கிறாள். பணம் காசு கொடுத்து உதவாட்டியும் கூடப் பரவாயில்லை. ஒரு அன்பான வார்த்தை, கனிவான பேச்சு பேசினால் என்ன குறைந்தா போய்விடும்?

''அம்மாவுக்கு உடம்புக்கு முடியவில்லை அண்ணா. அதான் உன்னிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

"அதான் சொல்லிட்டியே போ.. அப்புறம் என்ன?" என்று அதட்டினாள் அண்ணி.

"என்னங்க, சீக்கிரமே இன்று நான் ஆபீஸ் போகணும் என்று சொன்னது நினைப்பு இல்லையா..? மசமசன்னு உட்கார்ந்து இருக்காமே, போய் கிளம்பற வழியைப் பாருங்க," என்றாள்.

அவன் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எழுந்து போய் விட்டான்.

"இன்னும் எதுக்கு நிக்கிறே. எனக்கு வேலை இருக்குது." என்றாள்.

தேவி பேசாமல் வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

மாதவன் அம்மாவுக்கு உடம்புக்கு முடியவில்லை. பிரஷ்ஷர் அதிகமாகித் தலை சுற்றல் இருந்தது. வீட்டில் அம்மாவைக் கவனித்துக் கொள்ள ஆள் வேண்டுமே, என்ன செய்வது என்று நினைத்தான்.

தேவிக்கு அந்த வீட்டில் பிரச்னை அதிகமாக இருந்தது. அவள் அம்மாவிற்கு ஹார்ட்டில் பிரச்னை. உடனே ஆப்ரேசன் செய்யணும் என்று சொல்லிவிட்டார்கள். ஒரு லட்சத்திற்கு எங்கு போவாள். இவர்களிடம் கேட்கலாம் என்று, மறுநாள் கேட்டாள்.

அவர்கள் திகைத்தனர். "எ..ன்..ன? ஒரு லட்சமா..? உன் மனசுல என்ன தான் நினைச்சுக்கிட்டு இருக்கே. ஒரு வேலைக்காரி மாதிரியா, நீ பேசுறே... என்னவோ குடுத்து வச்ச மாதிரியில்லே கேட்குறே... இதை எப்படி நீ திருப்பித் தருவே?" என்றனர்.

"நா...ன் வேலை செய்து கழித்து விடுவேன்."

"வேலை செய்து கழிப்பியா... உனக்கு இனி இங்கு வேலையில்லை. நீ கிளம்பலாம். நீ இருக்கும் இடத்துக்கு இன்னொரு ஆள்."

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. வேலையை விட்டுப் போ என்றால், எங்கு போவது. இனி என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள்.

அன்று மாதவன் அவர்கள் வீட்டிற்கு வந்தான். அவர்கள் அவனிடம், "இந்த வேலைக்காரிக்கு ஒரு லட்சம் பணம் வேண்டுமாம்."

மாதவன், "எதுக்கு அவ்வளவு பணம்?"

"அவ அம்மாவிற்கு ஹார்ட் ஆப்ரேசன் செய்ய வேண்டுமாம்."

"ஏன்? அவங்களுக்கு முடியவில்லையா...?"

"ஆம். அப்பப்ப ஹாஸ்பிடல் கூட்டிப் போவா.. பார்த்தா பாவமா வேறு இருக்குது. எப்படித்தான் மனம் வந்ததோ.. இவளைத் தள்ளி வைக்க, இவள் கணவனுக்கு."

"இதை அவள் சொன்னாளா...?"

"எதை...?"

"அவள் கணவன் அவளைத் தள்ளி வைத்திருக்கான் என்று."

"அவள் சொல்லவில்லை. நானும் எவ்வளவோ கேட்டுப் பார்த்துட்டேன். வாயைத் திறந்தால் தானே.. சரியான அழுத்தக்காரி. அவள் வந்து இவ்வளவு நாள் ஆகுது. ஒருத்தரிடமும் அவளா பேசுவதில்லை. கேட்டால் மட்டும் பதில். இல்லையென்றால் ஒரு புன்னகை.

ஆனா மாதவா... அவ புன்னகைக்கும் போது, கன்னத்தில் சுழிந்து ஒரு குழி விழும் பார். அவ்வளவு அழகா இருக்கும். எப்படித் தான் கடவுள் இவ்வளவு அழகையும், இவ ஒருத்திக்கே வைத்துவிட்டாரோ தெரியவில்லை. கடவுள் மலர் மஞ்சத்தில் இருக்கும்போது படைச்சிருப் பார் போல... அதான் சந்தோசமா, இவ்வளவு அழகை அள்ளிக் கொடுத்துருக்கார்.''

மாதவன் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். யோசனையாகப் புருவம் நெரிந்திருந்தது.

''நாங்க அந்தப் பெண்ணை வேலையை விட்டுப் போகச் சொல்லிவிட்டோம். இவ ஒரு லட்சம் வாங்கி வேலை செய்து கழித்து விடுகிறாளாம்.''

இட்லியை எடுத்த கை அப்படியே நின்றது. வேலையை விட்டுப் போகச் சொன்னால், எங்கு போவா... அவ.

அன்று இரவெல்லாம் யோசனையாக இருந்தான். அவளை இங்கு வரச் சொன்னால் வருவாளா..? அம்மாவுக்கும் ஆள் வேண்டும். அவ அம்மாவிற்கு ஆப்ரேசனுக்கு நான் பணம் தருகிறேன் என்றால், கட்டாயம் சம்மதிப்பாள்.

இப்போது எப்படிக் கூப்பிடுவது. அவளையும் வெளியே போ என்று சொல்லிவிட்டார்கள். அவள் அம்மாவிற்கு ஏதாவது ஒன்று என்றால்.. அதற்கு மேல் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்றாளே.. தற்கொலை எதுவும் செய்து கொள்வாளோ..?



பாதகி.. இப்படி எனக்குத் துரோகம் செய்துவிட்டாயே. அப்படியிருந்தும் உன்னை எண்ணி என் மனம் கஷ்டப் படுகிறதே. இனி நீ என்ன செய்வாய் என்று.



## 8

தேவி மார்க்கெட் போய்விட்டு வந்து கொண்டிருந் தாள். வழியில் மாதவன் பார்த்தான். காரை விட்டு இறங்கிப் போய்.. ''உன்னை வேலையை விட்டுப் போகச் சொல்லிவிட்டாங்களாமே. இனி என்ன செய்யப் போறே...''

''நான் என்ன செய்தா உங்களுக்கென்ன?''

''எனக்கொன்னும் இல்லை. என் வீட்டிற்கு வேலைக்கு வர்றீயா..?''

அவனை முறைத்துப் பார்த்தாள்.

''என்ன நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரலே...''

''நான் வரலே.''

''ஏன்..?''

''........''

''உன் அம்மாவுக்கு ஹாஸ்பிடல் செலவை நான் பார்க்கிறேன்.''

''நீங்க யாரு செலவு பார்க்க...''

"ஏன்? அது உனக்குத் தெரியாதா? உன் மீது ஆசைப் பட்டோ, இல்லை குடும்பம் நடத்தவோ உன்னைக் கூப்பிடலை. என் அம்மாவுக்கு ஸ்ட்ரோக் வந்துவிட்டது. வீட்டிற்கு ஆள் வேண்டும். இவ்வளவு நாள் அந்த வீட்டில் வேலை செய்த மாதிரி, என் வீட்டில் வேலை செய். சம்பளம் மாதா... மாதம் வாங்கிக் கொள்," என்றான்.

"என் அம்மா என்ன ஆனாலும் சரி. உங்க வீட்டிற்கு இனி வரமாட்டேன். இனி நான் அந்த வீட்டிற்குள் வரலாமா? என்னென்ன பேசினீங்க. ஒவ்வொரு வார்த்தையும் என் நெஞ்சில் ஈட்டியா குத்தியது." முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

இப்பவும் உன்னை நல்லவள் என்று நான் கூப்பிடவில்லை. நீ எனக்குத் துரோகம் பண்ணினவள் தான். எனக்கும் வீட்டிற்கு ஆள் தேவை. அது போல உனக்கும் பணம் தேவை. இஷ்டம் இருந்தால் வா... இல்லையென்றால் போ என்று விட்டுப் போய்விட்டான்.

தேவி பெரியாஸ்பத்திரிக்கு அவள் அம்மாவைக் கூட்டிப் போனாள். அங்குள்ள நர்ஸ் இந்த வியாதிக்கு இங்கு எல்லாம் சரியாகப் பார்க்க மாட்டார்கள். நீ தனியார் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போ," என்றாள்.

மீண்டும் தன் அண்ணனிடம் ஓடினாள். அவன் வரவேயில்லை.

அவள் கண் முன்னாடியே கொஞ்சங்கொஞ்சமாக உயிர் போய் கொண்டிருந்தது. அது அவள் கண் முன்னாடியே நடந்தது.

ஒரு ஆட்டோ பிடித்து தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு போனாள். அந்த வீட்டில் கொஞ்சம் பணம்



கொடுத்தனர். அதைக் கட்டிவிட்டு, "மீதியைக் "காலையில் கட்டுகிறேன் டாக்டர். உடனே பாருங்கள்," என்றாள்.

கொஞ்சமும் மனிதாபிமானமே இல்லாமல், "இப்பொழுதே பணம் முழுதும் கட்ட வேண்டும். இல்லையென்றால் தூக்கிக் கொண்டு போங்கள். இனி தாங்காது," என்றார்.

டாக்டர் காலைப் பிடித்துக் கொண்டு, "டாக்டர்! எங்க அம்மாவை எப்படியாவது காப்பாற்றுங்கள். எனக்கு அவங்களை விட்டா வேறு யாரும் இல்லை," என்று அழுதாள்.

"இது என்ன மீன் மார்க்கெட்டா. பேரம் பேச. முதலில் பணத்தோட வா..." என்றார்.

அவள் என்ன செய்வாள். அப்பொழுது மாதவன் சொன்னது நினைப்பு வந்தது. அவனிடம் சென்று கேட்டால்... நினைக்கும் போதே நெஞ்சு கொதித்தது. அவனிடம் போய்க் கேட்கலாமா? கடவுள் எனக்கு மட்டும் ஏன் இப்படித் தண்டனை கொடுக்கிறார். அவனிடமே மறுபடியும் போய் நிற்குமாறு. ஐயோ என்று அழுதாள்.

வேற வழியில்லை. அவனிடம் கேட்டால் தான் உண்டு. இந்த நேரத்தில் கவுரவம் பார்த்தால், அம்மா உயிர் போய்விடும். பெற்ற மகன் வந்து இதுவரை பார்க்கவில்லை. அதுக்கு இவனாவது பரவாயில்லை. என் வீட்டில் வேலைக்காரியாக இரு. உன் அம்மாவைக் காப்பாற்றுகிறேன் என்றாவது சொன்னான்.

இரவு ஒரு மணி இருக்கும். ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தாள். எங்கும் நிசப்தமாக இருந்தது. ரோட்டைக் கடந்து ஆட்டோ நிற்கும் இடம் சென்றாள்.

அவன் மேலும் கீழுமாகப் பார்த்தான். அவளுக்கு உடம்பெல்லாம் கூசியது.

மெதுவாக, ''ஆட்டோ வருமா?'' என்றாள்.

''வரும். எங்கு போகணும்?'' என்றான்.

அவள் அட்ரசை சொன்னாள். வீடு வந்ததும் இறங்கிக் கொண்டு, ஆட்டோவை நிற்கச் சொல்லிவிட்டுச் சென்றாள். அவன் வேறு என்ன சொல்வானோ, தெரியவில்லை. ஆட்டோவையும் போகச் சொல்லிவிட்டு, இந்த இரவில் எங்கு சென்று ஆட்டோ பிடிப்பது.

காலிங் பெல்லை அடித்துவிட்டு நின்றாள். சிறிது நேரத்தில் லைட் எரிந்தது. மாதவன் தான் கதவைத் திறந்தான். அந்த நேரத்தில் அவள் தலைவிரி கோலமாக நின்றதைப் பார்த்து அதிர்ந்தான். இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், ''என்ன?'' என்றான் மிடுக்காக.

அவனைப் பார்த்ததுமே என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

மறுபடியும், ''என்ன?'' என்றான் அதட்டலாக.

''எ..ன..க்..கு எனை..க்..கு நீ..ங்..க.. சொன்னது போல் கேட்கிறேன். எ..ன் அ..ம்...மா..வை காப்..பா..த்து..ங்க!'' என்றாள் கோவையில்லாமல்.''

''அன்று என்னமோ வீராப்பா பேசினே. என் அம்மா செத்தாலும் பரவாயில்லை. உங்களிடம் வர மாட்டேன் என்றே!'' என்றான் ஏளனமாக.

''நான் தெ..ரி..யா..மல் பே..சி..வி..ட்..டேன். மன்..னி..த்து வி..டுங்..க!'' என்றாள் கையைக் கூப்பிக்



''உன் அம்மாவுக்கு ஆபரேசன் நடந்து முடிந்து, நல்லா ஆனதும், நான் வரமாட்டேன் என்றால் என்ன செய்வது.''

அவள் விழித்தாள். இப்படியெல்லாம் அவ நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ''நா..ன் அ..து மாதிரி சொல்ல மாட்டேன். பணம் கொடுங்கள்,'' என்று கதறி அழுதாள்.

''எந்த வேலைக்காரிக்கும் இவ்வளவு முன் பணம், இதுவரை யாரும் கொடுத்திருக்க மாட்டாங்க. நான் உனக்குக் கொடுக்கிறேன். நான் எவ்வளவு உயர்ந்த மனிதன். வாங்கின பணத்துக்கு வஞ்சகமில்லாமல் வேலை பார்க்கணும். சரியா?''

இந்த நேரத்தில் கூட அவளைக் குத்திக் கிழித்தான்.

''பணம் என்னிடம் வந்து கேட்கிறாயே, அவன் என்ன ஆனான்? உனக்குனு ஒரு ரேட் போட்டுக் குடுத்திருப்பானே.''

அவன் காலில் விழுந்தாள். ''ஏங்க இந்த நேரத்தில் கூட இப்படிப் பேசுறீங்க. நான் எந்தத் தப்பும் செய்யலே. என்னை நம்புங்க,'' என்றாள்.

அவளைக் காலால் எட்டி உதைத்தான். ''அன்று வர மாட்டேன் என்று சொன்னவள்தானே. ஆனால் இன்று பணத்துக்காகத்தானே வந்திருக்கே. அப்போ பணம்னா நீ என்ன வேண்டுமானாலும் செய்வே. அப்படித் தானே?''

''சீக்கிரம் தாங்க. என் அம்மா தனியாக அங்கே இருக்காங்க. அவங்களைப் பார்த்துக் கொள்ளக் கூட ஆள் இல்லை,'' என்றாள்.

"அன்று எப்படி அவமானப்படுத்தினே. வா என்று கூப்பிட்டும். இன்று பணத்துக்காகத்தானே, நீ இறங்கி வந்திருக்கே."

அவள் சாப்பிடாதது, அவன் உதைத்தது, மனம் தவியாய்த் தவித்தது, எல்லாம் சேர்ந்து அவளுக்கு மயக்கம் வரும் போல் இருந்தது.

பணத்தை அவளிடம் கொடுத்தான். "எப்போ இருந்து வேலைக்கு வருவே?" என்றான்.

"அம்மாவுக்குச் சரியானதும் வர்றேன்."

"உங்கம்மாவுக்குச் சரியாக ஒரு மாதங்கூட ஆகும். இல்லை, சரியாகாமல் கூடப் போகலாம். அதுக்காகப் பணத்தை வாங்கிக் கொண்டு உன் சவுகரியத்துக்கு வேலைக்கு வந்தின்னா?"

"ஆப்ரேசன் முடிந்து வீட்டுக்கு வந்ததும் வந்து விடுகிறேன்."

"வீட்டுக்கா..? எந்த வீட்டுக்கு?"

அவளால் நிற்கக் கூட முடியவில்லை. தடுமாறினாள். "ப்ளீஸ்" என்று கெஞ்சினாள். அவன் கேட்ட கேள்வி நெஞ்சில் பாய்ந்தது. 'எந்த வீட்டிற்குப் போவது?'

"இங்க பாரு, உங்கம்மாவை இங்கு கூட்டி வந்து விடாதே.. உன்னையே என் வீட்டில் தங்க வைப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. உன்னைப் பார்க்க எத்தனையோ பேர் வருவாங்க." "எத்தனையோ" என்ற வார்த்தையை அழுத்திச் சொன்னான்.

அவள் இதயமே மரத்துப் போனது. இரத்தம் வழியும் இடத்தில் ஆசிட் ஊற்றினான். அவள் நெஞ்சைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.



"நான் வர்றேன்," என்று விட்டுப் போனாள்.

அன்று காலை ஆபரேசன். தேவிக்குப் பரபரப்பாக இருந்தது. அம்மாவுக்கு எதுவும் ஆகிவிட்டால்..? அந்த நினைப்பே அவளை நடுங்க வைத்தது. அம்மாவுக்குப் பிறகு நான் இருக்கக் கூடாது. நான் இறந்தால் தூக்கிப் போடக் கூட ஆள் இல்லை.

பெரிய டாக்டரைப் போய்ப் பார்த்தாள். அவர் உன் அம்மாவுக்கு ஆப்ரேசன் செய்தாலும் இரண்டுமே ஐம்பது சதவீதம் தான்... மற்றது கடவுள் கையில்.

"டாக்டர்..." என்றாள் மெதுவாக.

"என்னம்மா...?"

"என் அம்மா இறந்து விட்டால்... அவங்களை மெடிக்கல் காலேஜுக்கு குடுக்கணும்," என்றாள் கம்மிய குரலில்.

"அதுக்கு ஏதாவது பார்மாலிட்டி இருக்கா..?"

"ஆம். அதுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்."

"சரி" என்று கூடச் சென்று, தன் அம்மாவுக்கும், தனக்கும் எழுதிக் கொடுத்தாள்.

ஆபரேசன் முடிந்து டாக்டர் வெளியில் வந்தார். தேவி ஓடிப் போய் "டாக்டர்..." என்றாள்.

தேவியைப் பார்க்க அவருக்கே பரிதாபமாக இருந்தது. கண்களில் உயிரைத் தேக்கி வைத்திருந்தாள்.

எப்படிச் சொல்ல முடியும். உன் அம்மா இறந்துவிட்டாங்க என்று. வேற வழியில்லை. "ஐயாம் சாரி தேவி. உன் அம்மா இறந்துட்டாங்க."

தேவி திறந்த வாய் மூடவில்லை. கடவுள் கை விட்டுவிட்டார். இனி எல்லாம் முடிந்தது. தாயின் முகத்தைப் பார்த்துக் கதறித் துடித்தாள்.

கைப்பையில் வைத்திருந்த தூக்க மாத்திரையை எடுத்து விழுங்கினாள். உடனே வாந்தி எடுத்து மயக்கம் போட்டு விழுந்தாள். டாக்டர் அவளுக்கு ட்ரீட்மெண்ட் எடுத்தார்.

அவள் கைப்பையில் தேடிப்பார்த்ததில் மாதவனோட போன் நம்பர் இருந்தது. அந்த எண்ணிற்கு போன் போட்டனர்.

மாதவன் எடுத்து, ''ஹலோ மாதவன் ஸ்பீக்கிங்.''

''சார், தேவிங்கிறவங்க உங்களுக்கு என்ன வேண்டும்?''

அவன் தயங்கவும். மீண்டும், ''ஹலோ.. ஹலோ...'' என்றனர்.

''அவள் என் மனைவி தான்,'' என்றான்.

''சார், உங்க மனைவி தூக்க மாத்திரை சாப்பிட்டாங்க. உடனே வாங்க,'' என்றனர்.

அவன் மனது ஒரு நிமிடம் நின்று, பின் துடித்தது. தேவியைப் போய்ப் பார்த்தான். அனலில் போட்ட பூசணிப் பூ போல வாடிக் கிடந்தாள்.

டாக்டர் அவனிடம், ''அவள் அம்மா இறந்துவிட்டாங்க. அதனால் மனம் உடைந்து மாத்திரையைப் போட்டுக்கிட்டாங்க போல. ஆனால் நேற்றே. தன் அம்மா இறந்தாலும், நான் இறந்தாலும், எங்களை மெடிக்கல் காலேஜுக்குக் கொடுத்திடுங்க என்று எழுதிக் கொடுத்து விட்டாங்க.''



உதட்டைக் கடித்து, கண்களை இறுக மூடித் திறந்தான்.

''தேவிக்கு இப்போ எப்படி இருக்கு டாக்டர்?''

''இரண்டு நாளில் கூட்டிப் போகலாம்,'' என்றார்.

மறுநாள் காலையில் தான் கண் விழித்தாள். இவள் விழித்ததைப் பார்த்துவிட்டு, குனிந்து, ''தேவீ...'' என்றான்.

அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் என்ன சொல்வானோ, பணத்தைக் குடுக்கும்போதே, நீ பணத்தை வாங்கிக் கொண்டு வரவில்லை என்றால்..? எத்தனை வாட்டி கேட்டான். அந்த நேரத்தில் இந்த நினைப்பே வரவில்லையே..? இப்பொழுது என்ன சொல்வானோ தெரியவில்லையே...

''நா..ன் வேலை..க்கு வந்துவிடுகிறேன். என்னை மன்னிச்சுடுங்க. நான் உங்களை ஏமாற்ற மாட்டேன்.''

''அப்புறம் எதுக்கு தூக்க மாத்திரையைப் போட்டே...?''

''இனி எனக்கு யாரு இருக்கா..? இந்தப் பொல்லாத உலகத்துல வாழ விருப்பமில்லை.''

மாதவனுக்குச் ''சுருக்''கென்றது. ''சரி. பேசாமல் ரெஸ்ட் எடு.''

மறுநாள் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள். மாதவன் அவளை வீட்டுக்குக் கூட்டி வந்தான். அவன் அன்று பேசியது நினைவு வந்தது. உன் அம்மாவைக் கூட்டிக் கொண்டு இங்கு வ்ராதே என்று. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''இப்ப எதுக்காக அழுகிறே..?''

''நீங்க சொன்ன மாதிரியே எங்கம்மா வரலே... இப்ப உங்களுக்கு சந்தோசம்தானே...'' என்றாள்.

கார் ஒரு வினாடி நின்று, பின் வேகம் எடுத்தது.

அன்று இரவு தேவிக்கு நல்ல ஜுரம். தாங்க முடியாமல் அனத்தினாள். மாதவன் ஒரு மாத்திரையைக் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிப் போட்டுக் கொண்டாள்.

அ..ம்..மா.. என்..னை.. விட்டுப்... போகாதே... நா..ன் அனா..தை ஆகிவிட்டேன். அம்..மா.. நானும்.. வந்துர்றேன்.. என்..னைக் கூட்டிப் போம்மா... என்று உளறினாள்.

அதைக் கேட்ட அவன் மனம் வேதனைப்பட்டது. தன்னால் தானே இவளுக்கு இந்த நிலைமை. தாயைப் பறிகொடுத்ததுக்கு ஒரு ஆறுதல் சொல்லக் கூட எனக்கு மனமில்லை. பணத்தைக் கொடுத்து வேலைக்காரியாய்க் கூட்டி வந்திருக்கேன்.

தேவிக்கு ஐந்து மணிக்கு விழிப்பு வந்துவிட்டது. எழ முடியவில்லை. தன் தாய்க்காக வாங்கிய பணம் நினைப்பு வந்தது. பிடிவாதமாக எழுந்து பாலைக் காய்ச்சி மாமியார் அறைக்கு எடுத்துச் சென்றாள்.

அவர் விழித்திருந்தார். ''இந்தாங்க அத்தை காபி,'' என்று கையில் கொடுத்தாள். காபியை வாங்கி அவள் முகத்தில் ஊற்றினார்.

''ஒரு நடத்தை கெட்டவள் கையால், நான் காபி குடிக்க மாட்டேன். வீட்டை விட்டு வெளியே போடீ... நாயே...''

சத்தம் கேட்டு எழுந்து வந்தான் மாதவன். அவள் நின்ற கோலம். அம்மா திட்டியது. எல்லாம் பார்த்தான். மகனைப் பார்த்து, ''எதுக்குடா ஓடிப்போனவளை மறுபடியும் கூட்டி வந்தே... இதற்கு நீ எனக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்னிருக்கலாம். இவ கையால காபி குடுத்ததுக்கு.''

''நீ போ..'' என்றான் மெதுவாக.

''எதுக்கும்மா இப்படி சத்தம் போடுறீங்க. அவளை ஒரு வேலைக்காரியாத்தான் கூட்டி வந்திருக்கேன். அம்மாவும் இல்லை. நமக்கு ஒரு வேலைக்காரிகூட கிடைக்கமாட்டேங்கிறா... அப்படியே கிடைத்தாலும் எதையாவது திருடிக் கொண்டு ஓடிவிடுறா... நீங்க இவளை மருமகளா... நினைக்க வேண்டாம். ஒரு வேலைக்காரியை எப்படி நடத்தணுமோ அப்படி நடத்துங்கோ...'' என்றான்.

''அது தான் சரி. நம்மை, நம் குடும்பத்தை அவமானப்படுத்தினதுக்கு அவளுக்கு இது சரியான தண்டனை. நான் பாத்துக்கிறேன் அவளை. நீ கவலைப்படாதே...''

மாதவன் வெளியே வந்தன். அவர்கள் பேசியதைத் தேவி கேட்டுக்கொண்டு நின்றிருப்பதைப் பார்த்தான். பின் தோளைக் குலுக்கிக் கொண்டு சென்றுவிட்டான்.

''காபி சாப்பிடுங்க சார்...'' என்று காபியைக் கொண்டு குடுத்தாள்.

''ஜுரம் இப்ப எப்படி இருக்குது...?''

''ரொம்ப குளு... குளு...ன்னு இருக்குது...''

"ரொம்ப குளு... குளுன்னு இருக்குதுனுட்டு... கூட பேசறே..."



# 9

"உடம்புக்கு முடியாமல் எதுக்கு இவ்வளவு சீக்கிரம் எழுந்து வேலை பார்க்கிறே...?"

"வாங்கின பணத்துக்கு வேலை செய்ய வேண்டாமா..? பணத்தைக் கைநீட்டி வாங்கிவிட்டு, முடியவில்லை என்று சொல்ல முடியுமா...? வேறொருத்தனா இருந்தா... என்னைப் படுக்கைக்குக் கூப்பிட்டுருப்பான்... நீங்க... உங்க உயர்ந்த குணம். என்னை வேலைக்காரியாக மட்டும் நடத்துறீங்க. ரொம்ப தேங்க்ஸ் சார்..."

"என்னடி. காலையிலே ரொம்ப நக்கலா...? வாய் நீளுது. முன்னாடி வாங்கினது எல்லாம் மறந்து போச்சா...?"

அவன் அடித்ததை நினைக்கும் போதே உடம்பு நடுங்கியது. பேசாமல் டம்ளரை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

மங்களம் குரல் கொடுத்தார். "டீ... இங்கே வாடீ..." என்று. தேவி உள்ளே போனாள். "எனக்கு பெட்பேன் வை," என்றார் அதிகாரமாக.

மாமியாரைக் குளிக்க வைத்து. சாப்பாடு குடுத்து. தலை வாரி சக்கர நாற்காலியில் உட்கார வைத்து. வெளியில்



கூட்டி வந்து டி.வி. போட்டு விட்டு, மற்ற வேலைகளைப் பார்க்கப் போனாள்.

மாதவன் கிளம்பிக் கீழே வந்தான். டேபிள் மீது டிபனை எடுத்து வைத்துவிட்டு, உள்ளே சென்று விட்டாள்.

"ஏய்... யார் எடுத்து வைப்பா... கொண்டாந்து வைத்து விட்டுப் போய் விட்டாய்."

"வேலைக்காரி என்ன கட்டின பொண்டாட்டி மாதிரி பக்கத்தில் நின்றா பரிமாறுவா..."

"எல்லாம்தான்டீ... செய்யணும்."

ஆனாலும் தேவி வரவில்லை.

மாமியார் நிமிசத்துக்கொரு தரம் கூப்பிட்டு வேலை கொடுத்துக் கொண்டே இருந்தார். அவர் அறையைச் சுத்தப் படுத்துவது. மாமியாருக்குப் பத்தியச் சாப்பாடு செய்து, மாதவனுக்குத் தனியாக சமைத்து. பியூனிடம் கொடுத்தனுப்பி. அவள் சாப்பிட மணி மூன்று ஆகியது. காலையில் இருந்து காபி கூட குடிக்கவில்லை. காலையில் செய்த இட்லி இருந்தது. அதை எடுத்து வைத்துச் சாப்பிட உட்கார்ந்தாள். அப்போது மாதவன் உள்ளே வந்தான். இந்த நேரத்தில் இவன் எப்படி இங்கே...

"நான் வெளியே கிளம்பணும். நான் இரவு வர லேட்டாகும். சாப்பாடு வேண்டாம்."

அவள் தட்டில் இருந்த காலை இட்லியைப் பார்த்தான். அதைச் சாப்பிடுவதற்குள் மங்களம் நாலு தடவை கூப்பிட்டு விட்டார்.

மாதவன் வர இரவு ஒரு மணி ஆனது. அதுவரை தேவியை மங்களம் தூங்கவிடவில்லை. காலை அமுக்கச்

சொல்லிவிட்டார். அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது.

அவனுக்கு கதவைத் திறந்து விட்டுவிட்டு, அடுப்படியிலேயே படுக்கச் சென்றாள். மாதவன் அவள் கீழே முன் இருந்த அறையிலேயே படுக்கச் சொன்னான். "என்ன இருந்தாலும் நான் அப்போது உங்க மனைவி. இப்போ... வேலைக்காரி. ஒரு வேலைக்காரி எங்கே இருக்கணுமோ... அங்கே தான் இருக்கணும்."

உதட்டைப் பிதுக்கிவிட்டுப் போனான்.

மாதவன் வேலை விஷயமாக வெளியூர் சென்றான். செலவுக்குப் பணத்தைத் தேவியிடம் கொடுத்தான். அவன் அம்மா, "பணத்தை என்னிடம் கொடு. பால் எனக்கு மட்டும் வாங்கினாப் போதும். எனக்குச் சமைக்கிறதையே சாப்பிட்டுக்கட்டும். ஏன்டா...? உனக்குப் பழைய நினைப்பா... பொண்டாட்டி மேலே ஆசை வந்து விட்டதா...?"

அவன் உடம்பு இரும்பாய் இறுகியது. பணத்தை அம்மாவிடம் கொடுத்துவிட்டு வேகமாகச் சென்று விட்டான்.

தேவிக்குத் தேகமெல்லாம் நடுங்கியது. அவன் மறந்தாலும் இவங்க மறக்கவிட மாட்டாங்க போல் இருக்கே...

ஒரு வாரத்தில் வந்துவிட்டான். தேவி கறுத்துப் போய், இளைத்து, தலைக்கு எண்ணெய் கூட இல்லாமல் இருந்தாள்.

அவன் அம்மாவிற்குத் தெரியாமல், அவளிடம் தனியாகப் பணம் கொடுத்து, "உனக்குத் தேவையானதை வாங்கிக் கொள்," என்றான்.



அவள் வாங்கவில்லை. இப்படியே மாதங்கள் உருண்டோடின. மங்களமும் மாறவில்லை. மாதவனும் மாறவில்லை. தேவி படாதபாடு பட்டாள். அவளுக்குத் தூக்கம் என்பதே இல்லை.

ஒரு ஞாயிறு வேலையெல்லாம் முடித்துவிட்டு தோட்டத்துக்குப் போனாள். அங்கிருந்த சிமெண்ட் பெஞ்ச் மீது படுத்துத் தூங்கி விட்டாள். மங்களம் இரண்டு மூன்று தடவை கூப்பிட்டும் வரலை என்று கத்தத் தொடங்கி விட்டார். சத்தம் கேட்டு மாதவன் கீழே வந்தான்.

"என்னம்மா?"

"அவ எங்கே? நான் எத்தனை தடவை கூப்பிடுவது?"

அவள் வீட்டில் இல்லை. தோட்டத்துக்கு வந்தான். தூங்கிக் கொண்டிருந்தாள். தாலிக்கொடி வெளியே வந்து ஆடிக் கொண்டிருந்தது. பாவி... உரிமையோட படுக்கையில் படுத்துத் தூங்காமல் இப்படி வந்து படுத்திருக்காயே...? உரிமை இருக்கும்போது மட்டும் படுக்கையில் படுக்க விட்டாயா...? அவன் மனம் சுட்டது.

"தேவீ..." என்றான்.

அந்தச் சத்தத்தில் பயந்து, அரக்கப் பரக்க எழுந்தாள். அவனைப் பயந்து போய்ப் பார்த்தாள்.

அவனுக்கே என்னவோ போல் இருந்தது. இவளைப் பேசிப் பேசியே, அடித்தே பயப்படும்படி செய்துவிட்டோம். இப்போ சாதாரணமாகப் பேசினாலேயே நடுங்குறா...

"அம்மா கூப்பிடுறாங்க. வா..." என்றான்

அவர் பேசிய பேச்சு காது கொடுத்துக் கேட்க முடிய வில்லை.

அவளுக்கு முக்கியமான செலவுகள் எவ்வளவோ இருந்தன. தலைக்கு எண்ணெய் கண்டு பல மாதம் ஆகியது. கையில் ஒரு பைசா இல்லை. காதில் இருந்த தோட்டை ஒரு சேட்டிடம் விற்று அவளுக்குத் தேவை யானதை வாங்கிக் கொண்டு வந்தாள். அன்று பார்த்து மாதவன் சீக்கிரமே வீட்டுக்கு வந்துவிட்டான்.

அவன் அம்மா இப்படித்தான். ''தினம் என்னைத் தனியாக விட்டுவிட்டு வெளியே போய் விடுகிறாள். எங்கே போகிறாளோ... தெரியவில்லை.''

அவனுக்கு ஆத்திரமாக வந்தது. அவள் வரட்டும் என்று காத்திருந்தான். அவள் கையில் இருந்த பார்சலைப் பார்த்ததும் இன்னும் உக்கிரமானான். ''எங்கேடீ போய்ட்டு வர்றே... இதுக்கெல்லாம் உனக்குப் பணம் ஏது...?''

''அவள்தான் தெரியாமல் எடுக்குறா... வீட்டில் உள்ளதெல்லாம் இருக்குதா... என்று பார். எதையாவது எடுத்து வித்துடப் போறா.''

ஓங்கி அறைந்தான். அவள் எதுவுமே பேசவில்லை. எதுக்குப் பதில் சொல்லணும். ஏது... என்று கேட்டிருந் தால் கூடப் பரவாயில்லை. பதில் சொல்லலாம். அவங் களாகவே கேள்வியும் கேட்டு, அவங்களாகவே பதிலும் சொல்றாங்க. இவர்களிடம் பேசி ஒரு பயனும் இருக்காது என்று வாயை மூடிக் கொண்டாள்.

''என்னா... அழுத்தம் பாருடா... வாயைத் திறக்குறா ளானு. இந்த மாதிரி இருக்குறவளை நம்பவே கூடாது.''



எப்பவும் போல் டிபன் செய்து வேலையை முடித்து விட்டு, அடுப்படியில் உட்கார்ந்து விட்டாள். சாப்பிட மாதவன் கீழே வரவில்லை. என்ன செய்யப் போறானோ. வீட்டை விட்டுப் போ... என்று சொல்லி விட்டால்... என்ன செய்வது? எங்கு போவது? மெதுவாக மாடி ஏறிச் சென்றாள். வந்த நாள் முதல் மாடிக்குச் சென்றதில்லை.

வெளியே நின்று கதவை லேசாகத் தட்டினாள். அவன் பால்கனியில் இருப்பான் போல. மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள். அவளுக்குத் தேகமெல்லாம் பதறியது. என் நிலைமை யாருக்கும் வரக் கூடாது.

மாதவன் பால்கனியில் கைகளைக் கட்டியவாறு சுவரில் சாய்ந்து நிலவை வெறித்துக் கொண்டிருந்தான்.

இவள் மெதுவாக ''சா...ர்....'' என்றாள். சடக்கெனத் திரும்பினான்.

''என்ன...?'' அதட்டலாக வந்தது கேள்வி.

''சாப்பிடுங்க சார். நான் செய்தது தப்புத்தான். இனி செய்ய மாட்டேன்.''

''நீ என்ன தப்பு செய்தாய்...?''

''நா...ன் உங்களிடம் சொல்லாமல் கடைக்குப் போனது.''

அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவள் காதில் தோடு இல்லை. அதற்குப் பதிலாக பிளாஸ்டிக் முத்து ஒன்று இருந்தது. அவன் பிசினசில் நம்பர் ஒன். பணம் கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது. நான் எவ் வளவோ செலவு செய்கிறேன். இவளோ... தோட்டை

வித்து... அவளுக்குத் தேவையானதை வாங்கியிருக்கா. அடுத்த மாதத்திற்கு என்ன செய்வாள். அவள் முகத்தில் அவன் சிரிப்பே பார்த்ததில்லை. அவன் அவளைச் சிரிக்க விட்டதுமில்லை. இந்த சோகத்திலும் என்ன ஒரு அழகு சே... சே.. என்ன ஒரு நினைப்பு. இவ்வளவு நாள் இல்லாதது.

''நீ சாப்பிட்டாயா...?''

''இல்லை.''

''ஏன்...?''

''எனக்குப் பசியில்லை.''

''எனக்கும் பசியில்லை போ...''

அங்கு டேபிளின் மீது இருந்த பழத்தின் மீது அவள் பார்வை சென்றது. இரண்டு ஆப்பிளை எடுத்து, ''இந்தா சாப்பிடு,'' என்றான்.

அவள் அதை வாங்காமல், அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்கள் இரண்டும் கலங்கி, இதோ கீழே உருண்டு விழப் போகிறேன் என்றது. சடக்கெனக் குனிந்து கொண்டு, ''வேண்டாம் சார். ஒரு வேலைக் காரிக்கு இதெல்லாம் தேவையா...? இன்று நீங்கள் கொடுக்குறீங்க என்று வாங்கிச் சாப்பிட்டால், நாளையும் இதே மாதிரி ஆசை வரும். அப்போ யாரிடம் போய்க் கேட்க முடியும்.''

அவள் ஒவ்வொரு முறையும் சார்... சார்... என்று கூப்பிடுவது. அவனை ஈட்டியால் குத்துவது போல் இருந்தது.

பேசாமல் கீழே இறங்கி வந்து விட்டாள். அவளுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அவள் அம்மா



இறந்ததை நினைத்துத் தனியாக அழக்கூட நேரமில்லை. இன்று பின் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள். மனம் ஆறும் மட்டும் அழுதாள். எத்தனை மணி நேரம் அழுதாளோ தெரியவில்லை.

திடீரெனச் செடி அசைவது தெரிந்தது. யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. யாராக இருக்கும் இந்த நேரத்தில். அவன் பார்த்தால்... நாம் ஓடி விடலாம் என்று ஓட ஆரம்பித்தாள். ஒரே எட்டில் அவளைப் பிடித்து நிறுத்தினான்.

''ஐயோ... என்னை விடுங்க. நான் என்ன செய்வேன். நீங்கள் வந்ததைப் பார்த்தால், நான் தான் வரச் சொன்னேன் என்று சொல்வாங்க. வி...டு...ங்க,'' என்று இழுத்தாள்.

''ஸ்...ஸ்... தேவி. நான்தான். சும்மா இரு.''

கண்களைத் திறந்து பார்த்தாள். கைகளை வெடுக்கென உருவிக் கொண்டாள்.

''அழுது முடித்தாயிற்றா... இனி போய்ப் படுக்க வேண்டியது தானே. இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும்.''

''நான் தோட்டத்தில் யாருடன் இருக்கிறேன் என்று பார்க்கத்தானே வந்தீங்க...?''

அவன் வாயடைத்துப் போனான். அவன் இந்த மாதிரி நினைத்து வரவில்லை. இவள் கதவைத் திறந்து கொண்டு வந்தது முதல், அழுதது, புலம்பியது எல்லாம் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அழுதால் மனதின் பாரம் குறையும். இவள் இவ்வளவு நேரம் அழவும் எழுந்து போகச் சொல்ல வந்தான். இவள் அதைத் தப்பாக எடுத்துக் கொண்டாள்.

அவள் கேட்டதுக்குப் பதில் சொல்லாமல், ''போய்ப் படு,'' என்றான் அழுத்தமாக. அந்தக் குரலில் பயந்து கொண்டு, கல்லில் கால் இடித்துத் தடுமாறிச் சென்றாள்.



## 10

மங்களம் இப்போது நடக்க ஆரம்பித்து விட்டார். தேவியின் கவனிப்பும் மருந்து மாத்திரையும் எல்லாம் சேர்ந்து, எழுந்து நடமாட வைத்தது. அவன் குடும்ப டாக்டர், ''இன்று அமெரிக்காவில் இருந்து ஒரு ஸ்பெஷலிஸ்ட் வருகிறார். அம்மாவைக் கூட்டி வாங்க. காட்டலாம்,'' என்றார்.

மாதவனும் கூட்டிப் போனான். பார்த்துவிட்டு, சில எக்சர்சைஸ் செய்யச் சொன்னார். டாக்டர் மாதவனை நெற்றி சுருங்கப் பார்த்தார். அவருக்கு நினைவு வந்தது. ''அம்மாவை வெளியே உட்கார வைத்துவிட்டு, நீங்க வாங்க,'' என்றார்.

அம்மாவை வெளியே உட்கார வைத்துவிட்டு, இவன் உள்ளே போனான்.

''உங்கள் பெயர்...?''

''மாதவன் சார்...''

''மாதவன், என்னை உங்களுக்கு நினைவு இருக்கா...? நீங்கள் எட்டு வருடத்துக்கு முன் ஃபேமிலி பிளானிங் பண்ண வந்தீங்களே...?''



அவனுக்கும் நினைப்பு வந்தது. ''ஆமாம் டாக்டர்.''

''இப்ப எப்படி இருக்கே...?''

''நான் நல்லாயிருக்கேன் டாக்டர்.''

''நான் உன் உடம்பைப் பற்றிக் கேட்கலை. என்ன வேலை பார்க்கிறே? வாழ்க்கையில் முன்னேற்றமா... என்று கேட்கிறேன்.''

''நான் பிசினஸ் செய்கிறேன். இன்று நம்பர் ஒன் பிசினஸ் மேன்களில் நானும் ஒருவன்.''

''குட். வெரிகுட். அன்றே எனக்குத் தெரியும். நீ முன்னுக்கு வருவாய் என்று. உன்னை ஹாஸ்பிடலில் மயக்க நிலையில் பார்த்தேன். உன் முகம் உனக்குக் கல்யாணம் ஆகியிருக்காது. ஏதோ கஷ்டத்துக்காக நீ இதைப் பண்ண வந்திருக்கே என்று எனக்குச் சந்தேகம். உன் பாக்கெட்டில் கைவிட்டுப் பார்த்தேன். உன் சர்ட்டிபிகேட் இருந்தது. உன் வயது இருபத்து மூன்று. என்ன காரணத்திற்காக வந்தியோ என்று எனக்குத் தெரியாது. ஆனால்...''

''ஆனால் என்ன டாக்டர்...?''

''அன்று நான் ஆபரேஷன் செய்யவில்லை.''

''உனக்கு அன்று நான் ஆபரேஷன் செய்யவில்லை.''

''டா...க்...ட...ர்...'' மாதவன் எழுந்துவிட்டான்.

''ரிலாக்ஸ் மாதவா... உட்கார்.''

சீட்டின் நுனியில் உட்கார்ந்தான்.

''எ...ன...க்...கு ஆப்ரேசன் செய்யவில்லையா... டாக்டர்...?

''இல்லை. உன் ஏழ்மைதான் இதற்குக் காரணம் என்று தெரிந்தது. உன் வாழ்வைப் பாழாக்க விரும்பவில்லை.

அதனால் என் பாக்கெட்டில் இருந்த பணத்தை, உன் பாக்கெட்டில் வைத்து விட்டுப் போய்விட்டேன்."

டாக்டர் என்று எழுந்து அவர் கையைப் பிடித்துக் கொண்டான். "நான் இந்த நான்கு வருடங்களாகப் படும் வேதனை கொஞ்ச நஞ்சமில்லை. இதனால் எனக்கு எவ்வளவோ பிரச்சனை."

"உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா...?"

"ஆகிவிட்டது டாக்டர். நான் எவ்வளவோ மறுத்தும் கேளாமல் என் அம்மா நடத்தி வைத்து விட்டார்கள். நான் ஒரு பெண்ணோட வாழ்க்கையை. வீணாக்க விரும்ப வில்லை. உண்மையையும் என் அம்மாவிடம் சொல்ல முடியவில்லை."

"இது யாருக்குமே தெரியாதா...?"

"தெரியாது டாக்டர். என் மனைவி உட்பட."

"உன் மனைவியிடம் இவ்வளவு பெரிய உண்மையை மறைக்கலாமா...?"

"தப்புத்தான் டாக்டர். என்னால் அவளிடம் சொல்ல முடியவில்லை. சொன்னால்... எங்கு என்னை அவ மானப் படுத்தி விடுவாளோ... என்று பயந்தேன் டாக்டர். இப்போ நானும் அவளும் பிரிந்துதான் இருக்கோம்."

டாக்டரின் புருவம் நெரிந்தது "ஏ..ன்...?"

அவன் நடந்ததை முழுவதையும் மறைக்காமல் சொன்னான்.

டாக்டருக்கே கோபம் வந்தது. "நீ என்ன மனுசனா...? ஒரு பெண்ணை நீ இப்படி அவமானப்படுத்தலாமா...?"

"என் நிலையில் இருந்து பாருங்க டாக்டர்."

"உன் நிலையில் இருந்து பார்த்தால் சரி என்றே வைத்துக் கொள்ளலாம். அதுக்காக வீட்டை விட்டு அனுப்பி, அடித்து இதெல்லாம் ஒரு நல்ல ஆண் மகன் செய்யக்கூடிய வேலையில்லை. நீ இன்னும் நான் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை."

"சார், நான் ரொம்ப ஏழை. என் அம்மா... வீட்டு வேலை செய்துதான் என்னைப் படிக்க வைத்தாங்க. அன்று அவங்களுக்கு சிக்கன் குனியா. நடக்க முடியவில்லை. கை முட்டி... கால் முட்டி எல்லாம் வீக்கம். மருந்து வாங்கப் பணம் இல்லை. நான் என்ன செய்ய முடியும். பெற்ற தாய் துடிப்பதை என்னால் பார்க்க முடியவில்லை. அதனால் தான் அந்த முடிவுக்கு நான் வந்தேன். அந்த நேரத்தில் எனக்கு இந்த மாதிரி எல்லாம் யோசிக்கவே... தோணலே... என் அம்மா மட்டுந்தான் என் கண்ணுக்குத் தெரிந்தாங்க."

"சரி நடந்தது நடந்து போச்சு. அதைப் பற்றிப் பேசி, இனி பிரயோஜனம் இல்லை. இனிமேலாவது, உன் மனைவியை அன்பாக வைத்துக் கொள்." என்றார்.

"நிச்சயமா... டாக்டர், கடவுள் மாதிரி வந்து எனக்கு உண்மையைச் சொன்னீங்க. உங்களை என் வாழ் நாளில் மறக்கவே மாட்டேன்."

"முதலில் உன் ஒய்ஃபை மறக்காதே..." என்றார் குறும்பாக.

மாதவனுக்கு சந்தோசமாக இருந்தாலும், வேதனை அதிகமாக இருந்தது. தன் குழந்தையையே அழித்து விடு

என்று, எப்படி வயிற்றில் எட்டி உதைத்தான். உடனே தேவியைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. சீக்கிரமாக வீட்டுக்கு வந்தான்.

வீட்டில் அக்கா.. அக்கா பொண்ணு, மாப்பிள்ளை எல்லாம் வந்திருந்தனர். அம்மா மகளைப் பார்த்ததும் மகிழ்ந்து போனார். தேவியை இன்னும் விரட்டினார்.

ரொம்ப முடியாமல் இருந்தபோது பார்த்துக் கொள்ள மாட்டேன் என்றாள்.

''ஏன்டா... மாதவா, நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா..? உன் பொண்டாட்டி இப்படி உனக்குத் துரோகம் செய்யலாமா...?''

எல்லோர் முன்னிலையிலும் அப்படிக் கேட்டது., நடுத்தெருவில் நிற்க வைத்துச் செருப்பால் அடித்தது போல் இருந்தது. உடம்பே ஆடிற்று. இத்தனை நாள் இவன் பேசியபோது தெரியாத அவமானம், இன்று இப்போது தெரிந்தது.

''அக்கா... சும்மா இரு.''

''அவளை ஏன்டா... அடக்குறே... அவ உண்மையைத் தானே சொல்றா. அவ இந்த வீட்டில் இருந்தாலும் ஒரு வேலைக்காரிதான். இவந்தான் அவளை ஒதுக்கி வைத்திருக்கானே...''

மாதவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தான் செய்த தவறு, அம்மாவிடம் சொன்னதுதான். இவர்கள் பேசுவது அத்தனையும், அவள் காதில் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறா... நாம் சமாதானப்படுத்தலாம் என்றால் கூட முடியாது. போல் இருக்கே.

நானே தவித்துக் கொண்டிருக்கேன். என்ன சொல்லி, எப்படிப் பேசிப் புரிய வைப்பது என்று. என்ன தான் பேசிப் புரிய வைத்தாலும், மனம் சமாதானம் ஆகுமா...? நான் கேட்ட கேள்விக்கு, அடித்த அடிக்கு, அவள் என்னை மன்னிக்கவே மாட்டாள். இத்தனை வருடங்கள் நான் படுத்திய பாட்டுக்கு இனி அவளை என் கண்ணின் கருமணியாக வைத்துப் பார்த்துக் கொள்வேன். இதை அவள் நம்பணுமே...

மகளையும், மருமகனையும், அக்கா ரெஸ்ட் எடுக்கச் சொன்னார். அவர்கள் ஒரு அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டனர்.

அம்மாவும், பொண்ணும், அவர்கள் அறைக்குள் நுழைந்து கொண்டனர். மாதவன் மட்டும் ஹாலில். அம்மா உள்ளேயிருந்தே. ''தேவீ.. மாலதிக்கு என்ன வேண்டும் என்று கேட்டுக் கொடு.'' என்றார்.

தேவி அவர்கள் அறைக்கு முன் வந்து நின்றாள். கதவைத் தட்டுவதா... வேண்டாமா.. என்று நின்று கொண்டிருந்தாள்.

மாதவன் பார்த்துவிட்டு, ''நீ போய் வேலையைப் பார்,'' என்றான். அழுதிருப்பாள் போல. கண் இமையெல்லாம் வீங்கியிருந்தது.

கொஞ்ச நேரத்தில் மாலதி என்று கூப்பிட்டாள்.

கதவைத் திறந்த மாலதி, அரை குறை ஆடையில் நின்று கொண்டு 'ஐஸ்வாட்டர்' வேண்டும் என்றாள்.

மாதவன், ''ஏன் மாலதி, நீ வந்து எடுத்துச் செல்லக் கூடாதா?'' என்று நிமிர்ந்து பார்த்தான். படுக்கையில்

இருவரும் இருந்தனர். ஏன் கேட்டோம் என்று ஆகி விட்டது. அதற்குள் தேவி பாட்டிலோடு வந்தாள். அவளும் பார்த்துவிட்டு, பாட்டிலை அறை வாயிலேயே வைத்து விட்டு வந்து விட்டாள்.

இதை மாதவனும் கவனித்தான். தேவி முகத்தைச் சுழித்துக் கொண்டு போனாள்.

மாதவன் எழுந்து அடுப்படிக்குப் போனான். தேவி நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

''தேவீ...'' என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் அப்பொழுதும் நிமிர்ந்து பார்க்கவில்லை. காய் நறுக்குவதிலேயே கவனம் போல் இருந்தாள். வேகமாக நறுக்கியதில் கையை நறுக்கிக் கொண்டாள். இரத்தம் வடிந்தது.

மாதவன் உடனே அவள் கையைப் பிடித்து விரலைத் தன் வாயில் வைத்துச் சப்பினான். ''கையை விடுங்க!'' என்று வேகமாக இழுத்தாள். அவன் பல் கீறிவிட்டது.

''எதுக்கு இப்போ இப்படி பிடுங்குறே... இரத்தம் வந்தால் கையை உதறலாமா...? உதறினால் இரத்தம் அதிகம் வரும் என்று தெரியாதா...?''

''ரொம்ப அக்கறைதான்...''

இரவு சாப்பாடு ஆனதும் தேவி தோட்டத்துக்கு வந்தாள். நேரம் போனதே தெரியவில்லை. மெல்ல யாரோ வரும் சத்தம் கேட்டது. மாதவனாகத்தான் இருக்கும். நாம் போகலாம் என்று எழுந்தாள்.

அப்போது 'தேவி' என்று பாபு வந்து நின்றான்.

''பாபு, என்ன இந்த நேரத்தில், நீ தூங்கவில்லையா...?''

''நீ தூங்காமல் இருக்கும்போது, எனக்கு மட்டும் எப்படித் தூக்கம் வரும்.''

அவன் ஒருமையில் பேசியது மனதை வருடினாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''நான் போகிறேன்,'' என்று இரண்டெட்டு எடுத்து வைத்தாள்.

பாபு அவள் கையைப் பிடித்திழுத்தான். ''வாடீ உனக்காகத்தான், நான் இவ்வளவு நேரம் காத்திருந்தேன். நீயும் தனியாக எத்தனை நாள் கஷ்டப்படுவே... நான் உன்னை சந்தோசப்படுத்துகிறேன்,'' என்று கட்டி அணைக்கப் போனான்.

தேவிக்கு விபரீதம் புரிந்தது. ''ஏய்... என்னை விடுடா... நான் கத்தி அவரைக் கூப்பிட்டேன்... உன் எலும்பு ஒன்று கூடத் தேறாது.''

''எங்கே கூப்பிடு, வருவாரா... என்று பார்க்கிறேன். அவரே உன்னைப் பிடிக்கவில்லை என்று தானே தள்ளி வைத்திருக்கார். இப்போ மட்டும் எப்படி வருவார்.''

அவனைப் பலங்கொண்ட மட்டும் தள்ளிவிட்டு ஓங்கி அறைந்தாள்.

அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. ''உனக்கு என்ன திமிர்டி. உன்னை விட்டேனா... பார்...'' என்று அவளைப் பிடித்து இழுத்து முகத்தோடு முகம் வைக்கப் போனான்.

மாதவன் ஏதோ சத்தம் கேட்குதே என்று தோட்டத்துக்கு வந்தான். தேவி குரல் தான். அன்று போல் அழுகிறாளா...? இவ்வளவு சத்தம் போட்டா... என்று அவன் வேகமாக வரவும், பாபு வேகமாக அவளைப் பிடித்துத் தள்ளவும் சரியாக இருந்தது.

அவள் தள்ளிய வேகத்தில், பக்கத்தில் இருந்த சிமெண்ட் பெஞ்ச் மீது விழப் போனாள். மாதவன் இரண்டெட்டில் வந்து தாங்கிப் பிடித்தான். அவள் உடம்பு அம்பு பட்ட புறாவாகத் துடித்தது. அப்படியே சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான். அவளும் அவனுடன் ஒட்டிக் கொண்டாள்.

ஒரு நிமிடத்தில் அவளைத் தள்ளி நிறுத்திவிட்டு பாபுவைப் புரட்டி எடுத்து விட்டான். ''நாளைக்கு வீட்டில் இருந்தே... உயிரோடு ஊர் போய்ச் சேர மாட்டே போ...'' என்று உறுமினான்.

தேவியிடம் கோபமாகத் திரும்பினான். ''உனக்கு நேரம் காலமே கிடையாதா...? தோட்டத்தில் வந்து உட்கார. இப்போ மணி என்ன. உனக்கு இதே வேலையா போய் விட்டது. எழுந்து உள்ளே போ...'' என்று விரட்டினான்.

தேவி நடந்த அதிர்ச்சியில் அதிர்ந்து போனாள். அதை விட அவன் அணைப்பில் தான். அவனிடம் ஒண்டியதை நினைத்தால் இதைவிட அவமானமாக இருந்தது.

காலையில் அனைவரும் ஊருக்குக் கிளம்பினர். மங்களமும் மகளுடன் போய் இருந்துவிட்டு வருகிறேன் என்று கிளம்பி விட்டார். மாதவனுக்கு அப்பாடா என்று இருந்தது. இனி தனிமையில் அவளிடம் மனம் விட்டுப் பேசலாம்.

அன்று மாலை மாதவன் சீக்கிரமாகவே வந்து விட்டான். ஸ்வீட், பழம், பூ என்று வாங்கி வந்திருந்தான். அதைத் தேவியைக் கூப்பிட்டுக் கொடுத்தான்.

இத்தனை மாதங்களாகத் தாம்பத்தியம் என்ற நினைப்பே இல்லாமல் இருந்தான். டாக்டர் சொன்னதில் இருந்து



அவனால் அப்படி இருக்க முடியவில்லை. தேவியைப் பார்க்கும் போதெல்லாம் கட்டியணைக்க வேண்டும் என்ற உந்துதலை அடக்கிக் கொண்டான்.



# 11

அவன் கொடுக்கவும், அவனை மேலும், கீழுமாகப் பார்த்தாள். அவள் கண்களில் சீற்றம். எதுவும் பேசாமல் வாங்கி, தூக்கி டேபிள் மீது விசிறி அடித்துவிட்டுப் போனாள்.

மாதவன் அப்படியே நின்றான். எதுவும் பேசாமல் வெளியே சென்று விட்டான். இரவு ஒன்பது மணிக்குத் தான் வந்தான். டேபிளில் அந்தப் பூ, பழம் எல்லாம் அப்படியே கிடந்தன. அதை அவன் எடுத்து பிரிஜ்ஜில் வைத்து விட்டு, பூவைத் தேவியிடம் மீண்டும் கொடுத்தான்.

அவள் வாங்கவில்லை. மிருதுவான குரலில், 'தேவீ...' என்றான். அந்தக் குரல் இத்தனை வருடங்களில் கேட்டறியாதது.

''விடுங்க என்னை,'' என்று சீறினாள்.

''விட்டு விடுகிறேன். பூ வைத்துக் கொள்.''

''ஏன்..? உங்கம்மா இல்லை என்ற தைரியமா...? இல்லை... வேலைக்காரிதானே... என்ற இளப்பமா...?''

அவன் உதட்டைக் கடித்து, கோபத்தை மென்று விழுங்கினான். ''எனக்கு அவ்வளவாகப் பொறுமை இல்லை தேவீ...''

''உங்களுக்குப் பொறுமை இருந்தா என்ன? இல்லாட்டி எனக்கென்ன? ஒரு வேலைக்காரிகிட்டே வந்து எதுக்கு இதெல்லாம் சொல்றீங்க...?''

''சரி. என்ன வேணாலும் பேசிக் கொள். பூவை வைத்துக் கொள்.''

''இந்த மாதிரி வீட்டு எஜமானன் இருந்தால் வேலைக் காரிகளுக்கு கஷ்டமே இருக்காது. ஆனால்... எதுக்குப் பூ வாங்கி கொடுப்பார் என்று கூடவா... எனக்குத் தெரியாது.''

''இப்ப எதுக்காக உனக்குப் பூ வாங்கிக் கொடுக்கிறேனாம்...?''

''அது உங்களுக்குத்தானே தெரியும்.''

''நான் சாதாரணமாகத்தான் வாங்கி வந்தேன். இஷ்டம் இருந்தால் வைத்துக் கொள். இல்லாவிட்டால்...'' என்று அவள் பின்னாடி போய் நின்றான்.

''என் தலையில் வைக்காதீங்க...''

''நான் என்ன உன் தலையிலா வைக்கப் போறேன். உனக்கு அது மாதிரி ஆசை இருக்குதானே... நான் சாமிக்குப் போடப் போனேன்.''

அவள் கண் கலங்கி விட்டது. எல்லாச் சராசரிப் பெண்களுக்கும் உள்ள ஆசை தானே அவளுக்கும் இருந்திருக்கும். அவளை இப்படிக் கேவலப்படுத்தி விட்டேனே...?

''நீயும் சாப்பிடு தேவி...''

அவனை ஒரப் பார்வை பார்த்துவிட்டு, பேசாமல் எடுத்துக் கொண்டு போனாள்.

அன்று இரவு அவனால் தூங்க முடியவில்லை.



எழுந்து சன்னலைத் திறந்து விட்டான். மெல்லக் கீழே வந்தான். தேவி அடுப்படியில் ஓரமாகப் படுத்திருந்தாள். அவள் தூங்குவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளைக் கொசு பிடுங்கித் தின்றது. ஒரு போர்வையை எடுத்து வந்து போர்த்தி விட்டான்.

மணி எட்டாகியும் மாதவன் கீழே வரவில்லை. உடம்புக்கு ஏதும் முடியவில்லையா...? காபியை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போனாள்.

மாதவன் கீழே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். அதில் இளம் புன்னகை. கனவு ஏதும் காண்பானா... நேற்றுப் பூ வாங்கி வந்து, என்ன அவ்வளவு பிடிவாதம். மனம் வேதனைப் பட்டது.

கொலுசுச் சத்தம் கேட்டுக் கண் விழித்தான். கண் இரண்டும் கோவைப்பழம் போல் சிவந்திருந்தன. அவளையே பார்வையில் துளைத்தான்.

''குட்மார்னிங் தேவீ...''

''குட்மார்னிங்.''

''மகாராஜாவின் அந்தப்புரத்திற்கு, மகாராணி வந்திருக் கீங்க, என்ன விஷயம்?''

''இன்னும் கீழே வரவில்லையே அ..தா..ன்.''

''உண்மையா...? என் மேலே உனக்கு அக்கறை இருக்கா...?''

''இதுவும் ஒரு வேலைக்காரியோட வேலை தானே...''

வேகமாக அவள் கையைப் பிடித்திழுத்துத் தன் மேல் போட்டுக் கொண்டான். ''எப்படி... நான் தூங்கும்போது ரசிச்சுப் பார்த்தியே... அது கூடவா...''

"விடுங்க என்னை. எனக்குப் பிடிக்கவில்லை."

"எனக்குப் பிடிக்குதே..." கொஞ்சினான் அவன். அவள் கன்னத்தோடு கன்னம் வைத்துத் தேய்த்தான். மூக்கோடு மூக்கு வைத்து உரசினான். அவள் சோப்பின் வாசமும், மஞ்சள் பவுடர் வாசமும், எல்லாம் அவனைக் கிறங்க அடித்தன.

"தே..வீ.. என் கண்ணே! என்னை மன்னிச்சுடுடா..."

அவளுக்கு வேகம் எங்கிருந்துதான் வந்ததோ... ஒரு உருண்டு, உருண்டு வேகமாக எழுந்து நின்றாள்.

"என்னிடம் இப்படி நடக்க உங்களுக்கே வெக்கமாயில்லை?"

"இதுல வெக்கப்பட என்ன இருக்கு."

"உங்களுக்கு ஒன்றுமில்லை. எனக்கு இருக்குது. உங்ககிட்ட வாங்கின பணம் முடியறவரை, இங்கு வேலை பார்ப்பேன். பின் நான் இங்கிருந்து போய்விடுவேன்."

"எப்போ குடுத்து முடிக்கப் போறே...?"

"அதான் வேலை செய்றேனே...?"

அவளைக் கூர்மையாகப் பார்த்தான். பின் காபியை எடுக்கப் போனான்.

"அது ஆறியிருக்கும். வேற தருகிறேன்."

"நீ இப்படியெல்லாம் எனக்குச் செய்தா... நான் பணத்தைக் குறைத்துக் கொள்ள மாட்டேன்." அவன் குறும்பாகச் சொன்னான்.

அவள் கோபமாக நிமிர்ந்தாள். அவன் முகத்தில் புன்னகை. பேசாமல் போய்விட்டாள்.



மாதவனும் அடுப்படியில் அவள் பின்னாடி மெதுவாகப் போய் நின்றான். அவள் திரும்பும்போது, அவன் மீது மோதிக் கொண்டாள்.

அப்படியே அவளைப் பிடித்து, அவள் உதட்டில் அழுத்தமாக ஒன்று கொடுத்தான். அவள் அப்படியே மயங்கினாள். நெற்றி, கண், கழுத்து என்று முத்தம் கொடுத்தான். அந்த வேகத்தில் கையில் இருந்த காபி சிதறிக் காலில் கொட்டியது. அவள் வேகமாகப் பின்னடைந்தாள்.

"நல்லாத்தானே இருந்தே. இப்போ என்ன வந்தது."

காபியை நங்கென வைத்துவிட்டுத் தோட்டத்திற்குச் சென்றுவிட்டாள்.

சிறிது நேரம் சென்று வந்தாள். அவளிடம், "தேவீ, நாம் இன்று வெளியே போய்ச் சாப்பிட்டு விட்டு, அப்படியே எங்காவது போய் விட்டு வருவோம்."

வெடுக்கென, "நான் வரலே..."

"சரி, நான் ஹோட்டலில் போய் ஏதாவது வாங்கி வரவா.. தினமும் நீ தானே சமைக்கிறே... இன்று ஒரு நாள் ரெஸ்ட் எடு."

"வேலைக்காரிக்கு எதுக்கு ரெஸ்ட்?"

"லட்சம்... கோடி... முறை சொல்லிட்டே... நான் சொன்னேன் தான். இல்லேங்கலே. மன்னித்துவிடு. அதுக்காக இப்படிப் பேசாதே... நீ இப்படிப் பேசும்போது, என்னை ஆயிரம் ஈட்டி கொண்டு ஒரே நேரத்தில் இதயத்தில் குத்துவது போல் இருக்கு. தேவி, உன்னிடம் நான் மனம் விட்டுப் பேசணும்."

"போய் யார்கிட்டயாவது பேசுங்க..."

''போய் யார்கிட்டாவது பேசட்டுமா...? நீயே ஒரு ஆள் பிடித்துக்கொடு. பேசுகிறேன். பேசினா மட்டும் போதுமா...? இல்லே... வேற எதுவும் பண்ணட்டுமா...?'' என்றான் கண்ணைச் சிமிட்டியவாறு.

மதியம் ஹோட்டலில் இருந்து, பிரியாணி, மட்டன், சிக்கன் என்று வாங்கி வந்தான். எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு, தேவியைச் சாப்பிடக் கூப்பிட்டான்.

''உங்களுக்கு எத்தனை முறை சொல்வது. எனக்கு வேண்டாம் என்று. இப்படியெல்லாம் வாங்கி வந்து கொடுத்தால், நான் உங்க கூடப் படுத்து விடுவேன் என்று நினைப்பா... கனவில் கூட அப்படி நினைக்காதீங்க.''

''தேவி... சாப்பாட்டைக் காட்டி உன்னைப் படுக்கைக்கு ...சே... சே.. ஏன் இப்படி மட்டமா சிந்திக்கறே. முதலில் வந்து சாப்பிடு. நான் அந்த மாதிரி எல்லாம் கூப்பிட மாட்டேன். வா தேவி, எனக்கு ரொம்பப் பசிக்குது.''

அப்படியிருந்தும் அவள் வராமல் நிற்கவே... போய் அவள் கையைப் பிடித்து இழுத்து வந்தான். பிரியாணியை எடுத்து ஒரு வாய் ஊட்டி விட்டான். அது அவளுக்கு அப்படியே வாந்தி வந்தது.

அவன் பதறி விட்டான். ''ஏன்... தேவி...?''

''எனக்கு இதெல்லாம் பிடிக்காது. இதுவரை நான் சாப்பிட்டதில்லை.''

அவன் திகைத்தான். அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது என்று, இதுவரை அவனுக்குத் தெரியாது. எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு, ''சாப்பிட என்ன இருக்குது?'' என்றான்.

அவள் கோபத்தில் ஒன்றுமில்லை என்றாள்.

மாலை கிளம்பி வெளியே போனான். வர இரவு மணி பத்தானது. வந்து கதவைத் திறந்தாள். அவன் மேல் ஒரு வாடை வீசியது. குடித்துவிட்டு வந்திருப்பான் போல... கதவைத் திறந்துவிட்டு, அவன் முகத்தைக்கூடப் பார்க்காமல் சென்றாள்.

அவள் கையைப் பிடித்து சோபாவில் உட்கார வைத்து, தானும் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''தேவி, உன்னிடம் நான் பேசணும். நீ அதைக் கேட்டு, என்ன தீர்ப்பு சொன்னாலும் சரி,'' என்று, சின்ன வயதில் கஷ்டப்பட்டது, என் அம்மா வீட்டு வேலை செய்தது, என்னைப் படிக்க வைத்தது. என் அம்மாவுக்கு சிக்கன் குனியா வந்தது. ஹாஸ்பிடல் போகப் பணம் இல்லாமல் இருந்தது. நான் பணத்துக்காக பேமிலி பிளானிங் செய்து கொண்டது. எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று சொன்னது. என் அம்மா பிடிவாதமாக உன்னை எனக்குக் கல்யாணம் செய்து வைத்தது. எல்லாம் சொல்லி முடித்தான்.

அவள் அப்படியே உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள். பேமிலி பிளானிங் பண்ணிக் கொண்டானா...?

''நான் அதனால் தான் உன்னிடம் அன்பாக இருக்க முடியவில்லை. எனக்கும் எல்லா ஆசைகளும் உண்டு. நானும் உணர்வும், உணர்ச்சியும் உள்ள ஆண் மகன் தானே. ஆனால்...? நான் எங்கே உன்னிடம் நெருங்கிப் பழகினால், நீ என்னிடம் குழந்தை என்று பேச ஆரம்பித்து விடுவாயோ... என்று தான், நான் தள்ளியே இருந்தேன்.

''நீ கன்சீவ் என்றதும், நான் ஆடிப் போய் விட்டேன். எப்படி முடியும்? எனக்கு ஏற்கெனவே உன்னை இப்படி

நடத்துவது வேறு மனச்சாட்சி குத்திற்று.... உன் அத்தை பையன் வேறு வந்திருந்தானா... அவன் பேச்சு சிரிப்பு, ஜோக், நீ சிரித்தது. நான் உன்னை சந்தோசப் படுத்தாதது. அதனால் அவனிடம் நீ... என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டேன்.''

''நீங்க என்னிடம் முழு ஈடுபாட்டுடன், அன்பாக இல்லை என்று எனக்குத் தெரியும். ஒரு வேளை நான் ஏழையாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையோ என்று நினைப்பேன். ஆனால் அதற்காக, நான் உங்களுக்குப் போய்... தப்புப் பண்ணுவேனா...?''

''அது எனக்கு இப்போ தான் புரிந்ததுடா... ஆனால் என் இடத்தில் இருந்து நீ யோசித்துப் பார். ஒரு மனைவி கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்தாள், என்ற நினைப்பு எப்படி இருக்கும்.''

''இப்ப என்ன புரிஞ்சிக்கிட்டீங்க...?''

''நான் போன மாதம் அம்மாவை, அமெரிக்காவில் இருந்து ஒரு டாக்டர் வந்தார், என்று கூட்டிப் போனேன். நினைப்பு இருக்கா...?''

தலையை மட்டும் ஆட்டினாள்.

''அந்த டாக்டர் தான் எனக்கு ஆப்ரேசன் பண்ணினவர். அவர் என்னை அடையாளங்கண்டு விசாரித்தார். என்ன பண்றே... கல்யாணம் ஆகி விட்டதா...?'' என்று.

''நான் பிசினஸ் பண்றேன். கல்யாணம் ஆகிவிட்டது.'' என்றேன்.

''அன்று என்ன சூழ்நிலைக்காக, நீ ஹாஸ்பிடல் வந்தே?'' என்றார்.

''நான் எல்லாவற்றையும் சொன்னேன். அவர் நான் அப்படித்தான் நினைத்தேன். அதனால் தான் உனக்கு நான் ஆப்ரேசன் செய்யலே என்றார். எனக்கு சந்தோசத்துக்கு அளவேயில்லை. ஆனால் இதனால் உனக்கு எவ்வளவு பிரச்னை. எப்படி எல்லாம் பேசினேன்.''

''என் கண் முன்னாடியே ஒரு வேலைக்காரியாக... நான் நினைத்துத் துடிக்காத நாள் இல்லை. இருந்தாலும் நீ எனக்குத் துரோகம் பண்ணி விட்டாய் என்ற ஆத்திரம். எனக்கு உன்னைவிட மனசில்லை. நீ எனக்கு வேணும். என் பக்கத்திலேயே இருக்கணும். நீ சும்மா கூப்பிட்டால் வர மாட்டே என்று தெரியும். அதனால் தான் பணத்தைக் கொடுத்து வரவழைத்தேன். எனக்கு உன் மீது அன்போ, பாசமோ இல்லாமல் இல்லை. ஆனால் அதையும் மீறி வெறுப்பு இருந்தது.

''டாக்டர் சொன்னதைக் கேட்டதில் இருந்து, உனக்கு இப்படித் துரோகம் செய்து விட்டேனே என்று மனம் குத்திற்று. உனக்கு இனிமேல் இவ்வளவு நாள் கிடைக்காத சந்தோசத்தை, அன்பை எல்லாம் கொடுக்கணும் என்று மனம் துடிக்கிறது. நான் எதுக்காக இவ்வளவு சம்பாதிக்கணும். யாருக்காக...?''

''அப்போ டாக்டர் உண்மையைச் சொல்லவில்லையென்றால், நான் உண்மையானவள் என்று நம்பியிருக்க மாட்டீங்க. அப்படித்தானே...?'' சாட்டையால் அடித்தது போல் கேட்டாள்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

''இதற்கு மேலும் நீ இப்படிக் கேட்டால், நான் என்ன பதில் சொல்ல முடியும். என் இடத்தில் நீ இருந்து பார். அந்த வேதனை புரியும் உனக்கு.''

அவள் பேச வாய் திறந்தாள். அவன் அதற்குள் கை அமர்த்திவிட்டு, "நீ சொல்ல வருவது எனக்குத் தெரிகிறது. என்னை மட்டும் நடத்தை கெட்டவள் என்று சொன்னால், என் மனம் என்ன பாடுபடும். எவ்வளவு வேதனை அனு பவித்திருப்பாய் என்று எனக்கும் தெரியும். ஒரு பெண் மேல் எந்தப் பழியைச் சொன்னாலும் பொறுத்துக் கொள்வாள். இந்த மாதிரிப் பழியை எந்தப் பெண்ணும் தாங்க மாட்டாள்.

"ஆனால் என் நிலைமையை நினைத்துப் பார். நான் உன்னிடம் முழு அன்பாக இருந்திருந்தால், எனக்கு அந்த சந்தேகம் வந்திருக்காதோ என்னமோ. என் மேல் தப்புத்தான். மன்னிக்க முடியாத குற்றம் தான்."

"நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கலாமே. நான் இந்த மாதிரி ஆப்ரேசன் பண்ணிக் கொண்டேன் என்று."

"எப்படி... தேவீ... நான் சொல்ல முடியும். நீ என்ன நினைப்பே? என்னைக் காறித் துப்ப மாட்டியா...? ஒரு குழந்தையைக் குடுக்க முடியாத உனக்கு எதுக்குப் பொண் டாட்டி என்று கேட்க மாட்டியா...?"

அவள் மடியில் முகம் புதைத்து அழுதான். அவள் கை தானாகவே அவன் தலையை வருடியது.

"நான் அது மாதிரிக் கேட்பேனா...?"

"நீ கேட்பியோ, கேட்க மாட்டியோ... எனக்குத் தெரி யாது. நான் சொல்லிவிட்டு, எப்படி உயிருடன் இருக்க முடியும். உன் உதாசீனமான பார்வை, பேச்சு, என்னைக் கொல்லாதா...? நீ சாதாரணமாகப் பேசினாலும் என்னைக் குத்திக் காட்டுவது போல் இருக்கும்."

"நான் அன்று அவ்வளவு கெஞ்சியும், நீங்க நம்ப லையே. நான் அந்த மாதிரி ஒரு நாள் வீட்டுக்கு



வந்தவரிடம் தப்பா நடந்து கொள்ள முடியுமா...? இது எவ்வளவு பெரிய விஷயம்."



## 12

"ஐயோ... நான் எத்தனை முறை சொல்வது. என்னால் முடியாததை, எப்படி முடிந்தது. அப்போ உன் மீது சந்தேகம் வருவது இயல்புதானே. என் குழந்தை என்று தெரியாமல் கலைத்து விடு என்று உன்னை அடித்தேனே... தேவீ, அந்தக் குழந்தை என்ன ஆனது?"

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. "நீங்க நினைத்த மாதிரியே அது அழிந்து விட்டது. பிடிக்காத அப்பாவிற்கு எதுக்குப் பிறக்கணும் என்று அதுக்குக்கூட தெரிஞ்சிருக்குது. எனக்குத் தெரியவில்லை. நீங்க சொன்ன மாதிரி, பணத்துக்காக, உங்களிடம் வந்துவிட் டேன்" விக்கி... விக்கி அழுதாள்.

"உங்களால் எனக்கு எவ்வளவு கஷ்டம். என் அண்ணி என்னைப் பிடித்துத் தள்ளி விட்டதில் தான் என் குழந்தை போய்விட்டது. இருந்திருந்தால், அது எனக்கு ஆதரவாக இருக்கும்." வயிற்றில் கை வைத்துக் கொண்டு அழுதாள்.

"இப்போ நான் அனாதையாக... இருக்கேன். எனக்குனு யார் இருக்கா... அன்றே நான் செத்திருக்கணும். நீங்க என்ன சமாதானம் சொன்னாலும், என் மனம் சமாதானம் அடையாது. உங்களை என் மனம் ஏற்றுக் கொள்ளாது." என்றாள் தீர்மானமாக.

"ப்ளீஸ் தேவி... நீ எனக்கு வேண்டும். என்னால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உணர்ச்சிகளைக் கட்டப்படுத்தும் வயதா... எனக்கு."

"நான் சுத்தமானவள் என்று தெரிந்த பிறகு தானே... உங்களுக்கு என் மேல் மோகம். என்னால் முடியாது. எவகிட்டயாவது போங்கள்."

"முட்டாள். என்ன பேச்சுப் பேசுறே... இத்தனை மாதத்தில், எனக்கு அப்படி ஒரு நினைப்பு வந்தது கிடையாது. எவகிட்டேயோ போறதுக்கு உன்கிட்டேயே வர்றேன், வா..." என்று அவளைத் தூக்கிக் கொண்டு மாடிக்குச் சென்றான். அவள் துள்ளினாள்.

அவனின் வேகத்துடன், மோகமும் சேர்ந்து கொள்ள, அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இருந்தாலும் இது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"என்னை விடுங்க. எனக்கு ஒரு கணவனிடம் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் எண்ணமே வரவில்லை. வேறு யாருடனோ... படுக்கையில் இருப்பது போல் அருவருப்பாக இருக்குது."

அவன் சடக்கென, அவள் மீது இருந்து எழுந்தான். அவனுக்குக் கன்னத்தில் அறை வாங்கியதுபோல் இருந்தது. தடுமாறினான். சேலையை எடுத்து அவள் மீது போட்டு விட்டு, "இனி உன் சம்மதம் இல்லாமல் நான் உன்னைத் தொட மாட்டேன். என் பேச்சை நீ நம்பலாம். நான் வார்த்தை மாறுகிறவன் இல்லை," என வேகமாக வெளியே போய் விட்டான்.

தேவி அந்தக் கட்டிலிலேயே படுத்து இரவு முழுவதும் அழுதாள்.



போன் அடிக்கவும் விழித்து எடுத்தாள்.

"ஹலோ குட் ஆப்டர்நூன், என்ன எழுந்திட்டியா தேவி?" என்றான் மென்மையாக.

எப்படி இவ்வளவு சாதாரணமாகப் பேசுகிறான். இனிமே என்ன நடக்குமோ என்று நினைத்திருந்தாள்.

"என்ன பதிலே இல்லை. இன்னும் தூக்கம் விடவில்லையா? ஐயாவோட பெட்டோட விசேஷம். நல்லா தூங்கினியா...? சாப்பிட்டிட்டியா...?"

"இன்னும் இல்ல..." அவள் முடிப்பதற்குள், "இன்னும் தூக்கம் விடலையா..." என்றான் சிரியாமல்.

அவளுக்குப் புன்னகை அரும்பியது. "தூங்கி முழிச்சாச்சு. இன்னும் சாப்பிடலை... அதான்."

"குட். இப்படித்தான் மலர்ந்த முகத்தோட பதில் சொல்லணும்."

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எப்படிக் கண்டு பிடித்தான். தான் புன்னகை செய்ததை. இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

"மதியம் சாப்பாட்டிற்கு ஏன் வர மாட்டீங்க...?"

"எனக்கு ஒரு மீட்டிங் இருக்குது. அதான்."

"இல்லே, என் மேல் கோபித்துக் கொண்டு தான், சாப்பிட வரவில்லையோ... என்று நினைத்தேன்," என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"பார்த்து... நாக்கு துண்டாகப் போகுது. உன் மேல் எனக்கு எதுக்குக் கோபம்...?"

"எங்க.. போனில கேமிரா... இருக்கா...?"

''என் கேமிரா இருந்தாத்தான் உன்னைப் பற்றி எனக்குத் தெரியுமா...?''

''சரி... சரி... போனை வைக்கட்டுமா? பில் ரொம்ப ஆயிடும்.''

''சரிங்க மேடம்,'' என்றான்.

தேவி சிரித்துக் கொண்டே கீழே வைத்தாள்.

இரவு சாப்பிட்டுவிட்டு டி.வி. முன் உட்கார்ந்தான். ஏதோ இங்கிலீஷ் மூவி போல. பார்க்கச் சகிக்கவில்லை. ''உட்கார் தேவி,'' என்று தன் பக்கத்தில் உட்காரச் சொன்னான்.

''நான் படுக்கப் போகிறேன்.''

''காலையில் லேட்டாகத்தானே எழுந்தே. அதற்குள் என்ன தூக்கம். இன்னும் ஒன் அவர்ல முடிந்துவிடும்.''

வேற வழி இல்லாமல் அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். படம் முடிந்ததும் மாதவன் எழுந்தான்.

''வா... தேவி. படுக்கப் போகலாம்.''

அவள் மிரள... மிரள விழித்தாள்.

''நான் உனக்கு வாக்குக் கொடுத்திருக்கேன் தேவி... அதை நான் மீறமாட்டேன். நீ என் இங்கே தனியா படுக்கணும்...?''

''இத்தனை நாள் இப்படித்தானே படுத்திருந்தேன்.''

''அப்படினு உன் நினைப்பு. அதுக்கு நான் என்ன செய்ய முடியும்.''

அவள் தயங்கினாள். அவன், ''சரி. நீ கீழேயே படு.'' என்று போய்விட்டான்.

ஏனோ... இன்று பயமாக இருந்தது. வரவில்லை என்றதும் போய்விட்டானே... இப்படி நினைப்பது நான்தானா...?

காலையில், ''தேவி! அந்த சோபாவோட கால் புண்ணியம் பண்ணியிருக்குது.''

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

நீ இரவு முழுவதும் அதைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்கினியே... அதைச் சொன்னேன்.

பதில் பேசாமல் குடத்தை எடுத்துத் தண்ணீர் பிடிக்கப் போனாள். கால் வழுக்கிக் கீழே விழுந்தாள். சத்தம் கேட்டு மாதவன் ஓடி வந்தான்.

''பார்த்து வரக்கூடாதா தேவி. கால் வழுக்கி விட்டதா...?'' என்று தூக்கி விட்டான். அவளால் நிற்க முடியவில்லை. கணுக்காலில் சுளுக்கிக் கொண்டது.

''ரொம்ப வலிக்குதா... வா ஹாஸ்பிடல் போகலாம்,'' என்றான்.

''பால் அடுப்பில் இருக்கு...'' அவன் அவளை முறைத்தான்.

அவள் சேலை முழுவதும் ஈரம். ''மாற்றிக் கொள் தேவி. எடுத்து வரவா...?''

அவளால் நின்று கட்ட முடியவில்லை. ''என்னங்க...'' என்றாள்.

''என்னங்க... கூப்பிட்டீங்களா...?'' என்றான் மாதவன் இளநகையோடு.

''என்னால் கட்ட முடியவில்லை.''

''நான் கட்டிவிடவா...?''

''ம்...'' என்று தலையாட்டினாள். முகம் செவ்வானமாகச் சிவந்தது. ''இதில் வெக்கப்பட என்ன இருக்குது?''

அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள். ''நான் தான் தேவி கண்களை மூடிக் கொள்ளணும்!'' என்றான், மிருதுவாக.

ஹாஸ்பிடலில் இது வெறும் சுளுக்குத்தான். ஆயில் மெண்ட் தந்தார்கள்.

வரும் வழியில் டிபன் வாங்கி வந்தான். டிபன் எடுத்து வந்து சாப்பிடக் கொடுத்தான்.

''என்னால்... உங்களுக்கு வீண் சிரமம். நீங்கள் ஆபீஸ் போங்க. நான் பார்த்துக்கிறேன்.''

''என்னத்தை...?''

அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

சேலையை மாற்றி நைட்டி போட்டு விட்டான். காலில் ஆயின்மெண்ட் தடவிவிட்டான். மாத்திரை கொடுத்துத் தூங்கச் சொன்னான்.

மணி இரண்டு. ''தேவி, பசிக்கலையா...? வந்து சாப்பிடு.''

அவளுக்கு பாத்ரூம் போக வேண்டும். எப்படிச் சொல்வது. அவனாகவே பாத்ரூம் போறியா...? என்று தூக்கிக் கொண்டு விட்டான்.

இரவு அவனும் கீழே படுத்து விட்டான். காற்றுப் பத்தாமல், அவனுக்குத் தூக்கம் வரவில்லை. இதைத் தேவியும் கவனித்தாள்.

மறுநாள் காலையில் தேவிக்கு எப்படிக் குளிப்பது என்று இருந்தது. ''என்ன...? குளிக்கிற மாதிரி எதுவும் ஐடியா... இல்லையா..? இல்லை, கால் சரியானதும் குளிச்சிக்கிறியா...?''



''குளிக்கணும்,'' என்று இழுத்தாள்.

''அப்போ... குளி.''

தேவிக்குச் சங்கடமாக இருந்தது. என்னதான் இருந் தாலும்... அவனுக்கு உடம்பு நடுங்கியது.

''என் தேவி குளிருதா...? இன்னும் கொஞ்சம் சுடு தண்ணீர் திறந்து விடட்டுமா...?''

''போதுங்க இந்தச் சூடு.''

மாதவன் பீரோவில் எதையோ தேடிக் கொண்டிருந் தான். அப்போது தேவியின் டைரி கிடைத்தது. அதை எடுத்து வைத்ததுடன் சரி. இன்று தான் பார்க்கிறான். அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதில் அவளுக்கு என்னென்ன ஆசைகள் என்று எழுதி இருந்தாள்.

எனக்கு மார்கழிப் பனி ரொம்பப் பிடிக்கும். அந்தக் குளிரில் இறுக அணைத்துக் கொண்டு, ஒரே போர்வைக் குள் விடிகாலை நேரத்தில் படுத்திருக்க வேண்டும்.

மழையும் எனக்குப் பிடிக்கும். மழையில் இருவரும் நனைந்து கொண்டே, யாரும் இல்லாத ரோட்டில், மெது வாக நடக்க வேண்டும்.

பகல், இரவு முழுவதும் மழை பெய்ய வேண்டும். பகலில் ஒரே மேகத்துடன் இருட்டாக இருக்க வேண் டும். அந்த நேரத்தில் படுக்கையில், அந்தக் குளிரில் படுத்திருக்க வேண்டும்.

இரவு மாதவன் கீழே வந்தான்.

தேவிக்கு அவஸ்தையாக இருந்தது. ''எங்க...''

அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

''உங்களைத்தான் கூப்பிட்டேன்.''

''பரவாயில்லையே...''

''மேலே போய்ப் படுங்க'' என்றாள்.

''ஏன்...? உனக்கு நான் கீழே படுப்பது கஷ்டமாக இருக்கா...?''

''இல்லை. நான் அதுக்குச் சொல்லலை. ஏ.ஸி. இல்லாமல் உங்களுக்குத் தூக்கம் வரலே... அதான்.''

''நான் ஏ.ஸி.யிலேயே பிறக்கவில்லை. எனக்குத் தூக்கம் ஏன் வரவில்லை என்று உனக்குத் தெரியாதா...?'' அவன் பார்வை அவளைத் துளைத்தது.

தேவி கண்களைத் தழைத்துக் கொண்டாள். மெதுவாக, ''நானும் மேலே வந்து படுத்துக்கிறேன்,'' என்றாள்.

''உன்னிஷ்டம்.''

அவன் சரி வா என்று கூப்பிடாதது, என்னவோ போல் இருந்தது.

சாப்பிட்டு எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். பாலைக் காய்ச்சிக் கொடுத்தான். ''எனக்கு வேண்டாம்.''

''ஐயோ... எனக்குக் கையெல்லாம் பரபரவென இருக்கே... நான் என்ன செய்யட்டும்?'' என்றான்.

பாலை வாங்கிக் குடித்துவிட்டு, தூங்கிப் போனாள்.

மாதவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பின் தானும் அவள் பக்கத்தில் படுத்தான். அவளை நினைத்தாலே... பார்த்தாலே... உணர்ச்சிகள் உள்ளே பேயாட்டம் போட்டன. அவளை அப்படியே அள்ளி எடுத்து மேலே போட்டுக் கொள்ளணும் என்ற ஆசை... இல்லே வெறியைக் கட்டுப்படுத்த முடியாமல் எழுந்து பால்கனிக்குச் சென்றான்.

தேவி அவன் மேல் கையையும், காலையும், போட்டுக் கொண்டு, அவன் மார்பில் ஒண்டித் தூங்கினாள். அவளை அப்படியே அணைத்துக் கொண்டு அவனும் தூங்கினான்.

தேவியின் கால் சரியாகி விட்டது.

மாதவன் பேச்சு நின்று போயிற்று. சாப்பாடு எடுத்து வைத்தால் சாப்பிடுவது. இரவும் லேட்டாக வீட்டுக்கு வந்தான். சில நாள் வெளியில் சாப்பிட்டு விட்டேன் என்று மேலே போய்விடுவான்.

''தேவி, வேலை விஷயமா கொடைக்கானல் போகிறேன். நீயும் வருகிறாயா?''

''அங்கு ரொம்பக் குளிருமே, மழை பெய்யுமே...''

''நான் வேணா சொல்லட்டுமா...? என் பெண்டாட்டி வர்ரா... அதனால் பனி பெய்யாதே... மழை பெய்யாதே என்று. உனக்குத்தான் நான் பயந்து கொண்டு இருக்கிறேன். மழையும், பனியும், கூடவா... உனக்குப் பயப்படும்?'' என்று ஆக்சனோடு செய்து காட்டினான்.

தேவியின் முகத்தில் மென்னகை பூத்தது.

மாதவன் அறையைச் சுத்தப்படுத்தப் போனாள். அங்கு ஷெல்பில் தூக்க மாத்திரை பாட்டில் இருந்தது. அதைப் பார்த்துத் தேவி அதிர்ந்தாள். அதை எடுத்து தன் பெட்டியில் வைத்துப் பூட்டினாள்.

இரவு மாதவன் வந்து, ''தேவீ...'' என்றான் அழுத்தமாக.

என்ன என்பது போல் வந்து நின்றாள்.

''மாத்திரை எங்கே?''

''எனக்குத் தெரியாது. என்னைக் கேட்டால்...?''

''உன்னைக் கேட்காமல், வேறு யாரைக் கேட்பது. பக்கத்து வீட்டில் போய்க் கேட்கவா... ஒழுங்கா குடுத்து விடு.'' என்றான் மிரட்டும் குரலில்.

''எதுக்கு உங்களுக்குத் தூக்க மாத்திரை...?''

''அதை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''சொன்னால் தான் தருவேன்.''

''என்னால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. அந்த அவஸ்தையை எத்தனை நாள் அனுபவிப்பது. அதான் என்னை மறந்து தூங்க நான் மாத்திரை போட்டுக் கொள்கிறேன்.''

''இப்போ எல்லாம் தினமும் குடித்துவிட்டு வேறு வர்றீங்க போல.''

''ஆமாம். குடித்து விட்டுத்தான் வருகிறேன்.''

''ஏன்... நீங்கள் இன்னொரு கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே...?''

கண்கள் இடுங்க அவளைப் பார்த்தான்.

''இப்பத்தானே... மகாராணி உத்தரவு போடுறீங்க. அதன் படியே நடக்கிறேன் மகாராணி!'' என்று குனிந்து பணிவு காட்டினான்.

''என்னால் உங்களுடன் சேர்ந்து வாழ முடியாது...''

''நான் உன்னைக் கூப்பிடலையே...'' என்றான். முகத்தில் அடித்தது போல.

''நீங்கள் இப்படிக் கெட்ட வழியில் போவது எனக்குப் பிடிக்கவில்லை.''



''எனக்குக் கூடத்தான் எது எதுவோ பிடிக்குது. அதெல்லாம் நடக்குதா...?''

''நீங்க இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க...''

''நான் ஒன்னும் சொல்ல வரலே. மாத்திரையைக் கொடுத்து விட்டு, உன் வேலையைப் பார் என்கிறேன்.''

''நீங்க என்னைப் பழி வாங்குறீங்க. நீங்க சொன்னதை நான் கேட்கவில்லை என்று.''

''முடியாதில்லே விடு. வேற பேச்சப் பேசு.'' என்றான் சலனமேயில்லாமல்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. அவன் வந்து இன்னும் கெஞ்ச வேண்டும் என்று மனம் விரும்பியது. அவன் விட்டேற்றியாக இருந்ததால், ஆத்திரம் வந்தது.

அவளுடைய முகபாவனையைக் கவனித்துக் கொண்டிருந்தான். ''என்ன, மனதில் என்னென்னமோ எண்ணம் எல்லாம் ஓடுதா...?''

அவள் திடுக்குற்று நிமிர்ந்தாள்.

அவள் பக்கத்தில் போய் அணைத்துக் கொண்டு, அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் செவ்விதழில் மென்மையாக முத்தமிட்டான். ''நீ சொன்னது எல்லாம் தப்பே கிடையாது. நான் எவ்வளவு மன வேதனைப் பட்டேன் என்று உனக்குத் தெரியுமா...? இருந்தாலும் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளக் கூடாதா... என்று கெஞ்சவேன் என்று மட்டும் நீ நினைக்காதே!'' என்றான் தீர்மானமாக. ''நான் என்ன செய்தாலும் இனி நீ கேட்கக் கூடாது.'' என்றான்.

அவளுக்கு ஆத்திரத்தில் உதடு நடுங்கியது. கண்கள் கலங்கின. அவன் அணைப்பில் இருந்து விலகி நின்றாள். அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்று ஆபீசில் இருந்து மாதவனுடைய பி.ஏ. வீட்டுக்கு வந்தாள்.

தேவி, ''நீங்க யாரு? எதுக்காக வந்தீங்க?''

''சாருடைய பி.ஏ. நான். வரச் சொன்னார். அதான் வந்தேன்.''

''அவர் சொன்னா வந்துடணுமா...? நீங்க போங்க. நான் சொல்லிக்கிறேன்.''

அதற்குள் மாதவன் வந்து, ''நீலு, மேலே வா...'' என்றான்.

அவள் போனதும் தேவி மாடிக்குப் போனாள். அவன் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பேசாமல் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏ...ங்...க... ஏங்...க...''

''நான் இப்ப ஏங்கிக்கிட்டுத்தானே இருக்கேன். யார் இல்லேனு சொன்னது. இதை நீ வேற சொல்லிக் காட்டணுமா...?''

''நான்... உங்களைக் கூப்பிட்டேன்...''

''தெரியுது, சொல்லு.''

''அவ எதுக்கு வீட்டுக்கு வந்தா...?''

''எவ?''

''அதான் இப்ப வந்திட்டுப் போறாளே...''

''அது என் சொந்த விசயம்.''

''அதுக்கு எதுக்கு பெட்ரூம் வரை வர வேண்டும்...?''

''ம்... பெட்ரூம்க்கு எதுக்கு வருவாங்க... அதுக்குத்தான்.''

''இல்லே... நீங்க சும்மா... சொல்றீங்க. நான் நம்ப மாட்டேன்.''



''நீ நம்பினா... என்ன. நம்பாட்டி எனக்கென்ன. இப்ப எதுக்கு வந்து டி.வி. பார்க்கிறதைக் கெடுக்கிறே...''

''இந்த மாதிரி படமா பார்த்துத்தான் இப்படிக் கெட்டுப் போயிட்டீங்க.''

''சரி, வா... நீயும் என்னுடன் வந்து பார்த்துக் கெட்டுப் போ...''

''நீங்க என்ன தான் சொன்னாலும் வர மாட்டேன்.''

அவன் சிரித்தான். ''இப்ப எதுக்காகச் சிரிக்கிறீங்க?'' என்றாள் சீற்றத்துடன்.

''இல்லே. நீ சொல்வதைக் கேட்கும் போது, எனக்கு வர்றேன்... வர்றேன், என்று. உன் உள் மனது சொல்லுது. ஆனால் உன் உதடு தான் வர மாட்டேன் என்று சொல்லுது. எங்கே இவனிடம் தோற்று விடுவோமோ... என்று, உன் மனம் நடுங்கிற்று. உன் கண்கள் என்னைப் பார்த்துக் கெஞ்சுது தேவி. நீ எனக்கு வேண்டும்,'' என்று.

''இல்லாததை எல்லாம், கற்பனை பண்ணிப் பேசாதீங்க. இப்ப வந்தவளை நீங்க...''

''தேவீ...'' என்று அதட்டினான். பின் குரலைத் தணித்துக் கொண்டு, ''அவள் என் நண்பனின் மனைவி. நீ இருக்கும் வரை என்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளா விட்டாலும், நான் அந்த மாதிரிப் போக மாட்டேன். புரியுதா...?''

அவள் குரலும் தணிந்து விட்டது. ''அவ வரும்போது, இந்த மாதிரிப் படம் பார்க்கலாமா...?''

''ஏன்...? அவ போன பின்னாடி படம் போட்டுப் பார்க்க முடியாதா...?''



# 13

இரண்டு மாதங்கள் இப்படியே ஓடின.

அன்று பகல் பதினொன்று இருக்கும். சமைத்துக் கொண்டிருந்தாள். போன் அடித்தது. இவள் எடுத்து, 'ஹலோ' என்றாள்.

மறுமுனையில் இருந்து, ''உங்க ஆபீசில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கு. ஆபீசில் உள்ள அத்தனை பேரும் காலி.''

தேவிக்குக் கை, காலெல்லாம் பதறியது. நிற்க முடியவில்லை. மாதவனுக்கு போன் பண்ணினாள். அவன் செல் ஆஃபில் இருந்தது. ஆபீசில் போன் பண்ணிக் கேட்டாள்.

''சார் முக்கியமான மீட்டிங்கில் இருப்பதால், போன் பண்ண முடியாது மேடம். மீட்டிங் முடிந்து வந்ததும் சொல்கிறேன்,'' என்றாள்.

இவ எப்போ சொல்வது. ஒரு ஆட்டோவைப் பிடித்து ஆபீசில் போய் இறங்கினாள். வேகமாக உள்ளே ஓடினாள். ''எங்கே மீட்டிங் நடக்குது?'' என்று கேட்டாள்.

''அடுத்த ஹாலில் நடக்குது. இப்ப நீங்க சாரைப் பார்க்க முடியாது,'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே.... தேவி அந்தக் கதவைத் திறந்து கொண்டு புயலெனச் சென்றாள்.

மாதவன் பேசிக் கொண்டிருந்தான். கதவு திறக்கும் சத்தம் கேட்டு அனைவரும் திரும்பினர்.



தேவி வேகமாகப் போய் மாதவனை இறுகக் கட்டிக் கொண்டு அழுதாள். ''வாங்க, இங்கிருந்து போயிடலாம். இங்கே வெடிகுண்டு இருக்காம்,'' என்று அழுதாள்.

மாதவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் அழுது கொண்டே சொன்னது. ''தேவி, என்ன இது. ஏன் இப்படி அழுகிறாய்?'' என்று கேட்டான்.

தேவி அவனை விடவில்லை ''இங்கு வெடிகுண்டு வைத்திருக்காங்களாம்.''

அனைவர் முகத்திலும் திகைப்பு. அதிர்ச்சி. மாதவன் அனைவரையும் பார்த்து, ''இவ என்னமோ பயந்திருக்கா... நீங்...க...'' என்று புன்னகை புரிந்தான். இடது கையால் மனைவியை அணைத்துக் கொண்டே.

பின் தேவியிடம், உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று விசாரித்தான்.

''எனக்கு போன் வந்தது.''

மற்றவர்கள், ''மாதவன், எதற்கும் போலீசுக்குச் சொல்லி விடுவோம்'' என்றனர்.

அவனும் 'சரி' என்று, அவன் பிரண்ட் ரமேஷிடம் தகவல் சொன்னான்.

ரமேஷ் சத்தமில்லாமல், ''ஆபீஸ் ஸ்டாப் எல்லோரையும் வெளியேற்றிவிடு, ''நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம்,'' என்றான்.

அதன் படியே எல்லோரும் வெளியேற்றப்பட்டனர்.

ரமேஷ். ''மாதவா... உன் ஒய்ஃபை முதலில் வீட்டுக்குக் கூட்டிப் போய்ச் சமாதானப்படுத்து,'' என்று கண்ணைச் சிமிட்டினான்.

மாதவன் காரை ஓட்டி வந்தான். தேவி அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

தேவியைக் கைப்பிடித்து மாடிக்குக் கூட்டிப் போனான். ''குண்டு வெடித்திருந்தால்...'' நடுங்கினாள்.

''அதான் இல்லையே... அப்புறம் ஏன்...'' அவள் பக்கத்தில் படுத்துக் கொண்டு, ஆதரவாக அணைத்துக் கொண்டான். அவள் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவள் தலையை வருடி விட்டான். கொஞ்சங் கொஞ்சமாக, அவளைத் தன் வசப்படுத்தினான். அவளும் அவனுக்கு ஈடு கொடுத்து, அவனுள் அடங்கினாள். இருவரும் எழுந்திருக்கவேயில்லை. மாலையானது. அப்போதும் அவனை விடவில்லை தேவி.

மாதவன், 'தேவீ...' என்றான். ஆழ்ந்த குரலில்.

''ம்.. ம்..'' என்றாள் முனகலாக...

''உனக்கு போன் பண்ணினவன் வாழ்க. அவன் நல்லா இருக்கணும். பொண்டாட்டியோட... இது மாதிரியே...''

தேவி அவன் மார்பில் இருக்கும் முடியைப் பற்களால் கடித்து இழுத்தாள். மாதவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''ஏன்டா... உனக்கும் இவ்வளவு ஆசை இருக்குதே... அப்புறம் ஏன் இந்த மாதிரி நடந்துக்கிட்டே...?''

அவள் பதில் சொல்லாமல், அவன் முகத்தில் தன் முகத்தை வைத்துத் தேய்த்தாள்.

''இன்று இப்படி எனக்குச் சுக்கிர தசை அடிக்கும் என்று, நான் நினைத்தே... பார்க்கலே.''

அவள் ரோஜாப் பூ முகம் மேலும் சிவந்தது.